

# கலைச்செல்வி

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# கலைச் செல்வி

(சிறு கதைகள்)

★

கி. வா. ஜகந்நாதன்

★

கிடைக்குமிடம் :

அமுத நிலையம் லிமிடெட்

91, மௌண்ட் ரோடு, தேனும்பேட்டை சென்னை-18.

(உரிமை பதிவு)

இரண்டாம் பதிப்பு
பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர்.

*Approved by the Text Book committee
For Nondetailed study vide consolidated list
Gazatte page 113 of Part. II
dated 22-5-51*

விலை ரூ. **1—4—0**

நேஷனல் ஆர்ட் பிரஸ், மதராஸ்—18

# உள்ளுறை


| | | | (பக்கம்) |
|---|---|---|---|
| 1. | கலைச் செல்வி | ... | 1 |
| 2. | குரங்கின் சுதந்தரம் | ... | 23 |
| 3. | கடன்காரன் | ... | 45 |
| 4. | தீபாவளி விருந்து | ... | 63 |
| 5. | புதிய படம் | ... | 74 |
| 6. | நழுவிய பழம் | ... | 97 |

# கலைச் செல்வி

## 1

ஆடரங்கில் என்றும் இல்லாத கூட்டம். கங்கை கொண்ட சோழபுரத்தில், அந்த நகரத்தை நிர்மாணம் செய்த ராஜேந்திர சோழன் காலத்தில்கூட அவ்வளவு கூட்டம் எப்போதாவது கூடியிருக்குமோ என்பது சந்தேகந்தான். குமாரகுலோத்துங்கன் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறான். மந்திரி பிரதானிகளும் அயல்நாட்டிலிருந்து வந்திருந்த பிரதானிகளும் கலைஞர்களும் கூடியிருந்தார்கள். மழலைச் சிலம்பினுடைய நடனம் அன்று நடக்க இருந்தது.

மழலைச்சிலம்பு பரதநாட்டியத்தில் இணையற்ற திறமை வாய்ந்தவள். ஆடல், பாடல், அழகு என்ற மூன்றும் அவளிடத்தில் அபரிமிதமாகப் பொருந்தியிருந்தன. கங்கைகொண்ட சோழேசுவரர் திருக்கோயிலைச் சார்ந்த மடவளாகத்தில் இருநூற்றுக்கு மேற்பட்ட கணிகைமார் இருந்தனர். பரதநாட்டியக் கலைக்கு இருப்பிடம் இவர்களே என்று சொல்லும்படி இருந்தது அவர்களுடைய திறமை. அவ்வளவு பேர்களிலும் மழலைச்சிலம்பு அல்லி மலர்களுக்கிடையே ஓங்கி நிற்கும் தாமரையைப் போல விளங்கினாள்.

சங்கீதம், நடனம், ஓவியம், காவியம் என்னும் கலைகளில் தன் உள்ளத்தைப் பறி கொடுத்தவன் சோழ மன்னன். போரின்றி அமைதியாக இருந்த காலம் அது. கலையின்பத்தில் ஆழ்ந்து தன்னை மறக்கும் நிலையை உடையவன் அரசன். அவனுடைய உள்ளத்துக்கு மழ

லைச்சிலம்பின் கலை எதிலும் இல்லாத இன்பத்தை அளித்தது.

மழலைச்சிலம்பின் தாய் மாணிக்கம் தளிப் பெண்டு களில் ஒருத்தி. அவள் பொற்கொடியைப் போன்ற மேனி யும் குயிலைப்போன்ற சாரீரமும் மானைப் போன்ற லாகவ மான காத்திரமும் உடையவள். முத்தின் வயிற்றில் ரத்தினம் பிறந்தது போல அந்தப் பேரழகிக்கு மகளாகப் பிறந்தவள் மழலைச்சிலம்பு; நாட்டியக் கலையிலும் சங்கீதத் திலும் மாணிக்கம் அத்தனை கணிகைமார்களுக்கும் தலைமை ஸ்தானம் வகிப்பவள்; குருஸ்தானம் என்றுகூடச் சொல்ல லாம். சோழ மன்னனுடைய அவைப் புலவர் புதிதாகப் பரமேசுவரன்மீது ஏதேனும் சாகித்தியம் பாடினால் அதற்கு அபிநயம் பிடிக்கும் மார்க்கத்தை அவள் சொல் லிக் கொடுப்பாள். சாஸ்திரத் தேர்ச்சிகூட அவளுக்கு இருந்தது.

தன் மகளை, இதுகாறும் கண்டும் கேட்டும் அறியாத நடனகலா ராணியாக ஆக்கிவிட வேண்டுமென்பது அவள் பேராசை. சிறிது சிறிதாக, ஒவ்வோரங்கமாக நகாசு செய்து ஒரு மூர்த்தியைச் சிருஷ்டிக்கும் கலைஞனைப்போல அவள் தன் மகளைக் கலைச்செல்வி ஆக்கிக்கொண்டு வந் தாள். அவள் விருப்பம் நிறைவேறிக்கொண்டு வந்தது. மழலைச்சிலம்பு ஆடல் பாடலால் யாரையும் மயக்கும் எல் லையை அடைந்தாள். சுவர்ண விக்கிரகம் போன்ற அவள் அரங்கிலே வந்து நின்று ஆடினால் தேவலோக அரம்பை என்று புராணங்களில் சொல்லுகிறார்களே, அவள் இப் படித்தான் இருக்கவேண்டுமென்று தோன்றும்.

கலாரஸிகனாகிய மன்னன் முதல் முதல் சிவபெரு மான் திருக்கோயிலில் அவளுடைய நடனத்தைக் கண்

டான். எத்தனையோ பேர்களின் ஆடலைப் பார்த்து இன்புற்ற அவனுக்கு மழலைச்சிலம்பின் நடனத்தில் எங்கும் காணாத பேரழகு புலப்பட்டது. நடனக் கலைக்காகவே படைக்கப்பட்ட அழகியோ அவள்? அவளுடைய ஒவ்வோர் அங்கமும் லயத்தில் லயிக்கிறதே. அவற்றின் அசைவிலே கலை அலைஅலையாகப் பொங்கிக் காண்போர் நெஞ்சைக் கவர்கிறதே. கலையைப்பற்றித் தெரியாதவனைக்கூட அடிமையாக்கி விடுகிறது.

அவள் ஆடலில் ஒரு முக்கியமான விசேஷம்: அவள் நடமிடும்பொழுது பார்ப்பவர்கள் உள்ளமெல்லாம் கலைமயமாகிவிடும். அவளுடைய அழகும் அங்க சோபிதமும் இன்னிசையும் சதியும் நடனத்தின் உறுப்புகளாக ஒன்றுபட்டுப் பூரணமான இன்பத்தை அளித்தன. அவற்றின் சமுதாய ஆனந்தத்தை, கூட்டு இன்பத்தைத்தான், நுகர முடியுமேயன்றி அவற்றை வேறு பிரித்துப் பார்க்க இயலாது. அவள் நடனம் செய்யும்போது அவள் அழகை மாத்திரம் பார்த்து ரவிப்பது முடியாத காரியம். நடன கலை பூரணமான நிலையில் கண்முன்னே உருவெடுத்து வந்ததாகத் தோன்றும். இன்னும் விளக்கமாகச் சொல்லப் போனால் அவள் ஆடும்போது காண்போர் உள்ளம் அந்த ஆட்டத்தில் இணைந்து தாளம் போடும்; லயித்து விடும். ஆடுபவள், பார்க்கிறவர்கள் எல்லோரும் ஒன்றுபட்ட அந்தச் சமயத்தில் அவள் அழகி, அவள் இனிய குரலையுடையவள் என்று வேறு பிரித்துப் பார்க்க வகை இல்லை. அவ்வளவு உயர்ந்தது அவள் கலை.

குமாரகுலோத்துங்கன் உள்ளத்தை அவள் பறித்துக் கொண்டாள். அவள் கலைதான் முதலில் அவனை இழுத்தது. ஆடல், பாடல், அழகு என்ற மூன்றும் இணைந்த

சோலையிலே அவன் ஈடுபட்டான். பின்பு ஒவ்வொன்றை யும் தனித்தனியே சிந்தித்துப் பார்க்கவும் தொடங்கினான். அழகும் தனியாக அவனை ஆட்கொண்டது. கலைப்பித்தன் ஆகையினால் மழலைச்சிலம்பினிடம் அவனுக்குண்டான அழகுக் காதல் அவளுடைய கலையின்பத்தை நுகர்வதைக் குறைக்கவில்லை.

அவளை மன்னன் முதலில் தெரிந்துகொண்ட பிறகு அடிக்கடி அவளுடைய நடனத்தைக் கண்டு இன்புறலா னான். கங்கைகொண்ட சோழபுரத்தில் முன்பெல்லாம் திருக்கோயிலில்தான் நாட்டியம் நடைபெறும். எப்பொழு தேனும் அரண்மனையில் நிகழ்வதுண்டு. இந்த மன்னனோ இரவும் பகலும் எந்த நேரமும் கலையின்பத்தில் மூழ்கிக் கிடப்பவன். காலமறிந்து சம்பிரதாயமறிந்து திருக்கோயி லில் நடனம் நிகழவேண்டும், கலைக்கு இப்படி வரம்பு கட்டக் கூடாது என்று எண்ணிய மன்னன், தனியாக ஓர் ஆடரங்கை நகரத்தில் அமைத்தான். அங்கே அடிக்கடி நாட்டியம் நடைபெற்றது. வேறு சிலரும் அங்கே நடிப் பது உண்டானாலும், பெரும்பாலும் மழலைச்சிலம்பே ஆடரங்கின் முக்கியமான விக்கிரகமானாள்.

அதோடு, அவள் ஈசுவரன் கோவிலுக்கே நடனம் செய்யப் போவதில்லை. அவள் தாய் மாத்திரம் போவாள். அரசன் அவளுடைய கலாவிலாசத்துக்குத் திருக்கோயில் தகுந்த இடமன்றென்று நினைத்தான். காரணம் அவனுக் குக் கடவுள் பக்தியைக் காட்டிலும் கலைப்பித்து விஞ்சி நின்றதுதான்.

சில காலத்திற்குள் மழலைச்சிலம்பு மன்னனுடைய பரிபூரணமான கருணைக்கு இலக்கானாள். அவனுடைய அந்தப்புர மகளிர் கூட்டத்தில் அவள் ஒருத்தியானாள்.

அவளுக்கென்று தனி மாளிகையை அரசன் அமைத்துத் தந்தான். அவள் அரசனுக்குக் காதலியானாள். அதனால் கலை நிகழ்ச்சிகளுக்குக் குறைவு வரவில்லை; மிகுதியாயின வென்றே சொல்லவேண்டும்.

சோழ மன்னனுக்குப் புதிதாக ஓர் ஆசை உண்டா யிற்று. சோழர் பரம்பரையில் வீரத்தாலும் புகழாலும் மிக்க மன்னர் சிலர் தங்கள் காலத்தில் புதிய ராஜதானியை அமைத்துக்கொண்டார்கள். விஜயாலயன் தஞ்சையை ராஜதானி நகரமாக்கினான்; ராஜேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தை நிருமித்து அதையே தலைநக ராக்கிக்கொண்டான். ஏன் அவனும் ஒரு புதிய தலை நகரை அமைத்துக்கொள்ளக்கூடாது? இந்த யோசனை அவன் உள்ளத்தில் தோன்றி வேர்விட்டுக் கிளைத்துப் படர்ந்து நின்றது. ராஜதானி நகரம் அமைத்துக்கொள்வது கூட அவ்வளவு முக்கியமன்று; அங்கே அற்புதமாக ஓர் அரண்மனையை மிகவும் விஸ்தாரமாக எழுப்ப வேண்டும். அதில் சிற்பமும் ஓவியமும் நிறைந்திருக்க வேண்டும். இசையும் கூத்தும் எப்போதும் நடைபெறுவதற்கு ஏற்ற அரங்குகள் இருக்கவேண்டும். எங்கே பார்த்தாலும் கந்தருவ மங்கையரும் மன்மதனும் ரதியும் கிளியும் குயி லும் கல்லிலும் வண்ணத்திலும் உருக்கொண்டு, பார்த்த கண் வாங்காதபடிச் செய்ய வேண்டும். இப்படியெல் லாம் கற்பனை செய்தான்.

சோழநாட்டுக்கு அதிபதியாகிய அவன் நினைத்தால் ஆகாதது உண்டோ? செல்வத்துக்குக் குறைவா? வேறு பொருள்களுக்குக் குறைவா? பூவுலகத்தில் சிறந்து விளங் கும் கலைஞர்களையெல்லாம் அழைத்துப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டம் போட்டான். முதலில், சிறந்த திறமை

வாய்ந்த சிற்பிகளையும் ஓவியர்களையும் நாடினான். சோழ நாட்டில் அந்தக் கலைகளில் சிறந்த பலர் இருந்தனர். அவர்கள் தலைநகருக்கு வந்தார்கள். சேர நாட்டிலிருந்தும் பாண்டி நாட்டிலிருந்தும் பலர் வந்தார்கள். கலிங்கம், தெலுங்கம், வங்கம், குச்சரம், மகாராஷ்டிரம் முதலிய நாடுகளிலிருந்துங்கூடக் கலைஞர்கள் வந்தார்கள். நகர நிர்மாணம் செய்வதற்கு வேண்டிய யோசனைகளை இன்னும் வெளிப்படையாக அவன் சொல்லவில்லை. கலைஞர்களுக்கு வேண்டிய உபசாரங்கள் தவறாமல் நடக்க ஏற்பாடு செய்தான்.

இந்த ஏற்பாட்டில் ஒன்று, மழலைச்சிலம்பின் நடனத்தை அவர்கள் கண்டு களிக்க வேண்டுமென்பது. மழலைச்சிலம்புக்கும் இதில் அளவற்ற உற்சாகம். பல தேசத்திலிருந்து வந்திருக்கும் சிறந்த கலைஞர்களுக்கு முன் நடித்தால் அவள் புகழ் எவ்வளவு தூரம் பரவும்! மன்னனுக்கோ, தன் அதிருஷ்டத்தை அவர்கள் கண்டு வியக்க வேண்டும் என்ற ஆசை.

இன்றுதான் அந்த நடனம் நடைபெறப் போகிறது. அதற்காகத்தான் இத்தனை கூட்டம்.

நடனம் ஆரம்பமாகிவிட்டது. வெளிநாட்டிலிருந்து வந்திருந்த சிற்பிகளும் ஓவியப் புலவர்களும் பிற கலைஞர்களும் மழலைச்சிலம்பைப்பற்றி முன்பே கேள்விப்பட்டிருக்கிறார்கள். அறுபத்துநாலு கலைகளும் கணிகையருக்குத் தெரியவேண்டுமென்று பழைய நூல்கள் சொல்லுகின்றன. அந்த இலக்கணம் கனவாய்ப் பழங்கதையாய்த்தான் இருக்கிறது. ஆனால் மழலைச்சிலம்பு ஒருத்தியே அதற்கு இலக்கியமானவள் என்று கேட்டிருக்கிறார்கள் அவர்கள்.

அரசன் தனக்கென்று அமைந்த சிங்காசனத்தில் வீற்றிருந்தான். தன் படைவீரர்களை அணிவகுத்து, அவர்களுடைய திண்டோளைக் கண்டு பூரித்து, "இவர்கள் நமக்கு வெற்றி வாங்கித் தருவார்கள்" என்று சேனைத் தலைவன் மகிழ்வான்; இங்கே அரசன் இந்தக் கலைவிழாவில் மழலைச் சிலம்பு தனக்கும் சோழநாட்டுக்கும் பரந்த புகழைத் தேடித் தரப் போகிறாள் என்ற பெருமிதத்தோடு வீற்றிருந்தான். நடனம் தொடங்கியது. முதலில் கூட்டத்தினர் அந்த ஆரம்பத்தை உணர்ந்தனர். பிறகு ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடக்க நடக்க அவர்கள் தம்மையே மறந்தார்கள்.

மிக அற்புதமாக ஆடினாள். என்றும் இல்லாத பேரழகோடு விளங்கினாள் அவள். அவள் தாய் பின்னிருந்து பாட்டுப் பாடினாள். வந்தவர்கள் எப்படி ரஸிக்கிறார்கள் என்பதைக் கவனித்து வந்த அரசன்கூட அந்தக் காரியத்தை மறந்து நடன எழிலிலே ஒன்றிப்போனான்.

நடனம் முடிந்தது. மன்னனைக் கலைஞர்கள் அணுகிப் புகழ்ந்த புகழ்ச்சிக்கு அளவுண்டா? முடிவுண்டா? அவ்வளவு சொல்லியும் சொல்லிவிட்ட திருப்தியை அவர்கள் அடையவில்லை. அரசன் என்றும் அடையாத இன்ப சாகரத்தில் மிதந்துகொண்டிருந்தான்.

நடனம் முடிந்ததும் மழலைச்சிலம்பும் அவள் தாயும் தங்கள் மாளிகைக்குச் சென்றார்கள். மன்னன் அந்த நடன சுந்தரியைச் சந்தித்தான். அவளும் அவனை ஆசையுடன் எதிர்பார்த்திருந்தாள். அவன் வரும்போதே குதித்தோடிச் சென்று எதிர்கொண்டழைத்தாள். காதலரும் கலை ரஸிகர்களுமாகிய அவர்கள் ஒருவரை ஒருவர் புகழ்ந்துகொண்டு மகிழ்ந்ததைப்பற்றிச் சொல்ல நமக்கு உரிமை எது? நம்முடைய ஊகம் எவ்வளவு தூரத்துக்குச்

சென்றாலும், அந்த நிலையை அளந்துவிட்டதாகச் சொல்ல முடியாது.

குதூகலத்தில் ஆழ்ந்த அரசன் அன்று தன் உள்ளக் கிடக்கையை மழலைச்சிலம்புக்கு விரிவாகத் தெரிவித்தான். கல்லாலே நிருமிக்கப் போகிற அரண்மனையைச் சொல்லாலே சித்திரித்தான். கேட்கக் கேட்க அவள் உள்ளம் பூரித்துப் போனாள்.

## 2

"அம்மா, சிலம்பு, ஆண்டவன் உனக்கு ஈடு எடுப்பில்லாத அழகைக் கொடுத்தான். அறிவைக் கொடுத்தான். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போல மகாராஜாவின் அன்பையும் அளித்தான். ஆனாலும் ஒன்று சொல்லுகிறேன், அம்மா; நீ கோபித்துக்கொள்ளாதே. இந்தத் தேசத்தில் நம் முன்னோர்கள் கலையை வளர்த்து வந்தார்கள். அந்தக் கலை நித்தியமான பொருள் என்று நினைத்தார்கள். கலைப் பொருள்கள் நித்திய சௌந்தரியத்தோடு விளங்கும்படிச் செய்தார்கள். அதற்கு முக்கியமான காரணம் அந்தக் கலை நித்தியப் பொருளோடு சம்பந்தமுடையதாக இருந்தது. கலைக்கு லட்சியம் கடவுள் என்ற அரிய உண்மையைக் கண்டுபிடித்தது இந்த நாடு. இசையும் கூத்தும், காவியமும் ஓவியமும் ஈசுவரார்ப்பணமாக இருக்கவேண்டுமென்று வைத்தார்கள். நம்மையே பார். கணிகையருடைய கலையையெல்லாம் கோயில்களோடு பிணைத்து வைத்தார்களே. மக்கள் வெறுங் கலையை மாத்திரம் நுகர்வதாக இருந்தால் அவர்களுடைய ஆசாபாசங்கள் அதற்குள் புகுந்துவிடும். அதனால் கலை அழுக்கேறுமே ஒழிய என்றும் தூய்மையோடு நிலவாது. கடவுளோடு தொடர்புடையதாகக் கலை இருந்தால், அதை அநுபவிக்

கும் மனிதன் ஒரு வரம்புக்குள் அடங்கி நிற்பான். நம் முன்னோர்கள் ஆடரங்கைத் தனியாக அமைக்கவில்லை. திருக்கோயில்தான் அவர்களுக்கு ஆடரங்காக இருந்தது. நேற்று வரையில் சோழ சாம்ராஜ்யத்தில் நடனபதியாகிய பரமேசுவரனையே நித்திய சபாபதியாக வைத்து நம் குலத்தினர் தம் கலைத் திறமையைக் காட்டி வந்தனர். அரசரும் அந்த முறைக்கு உறுதுணையாக இருந்தனர்.... ஆனால் இப்பொழுதோ !''

அசட்டையாகக் கேட்டு வந்த மழலைச்சிலம்பு விழித்துக்கொண்டாள். ''என்ன அம்மா சொல்லுகிறாய்? மகாராஜாவைக் குறை கூறுகிறாயா ?''

''அவரைக் குறைகூற நான் யார், அம்மா? உன்னைப் பற்றித்தான் சொல்லுகிறேன். பரம்பரை பரம்பரையாகச் சிவபிரான் திருச் சந்நிதானத்தின் முன் நம்முடைய விலையற்ற கலையை அர்ப்பணம் செய்து வருகிறோம். நான் இன்றும் அதைச் செய்து வருகிறேன். நீயோ கோவிலுக்குப் போவதையே விட்டுவிட்டாய். நமக்கெல்லாம் உண்மையான புருஷன் சர்வலோக சக்கரவர்த்தியாகிய நடராஜன் தான், அம்மா. நீயோ இப்போது அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டு விட்டாய். எல்லா வகையிலும் சிறந்து என்னையும் மீறிப் புகழ் பெறுவாய் என்று நினைத்து மகிழ்ந்தேன். இந்த விஷயத்தில் நீ தர்மத்தை மறந்தாய். ஆகவே அத்தனையும் விருதாவாயிற்று. நீ கலைகளை ஆராய்ந்திருக்கிறாய். யோசித்துப் பார். கடவுளை மறந்த கலை பிணம். நாம் பிணத்தைத் தழுவலாமா ?''

மழலைச்சிலம்பு சற்றே மௌனமாக இருந்தாள். பின் பெருமூச்சு விட்டாள். தாயின் வார்த்தைகளில் உண்மை இருப்பதை அவள் உணர்ந்தாள். அவளா அதற்குக் கார

ணம்? அரசனே தன்னை அப்படி இருக்க வேண்டுமென்று விரும்புகிறான்! தனக்காகவே தனியாக ஆடரங்கு அமைத்திருக்கிறான். இனி எழும்பப் போகும் மாநகரத்தில் பின்னும் பெரிய அழகிய அரங்கத்தை அமைக்கப் போகிறான்.—மன்னன், சொல்லாலே அரண்மனையைக் கட்டினானே, அதெல்லாம் அவள் ஞாபகத்துக்கு வந்தது. சிறிது நேரம் அந்த இனிய கற்பனையிலே உள்ளத்தை ஓடவிட்டாள்.

"என்ன யோசிக்கிறாய்? நான் இறந்துவிட்டால் என்னோடு இந்தக் கலா தர்மம் நின்றுவிட வேண்டியதுதானா? தெய்வ சமர்ப்பணமாகக் கலையை ஆக்குவதுதான் நமக்குரிய யாகம், யக்ஞம். என்னோடு அது அழிய வேண்டியதுதானா? நம்முடைய முன்னோர்கள் வழி வழியாக வளர்த்து வந்த கலையும் அதற்கு ஜீவனாகிய அதன் லட்சியமும் இனிமேல் நம் குடும்பத்தில் இருக்கப் போவதில்லையா?"—அவள் தாயின் குரலில் வேதனை தொனித்தது.

"என்னம்மா, மனசுக்கு வந்ததைப் பேசுகிறாய்?" என்ற சிலம்பின் கேள்வியிலே கொஞ்சம் துயரம் கலந்திருந்தது. காரணம், அப்போது அவள் செய்துகொண்டிருந்த இன்பக் கற்பனைக்கிடையே அவள் தாய், "நான் இறந்துவிட்டால்" என்று கூறிய சொல் இடி இடித்தாற்போல இருந்தது. இன்பத்திலே எய்ப்பின்றிப் பரந்து நீண்டு விரிந்த பிரபஞ்சத்திலே ஓடி உலவிய உள்ளத்தில் திடீரென்று ஒரு விரிசல் ஏற்பட்டது. அவளும் அறிவுடையவள்தானே? அந்தத் தாயின் மகள்தானே?

தாய் இறப்பதா?—அதை எண்ண அவளுக்குத் துணிவில்லை. ஆனாலும் அது உண்மைதானே? தாய் இறப்பது இருக்கட்டும். தானே இறந்தால்? அதுவும் பெரிதல்ல.

மகாராஜாவே இறந்துவிட்டால்? இந்த நினைப்பு அவள் உடம்பை ஓர் உலுக்கு உலுக்கியது.

"என்னம்மா நடுங்குகிறாய்?" என்றாள் தாய்.

'ஆம், மகாராஜா இறந்துபோனால், நம் கலை எங்கே நிற்கும்? இறவாத நடராஜாவைப் பகிஷ்கரித்த கலை ஆயிற்றே. அதுவும் இறந்துபோக வேண்டியதுதானே? அணு அணுவாக அறிவையும் ஜீவனையும் இணைத்து வளர்த்த கலை வீணாவதா!....' அவள் சிந்தனை தாய் எழுப்பிய மூல சூத்திரத்திற்கு இப்போது புத்துரை காணத் தொடங்கியது.

தாய் சொல்கிறாள்: "நான் மிகவும் கடுமையாக, நன்றியில்லாமல் பேசுகிறேன் என்று நினைக்காதே. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உண்மை உண்மைதான். உன் கலைக்கு நாயகனாக நீ கருதும் மகாராஜாவுக்கு ஏதாவது குறைபாடு நேர்ந்து உன் கலையை அநுபவிக்க முடியாமல் போய்விட்டது என்று வைத்துக்கொள். ஊழ்வினையை யாரம்மா கண்டார்கள்? யார் ஆயுசை யார் பிடித்துக் கொள்ள முடியும்? அப்போது உன் கலை...."

'இதென்ன, அம்மாவும் இதைச் சொல்கிறாளே!' சிலம்பு சிந்தனையில் தீவிரமாக ஆழ்ந்துவிட்டாள். உள்ளம் மெல்ல மெல்ல உருகியது. கண் கலங்கியது. நீர் கசிந்தது. சிறிது நேரம் அப்படி இருந்தாள்.

"நான் என்ன செய்யமுடியும், அம்மா?" என்று தழுதழுத்த குரலில் கேட்டாள் மழலைச்சிலம்பு.

"நீ அரசன் கருத்தை மாற்றினால் தர்மம் நிலைக்கும். மாற்றுவது கடினம் அல்ல."

"இல்லை, அம்மா; அவர் எவ்வளவோ எண்ணியிருக்கிறார். அவ்வளவும் உனக்குத் தெரிந்தால்...."

"எனக்குத் தெரிய வேண்டாம். உன்னளவில் அந்த ரகசியம் இருக்கட்டும். உனக்கு அந்த விஷயம் தெரிந்ததற்குமேலே நான் சொல்லும் இந்த ஒன்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். கலை கடவுளை லட்சியமாக உடையது."

"அப்படியானால்...."

"வேறு பேச்சுக்கு இடமில்லை. நீ முதலில் உன் கருத்தில் இந்தத் தத்துவத்தைப் பதித்துக்கொள். பிறகு அவர் உள்ளத்திலும் பதித்துவிடு. கடவுள் உனக்குத் துணை செய்வார்."

## 3

"கரும்பு ருசியென்று வேரோடு தின்னலாமா?"

"கண் திருஷ்டி ஐயா! கண் திருஷ்டி!"

"எந்தப் பாவியோ செய்த ஏவல்!"

இப்படியாக மழலைச்சிலம்புக்கு உடம்பு அசௌக்கியம் என்ற செய்தியைக் கேட்ட நகர மாந்தர் அதற்குக் காரணங்களை ஆராய்ந்துகொண்டிருந்தனர்: அரசன் திடுக்கிட்டான். அவளைப் போய்ப் பார்த்தான். அவள் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். அவள் உடம்பில் சிறிது ஜுரம் இருந்தது.

"சிலம்பு, என்ன இது? உன்னை மெல்லியல் என்பதை மறந்து அளவுக்கு மிஞ்சி உன் கலையை அநுபவித்தது தவறு என்று இப்போது எனக்குப் படுகிறது" என்றான் அரசன்.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. அலுப்பு அதிகம். உடம்பைக் கவனித்துக்கொள்ள வேண்டியது என் பொறுப்பு. அதை மறந்தேன்."

தேக அசௌக்கியத்திலிருந்து பேச்சு எங்கெங்கோ தாவியது. மெல்ல மன்னனுடைய ராஜதானி நிர்மாண சம்பந்தமாகச் சென்றது. மன்னன் பேச்சினிடையே ஒன்று சொல்லலானன்; "அயல் நாட்டிலிருந்து வந்தவர்களுள் மிகவும் அற்புதமான சித்திரம் வரையும் ஓவியர் ஒருவர் இருக்கிறார். அவர் என் உருவத்தை ஓவியமாக எழுத ஆரம்பித்திருக்கிறார். அதற்கு முன் என் விருப்பம் ஒன்றை நிறைவேற்றித் தரும்படி சொன்னேன். அது என்ன, உனக்குத் தெரியுமா?"

அவள் ஊகித்துக்கொண்டாள். "அடிமையின் மேல் மகாராஜாவுக்குள்ள பெருங்கருணையாக இருக்கலாம்."

"அதுதான், அதுதான். நடனமிடும் கோலத்தில் உன் உருவத்தை முதலில் வரையச் சொல்லியிருக்கிறேன்."

மழலைச்சிலம்பு பிரமித்தவளைப்போல் சற்றுச் சும்மா இருந்தாள். பிறகு, "மகாராஜாவிடம் ஒரு விண்ணப்பம்: விநயம் காரணமாக மகாராஜாவின் திருவுள்ளத்துக்கு விரோதமாகச் சொல்ல எனக்கு உரிமையில்லை. அடிமையின் நடனக் கோலத்தை அடிமை விரும்புகிற மாதிரி போட்டால் நன்றாக இருக்கும். ஓவியரை அடியாள் பார்க்கமுடிந்தால் என் கருத்தைச் சொல்வேன்" என்றாள்.

"அப்படியே செய்யலாம். ஓவியரை உன்னிடம் அனுப்புகிறேன்" என்று மன்னன் சொன்னான்.

* * *

ஓவியர் வந்தார். அவள் தன் கருத்தைக் கூறினாள். அவர் அப்படியே படத்தை எழுதத் தொடங்கினார். விரைவிலே வரைந்து முடித்து மன்னனிடம் அளித்தார். அரசன் எதிர்பார்த்த காட்சி வேறு, இருந்தது வேறு. ஓவியர் மழலைச்சிலம்பை நடனக் கோலத்தில்தான் சித்திரித்திருந்தார். ஆனால் அவள் நடனம் செய்த இடம் ஆடரங்கு அல்ல; எதிரே மன்னன் உட்கார்ந்திருக்கவில்லை. ஒரு கோயிலில் சிவபிரானுடைய சந்நிதானத்தில் அவள் ஆடுகிறாள். எதிரே நடராஜர். அவர் சந்நிதியில் நடனராணியாகிய அவள். பார்த்தான் அரசன். அவனுக்கு ஒரு விதத்தில் ஏமாற்றந்தான். ஆனாலும் அதை அவனுக்கு உண்டான வியப்பு ஆட்கொண்டது. அவள் கருத்து என்ன?—அவன் சிந்தனை ஓடியது. அவளையே கேட்டுவிடலாமே என்று முடிவு செய்தான்.

மன்னனை மழலைச்சிலம்பு சந்தித்தாள். படத்தைக் காட்டினான் அரசன். ஆவலோடு அதை வாங்கிப் பார்த்தாள் அவள். அப்போது அவள் அகக் கண்ணில் அவள் தாய் நின்றாள்; "வாழ்க்கையில் இதைச் செய்" என்று சொல்லிக்கொண்டு நின்றாள்.

"என்ன யோசிக்கிறாய்? உன் இஷ்டப்படி அமைந்திருக்கிறதா?"

"உம்!" என்று தலையை அசைத்தாள்.

"இப்படிப் போடச் சொன்னாயே; உன் கருத்து என்ன?"

"படத்திலாவது...."

"அப்படியென்றால்?"

"மகாராஜா, க்ஷமிக்க வேண்டும். சோழ வம்சத்தில் வந்த தங்களுக்குப் படத்தின் கருத்தை விளக்கும் அதிகப் பிரசங்கித்தனத்தைச் செய்ய எனக்குத் துணிவில்லை."

"சொல்லேன். கோயிற் கணிகையாக இருக்கத்தான் உனக்கு விருப்பமா?"

"அப்படி அன்று. கலையைக் கலாநாதனுக்கு முன்னே சமர்ப்பிக்கும் தொழில் அது."

"கலைக்குச் சிறை போட்டதாகாதா?"

"கால எல்லையும் இட எல்லையும் உடைய ஆடரங்கமும் அதில் வந்து ரஸிப்பவர்களும் எல்லைக்குள் அகப்பட்டவர்கள். அவர்களிடம் வரும் கலையும் எல்லைக்கு உட்பட்டுச் சிறைப்படுவது அங்கேதான். எல்லையற்ற பரம்பொருளின் முன்னே கலை தன் எல்லையில்லாத விரிவோடு விளங்குகிறது. கலை கலையாக நிற்கிறது. உலக நினைவாகிய அழுக்கு அங்கே இல்லை."

"என்ன சிலம்பு, நீ வேதாந்தம் பேசுகிறாயே!"

"உண்மைக் கலைஞனுக்கு வேதாந்தம் தூரமல்ல. கலைஞனும் வேதாந்தியும் ஒரே மண்தான்."

"உன் கலையை நான் ரஸிக்கக் கூடாது என்று சொல்லுகிறாயோ?"

"மகாராஜா அடியாளை அபசாரம் செய்தவளாக்கக் கூடாது. கலையை ரஸிக்க யாருக்கும் உரிமை உண்டு. ஆண்டவன் சந்நிதானத்திலே வைத்து எல்லோரும் அநுபவிக்கலாம்; ஆண்டவன் அருள் நினைவோடு அநுபவிக்கலாம்."

மன்னன் யோசனையுள் ஆழ்ந்தான்.

"சோழ சாம்ராஜ்யத்தில் கலைக் கிருகங்களாகக் கோயில்கள் இருக்கின்றன. அரசர்கள் தங்கள் புகழைக்

கோயில்களின் மூலம் பெருக்கிக்கொண்டனர். எல்லாக் கலையும் கடவுள் சந்நிதானத்தே ஒன்றுபட்டன. அரசர்களும் தம் செல்வத்தையும் ஆற்றலையும் அவனைச் சிங்காரிப்பதிலே ஈடுபடுத்தினார்கள். தங்கள் அரண்மனையிலே சிற்பக் கலையை அமைக்காமல் திருக்கோயிலிலே அமைத்தார்கள். அவர்கள் வாழ்ந்த அரண்மனையை யார் அறிவார்கள்? அவர்கள் அன்பினால் நிருமித்த கோயில்களே இன்று உள்ளன; இனியும் வானைத் தொட்டுக்கொண்டு நிற்கும் கலைக்கு இடம் கோயிலேயன்றி...."

திடீரென்று, "அரண்மனை அல்ல" என்று வாக்கியத்தை முடித்தான் அரசன்.

மழலைச்சிலம்பின் வார்த்தைகள் அவன் காதில் விழ விழ, அவன் இதற்குமுன் கட்டிய கற்பனைக் கட்டடத்தை ஒவ்வொரு கல்லாகப் பெயர்த்தெறிந்தான். 'ஆம். ராஜராஜன் வாழ்ந்த அரண்மனை இப்போது எங்கே? அவன் கட்டிய கோயிலல்லவா அவன் பெயரைக் காக்கிறது?' என்று எண்ணினான். 'நாம் அகங்காரத்தால் மோசம் போனோம்!' என்று அவனுக்குப் பட்டது. பழையாற்றுக்கு அருகில் ராஜதானி நகரம் அமைத்து அதன் நடுவிலே பிரம்மாண்டமான அரண்மனையைக் கட்ட அவன் திட்டம் போட்டிருந்தான்.

கலைக்கு இருப்பிடமாகப் பெரிய அரண்மனையைத் தானா கட்டவேண்டும்? தஞ்சையில் ராஜராஜன் பிருகதீசுவரர் ஆலயத்தை அல்லவா கட்டினான்? அதன் சிற்பச் செல்வம் இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு நித்தியயௌவனத்தோடு விளங்கப்போகிறது! தான் இருக்கிற ராஜதானியாகிய கங்கைகொண்ட சோழபுரத்தில்தான் என்ன? கலைச் சிறப்பைக் கங்கைகொண்ட சோழன் எங்கே

தொகுத்து வைத்தான்? கங்கைகொண்ட சோழேசுவரர் ஆலயத்தில் அல்லவா? முன்னோர்கள் சிற்பத்தையும், நாட்டியத்தையும், ஓவியத்தையும் ஆலயத்தில் ஈசுவரார்ப் பணமாக வைத்ததனாலல்லவா அவை அழியாமல் இருக்கின்றன? அது மட்டுமா? ஜனங்கள் ஆலயத்தில் உள்ள பரமேசுவரனோடு சார்த்திப் பயபக்தியோடு அவற்றை ரஸிக்கின்றனர். அரண்மனையில் இருந்தால் எல்லோரும் வந்து பார்த்து ரஸிப்பார்களா? தஞ்சையில் ராஜராஜன் பெயரைக் காப்பாற்றுவது அவன் அரண்மனையா? அவன் கட்டிய ராஜராஜேசுவரம் என்ற கோயில் அல்லவா?........

நினைவு இப்படியெல்லாம் படரவே, அகக் கண்ணிலே வெகு வேகமாகக் காட்சிகள் ஓடின. ஒரு மாளிகையில் முடி தரித்த மன்னன் ஒருவன் இருக்கிறான். அவன் தான் ராஜராஜன். இதோ மாளிகை இடிந்து தரை மட்டமாகிறது. ராஜராஜன் ஒரு பெரிய கோயிலின் கோபுரத்தின் மேல் பறந்து சென்று ஒட்டிக் கொள்கிறான். இதோ ராஜேந்திரன்; அவன் மாளிகை. அது விழுகிறது; அவன் அப்படியே தேவனாக ஒரு பிரம்மாண்டமான கோவிலின் கோபுரத்தில் சேர்கிறான்.—இப்படி ஒருவர் பின் ஒருவராகப் பல மன்னர்கள் போவதைக் காண்கிறான்.

அவன் உள்ளத்தில் இந்த எண்ணச் சுழலும் காட்சிச் சுழலும் பெரிய புயலைக் கிளப்பி விட்டன. தன் நினைவு மெல்ல வருகிறது. "நான்-இந்த மன்னர் வரிசையில் வந்த நான்-இடியும் மாளிகையில் கலையை வைத்துக் கொலை செய்யத் துணிகிறேனே! சே! தவறு...." கண், முன்னே உள்ள மழலைச்சிலம்பைப் பார்க்கிறது. அவள் அவன் கண்ணுக்குச் சர்வாங்க சுந்தரியாகப் பட்டாள்; ஆனால் மழலைச்சிலம்பாக அல்ல; யாரோ தெய்வமகள் ஒருத்தி

நிற்பதாகத் தெரிந்தது. அவள் கையில் வைத்திருந்த படத்தை வாங்கினான். கண்களில் ஒத்திக்கொண்டான். மறுபடியும் அவன் யோசனையில் ஆழ்ந்தான்.

திடீரென்று மன்னன் ஏதோ ஒரு புதிய வேகத்தில் பேசினான்: "என் கண் திறந்துவிட்டது. நான் உன்னை மறுமுறை சந்திக்கும்போது உண்மை விளங்கும். சில காலம் நான் உன்னைப் பாராமல் இருப்பேன். அதைத் தவறாக நினையாதே. மற்றொரு விஷயம்: நீ இன்று முதலே கங்கைகொண்ட சோழபுரேசர் திருக்கோயிலுக்குப் போய் உன் விருப்பப்படி நடனம் செய்யலாம்."

"ஹா!"

மன்னன் அதற்குள் சென்றுவிட்டான்.

## 4

இதென்ன ஆச்சரியம்! மந்திரிமார்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அரண்மனை கட்ட வேண்டுமென்ற திட்டத்தை அடியோடு மாற்றி, புதிய திருக்கோயில் ஒன்றைப் பழையாற்றுக்கருகில் ஓரிடத்தில் கட்ட அல்லவா அரசன் ஏற்பாடு செய்கிறான்? வந்த கலைஞர்கள் அவ்வளவு பேருக்கும் அது சம்பந்தமாக வேலை கொடுத்துவிட்டான். பழையாற்றுத் திருமாளிகையில் போய் வசிக்கத் தொடங்கினான்.

"மழலைச்சிலம்பை விட்டுப் பிரிந்து இவர் எப்படி இருக்கிறார்?" என்று யாவரும் ஆச்சரியப்பட்டனர்.

இந்திரஜாலம்போல, வெறுங் கட்டாந்தரையாக இருந்த இடத்தில் திருக்கோயில் வெகு வேகமாக எழும்பியது. மிகவும் விரிந்த அமைப்பு. தஞ்சை ராஜராஜேசுவரத்தையும், கங்கைகொண்ட சோழேச்சுரத்தையும்

விட விரிவானது. தூண்களெல்லாம் புராணத்தைச் சிற்ப உருவில் காட்டின. அரசன் இரவு பகல் பாராமல் அந்தக் கோவில் உருவாவதில் கவனம் செலுத்திவந்தான். இசையை மறந்தான்; நாட்டியத்தை மறந்தான்; மழலைச் சிலம்பையே மறந்துவிட்டானே!

கோயில் மெல்ல மெல்ல உருவாகி நிறைவேறி விட்டது. கண்கொள்ளாச் சிற்ப எழிலும் ஆவரண அமைப்பும் உடைய அதனைக் கண்டவர்கள், "இந்த அரசன் தன் முன்னோர் புகழையெல்லாம் அமிழ்த்தி மேலே போய் விட்டான்" என்றார்கள்.

விக்கிரகங்களும் சித்தமாயின. கும்பாபிஷேகத்துக்கு இன்னும் சில நாட்கள் இருந்தன.

அரசன் கங்கைகொண்டசோழபுரம் வந்தான். நேரே மழலைச்சிலம்பின் மாளிகைக்குப் போனான். அவள் அவனைக் காணாமல் அலமந்திருந்தாள். அவன் இப்போது பெரிய ஆலயத்தை அற்புதமாகச் சமைக்கிறானென்ற செய்தி அவளுக்கு அவன்பால் இருந்த அன்பை எத்தனையோ மடங்கு உயர்த்திவிட்டது.

அரசனைக் கண்டவுடன் நீர் தேங்கிய கண்களுடன், "மகாராஜா, அடிமையை இப்படி மறந்துவிடலாமா?" என்றாள். அவள் நாக்குத் தழுதழுத்தது.

"அன்பே, நான் உன்னை மறக்க முடியுமா? மறந்தேனென்றா சொல்கிறாய்?"

"ஆலயத்தை அற்புதமாக நிறைவேற்றியதாகக் கேள்விப்படுகிறேன். இந்த நாடு செய்த பாக்கியம்!" என்றாள் சிலம்பு.

"பிரியே, நீ காதால் கேட்டதைக் கண்ணால் பார்க்க வேண்டாமா? அதற்காகத்தான் இன்று வந்தேன். வா, போகலாம். இன்னும் பல வேலைகள் இருக்கின்றன."

அரசன் மழலைச்சிலம்பை அழைத்துச் சென்றான். கும்பகோணத்துக்கு மேற்கே பழையாற்றுக்கு அருகில் கோயில் எழும்பியிருந்தது. நெடுந்தூரத்திலேயே இருவரும் சிவிகையிலிருந்து இறங்கினார்கள். கோபுரத்தைக் கண்ட அளவிலே மழலைச்சிலம்பிற்கு மயிர்க் கூச்சு உண்டாயிற்று. நெருங்கி வரவரக் கோவிலின் விரிவை அவள் தன் கண்களால் அளந்தாள்.

"இத்தனை அழகாகக் கட்டிமுடிக்க மகாராஜாவுக்குத் திருவருள்தான் துணையாக இருந்திருக்கிறது" என்று பொங்கிவரும் உணர்ச்சிப் பெருக்கோடு சொன்னாள் மழலைச்சிலம்பு.

"திருவருளுக்கும் மூலகாரணம் ஒரு திருவின் அருள்" என்றான் அரசன். அவள் புன்னகை பூத்தாள்.

ஆலயத்துக்குள் நுழைந்தார்கள். ஒவ்வொரு பகுதியாக அரசன் காட்டிக்கொண்டு வந்தான். "இந்த மண்டபத்துக்கு என் தந்தையார் பட்டப் பெயர்களுள் ஒன்றை வைத்திருக்கிறேன். ராஜகம்பீரன் திருமண்டபம் என்று பெயர். அதைக் கல்லிலே பொறித்திருக்கிறார்கள், பார்!"

"மறந்துவிட்டேனே; இந்தக் கோயிலுக்குக் குலோத்துங்க சோழேச்சுரம் என்பதுதானே பெயர்?" என்று கேட்டாள் அவள்.

"இல்லை; என் தந்தையார் பெயரோடுதான் இது வழங்கும். ஆம், ராஜராஜேசுவரம் என்பதுதான் இதன் பெயர்."

அவளுக்கு உண்டான பிரமிப்பிலே அவளால் பேச முடியவில்லை. அரசன் எவ்வளவு தூரம் தன் அகங்காரத்தைத் துடைத்துவிட்டானென்பதை அது காட்டியது.

இன்னும் உள்ளே நுழைந்தார்கள். ஒவ்வொரு சந்நிதியையும் காட்டிக்கொண்டே வந்தான் அரசன்.

"இந்த இடந்தான் எனக்குப் பரிபூரணமான திருப்தியை அளிக்கும் இடம்" என்று சொல்லிக்கொண்டே அம்பிகை சந்நிதியின் முன் மண்டபத்துக்கு வந்தான். எதிரே ஓரிடத்தில் ஒரு சிலையுருவத்தைத் திரைச்சீலையிட்டு மறைத்திருந்தார்கள். "இந்தக் கோவிலுக்கு மூலகாரணமான மூர்த்தியை இங்கே காணலாம்" என்றான் அரசன்.

" எங்கே ?"

"சற்றுப் பொறு. உன்னை நீ சித்திரத்தில் வரையச் செய்தாயே, அதிலிருந்து உன் விருப்பம் தெரிந்தது. தெய்வத்துக்குக் கலையை அர்ப்பணம் செய்வதுதானே உன் விருப்பம்?"

அவள் தலையை அசைத்தாள்; "இதெல்லாம் இப்போது எதற்கு? என்னை இந்தத் திருக்கோவிற் பணியில் ஈடுபடுத்துவதாகத் தேவரீர் எண்ணியிருப்பது போலத் தோன்றுகிறது! அப்படியானால் என் பாக்கியம்!"

"ஆம்; அதுமட்டும் அன்று. இந்தச் சந்நிதி உள்ளவரையில் நீ இங்கே இருப்பாய் !"

மன்னன் சமிக்ஞை செய்தபடி அங்கே ஒருவன் வந்து எதிரே இருந்த திரைச் சீலையை விலக்கினான். துவாரபாலிகை; அற்புதமான சௌந்தரியத்தையுடைய ஒரு மடமங்கையே உயிரோடு வந்து நிற்பதுபோல அந்த உருவம் நின்றது. மழலைச்சிலம்பு கண்களை அகல விரித்துப்

பார்த்தாள். மேலுங் கீழும் பார்த்தாள். அதன் முகத்தில் அவள் தன் முகத்தைக் கண்டாள். அந்த உருவமே தன்னைப்போல இருந்தது. 'இது என்ன பிரமையா? உண்மையா?' விளங்கவில்லை.

"மகாராஜா, இந்த உருவம்........"

"சாக்ஷாத் மழலைச்சிலம்பு மகாதேவியின் உருவந் தான். என் அகங்காரத்தைப் போக்கிக் கலைத் தத்து வத்தை உணர்த்திக் கண் திறக்கச் செய்து இந்த ஆலயம் எழும்ப அடியிட்ட இந்தக் கலைச் செல்வியினுடையதுதான். இந்த ஆலயம் உள்ள அளவும் அவள் அழகு இந்த உருவத் தில் இருக்கும். கடவுளின் சந்நிதானத்தில் அவள் நிரந் தரமான சேவை செய்ய வேண்டுமென்பதை இந்தப் பேதை இதுகாறும் அறியவில்லை. இப்போது அறிந்து கொண்டேன்."

"ஹா! என்ன!........!"

அவள் மூர்ச்சையாகிவிட்டாள்.

குறிப்பு: கும்பகோணத்துக்கு அருகில் உள்ள தாராசுரம் என்ற இடத்தில் மூன்றும் குலோத்துங்கனால் கட்டப்பட்ட பிரம்மாண்டமான கோவில் இருக்கிறது. அவன் தந்தையாகிய இரண்டாம் ராஜராஜன் பேரால் அமைந்தது அவ்வாலயம். ராஜராஜேசுவரம் என்பதே சிதைந்து தாராசுரம் என வழங்கு கிறது. அக்கோயிலில் உள்ள மிக அற்புதமான துவாரபாலிகை யின் விக்கிரகம் ஒன்றைக் கண்டு சொக்கிப் போனேன். அந்த உருவத்தின் நினைப்பிலே படர்ந்த கற்பனைதான் இந்தக் கதை. சரித்திரத்திற்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை என்பதைச் சொல்லிவிடுவது என் கடமை.

# குரங்கின் சுதந்தரம்

## 1

குரங்கனூர்க் கிராமத்தில் குரங்காட்டி குப்பன் ஒரு குடி. கரடிக்காரக் கறுப்பன் ஒரு பிரஜை. வண்ணான் முத்து ஒரு குடிசைக்காரன். இவர்களுக்குமேல் சிறிது உயர்ந்த அந்தஸ்தில் வாழ்கிறவன் சார்ட்டுக்காரச் சந்தா சாகிபு. பக்கத்தில் வடக்கே பத்து மைல் தூரத்தில் ஒரு பட்டணமும் தெற்கே அஞ்சு மைலில் ஒரு பெரிய ஊரும் இருந்தன. இந்த நாலு தொழிலாளிகளுக்கும் அந்தப் பட்டணங்களிலும் சுற்றுவட்டக் கிராமங்களிலும் அவரவர்கள் உழைப்புக்குத் தகுந்தபடி ஜீவனம் நடந்து வந்தது. நான்கு பேரும் ஒரு விஷயத்தில் ஒரே மாதிரி உள்ளம் படைத்தவர்கள். தங்களுடைய ஜீவனத்துக்குத் துணையாக உள்ள ஜீவன்களிடத்தில் எல்லோருக்கும் பிரியம் அதிகம். குரங்காட்டி குப்பன் தன் குரங்கின்மேல் இருக்கும் பிரியத்தை வெளிப்படையாகக் காட்டாவிட்டாலும் அவனுக்கு உள்ளூறப் பிரியம் இருக்கத்தான் இருந்தது. வண்ணான் முத்து தன் கழுதையை அடித்தால் ஒன்று இரண்டு அடியோடு நிறுத்திக்கொள்வான். "இந்தக் கழுதைச் சாதிக்குப் பூசை இல்லாட்டிச் சரியா வராதுங்க" என்பது அவன் சித்தாந்தம். அதற்குத் தீனி எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அடியும் அவசியம் என்பது அவன் அநுபவ ஞானம். கரடிக்காரக் கறுப்பன் மகா சாது. அவனைக் காட்டிலும் அந்தக் கரடி பரம சாது. ஆகவே சாதுவுக்கும் சாதுவுக்கும் சரியாகப் பொருத்தம் ஏற்பட்டு விட்டது. சந்தா சாகிபு தன் குதிரையைக் கண்ணைப்

போலப் பாதுகாத்து வந்தான். ஒரு கல்யாண ஊர்வலத்தில் அது சம்பாதிக்கிறதை வைத்துக்கொண்டு அவன் ஒரு மாதம் தள்ளுவானே! அதைத் தேய்க்கிறதற்கு ஒரு வெட்டியானைத் தனியே அமர்த்தியிருந்தான். கொள்ளிலோ புல்லிலோ அதற்குக் குறை வைக்கிறதே இல்லை. அல்லா அவனுக்குக் குழந்தை குட்டியைக் கொடுக்கவில்லை; ஆனால் குதிரையைக் கொடுத்திருந்தார். ஆகையால் அதைக் குழந்தையைப் போலவே பாதுகாத்து வந்தான்.

* * *

இந்தப் பீடிகைக்கும் நமது கதைக்கும் நேரடியான சம்பந்தம் ஒன்றும் இல்லை. குரங்காட்டி குப்பனோ, கரடிக்காரக் கறுப்பனோ நமக்குப் பிரதானம் அல்ல. நம்முடைய கதா நாயகர்கள் ராமாயணத்தில் வரும் ராம லக்ஷ்மண பரத சத்துருக்னர்களைப் போல நான்குபேர்; நான்கு பிராணிகள்; குரங்கு, கரடி, கழுதை, குதிரை ஆகிய இந்த நான்குமே நம்முடைய கதையை ஓடச் செய்யும் அற்புத விக்கிரகங்கள். இந்த நான்கு பிராணிகளிலும் குரங்கப்பன்தான் மிகவும் முக்கியம். ராமாயணத்தில் ஆஞ்சநேயர் இல்லாவிட்டால் ஆரணிய காண்டத்தோடு கதை நின்றுவிட வேண்டியதுதானே? நம்முடைய குரங்குப்பிரானே கதையின் ஆரம்ப முதல் தன் லீலா விநோதங்களைக் காட்டுகிறான்.

* * *

குரங்குக்கு வெளியிலே பிச்சை வாங்கின நேரம் போக, அநேகமாகப் பிற்பகலிலும் சாயங்காலத்திலும் ஊர் சுற்றுவதுதான் வேலை. குப்பன் அதை அவிழ்த்து விட்டுவிடுவான். தன் வீட்டிலேயே பிறந்த குட்டி ஆகை

யால் அது வேறு எங்கும் போகாது என்று நம்பித்தான் அதை விடுவான். குரங்குக்கும் குரங்கனுரும் பக்கத்து ஊர்களும் அல்லாமல் வேறு உலகமே இல்லை.

இப்படி இருக்கையில் ஏதோ ஒரு காட்டுக் குரங்கு அந்த ஊருக்கு வந்துசேர்ந்தது. அது பெண். நம்முடைய குரங்கு ஆண். இயற்கையின் சக்தி அந்த இரண்டையும் சிறிதுபோது ஒன்று சேர்த்தது. "என் ஆசை நாயகரே, நீங்கள் காட்டுக்கு வந்துவிடுங்கள். வேண்டிய அளவுக்குக் கனியும் காயும் தின்று உல்லாசமாக வாழ்வோம். சுதந்தர ராஜ்யம் அது. இங்கே யஜமானன் கோல் ஆட நாமும் ஆடுகிறோம். இதைக்காட்டிலும் கேவலமான வாழ்க்கை வேறு இல்லை. இப்போதே புறப்படுங்கள், போகலாம். உங்களுடைய சௌந்தரியம் முழுவதும் ஒரு பிடியரிசிக்குக் கரணம் போடுவதற்காகவா ஏற்பட்டது? உங்களைப் போன்றவர் எங்கள் அரண்ய ராஜ்யத்தில் இருந்தால் நூறு கன்னிகைகள் சூழ இருந்து பல்லை இளித்துக்கொண்டு நிற்பார்களே! வாருங்கள். போகலாம்" என்று அந்தப் பெண் குரங்கு இதற்கு உபதேசம் செய்தது. காட்டில் உள்ள சுதந்தர வாழ்க்கையின் இன்பங்களையும், காட்டு வளப்பத்தையும், குரங்கினங்கள் கூடிக் கோலாகலமாக வாழும் விதத்தையும் எடுத்துச் சொல்லி இந்தக் குரங்கின் மூளையில் ஒரு மயக்கத்தை உண்டாக்கிவிட்டது. அந்தப் பெண் குரங்கின்மேல் உண்டான மோகத்தைக் காட்டிலும் காட்டு வாழ்க்கையின்மேல் அதிக மோகம் உண்டாயிற்று இதற்கு. ஆனால் உடனே அந்தக் காட்டுக்குப் போகத் துணிவு உண்டாகவில்லை. என்னதான் ஒரே ஜாதியாக இருந்தாலும் அந்தக் குரங்கை நம்பலாமா? அப்போதைக்கு ஒருவிதமாக நிதானித்துக்கொண்டு ஊரிலே தங்கி

விட்டது. பெண் குரங்கோ அந்த ஒரு நாளிலே அநுபவித்த இன்பத்தோடு தன் காட்டைத் தேடிப் போய்விட்டது.

ஆனால் அது இந்தக் குரங்கின் உள்ளத்திலே மூட்டிய நெருப்பு வரவரப் பயங்கரமான சொரூபத்தை எடுக்கலாயிற்று. குப்பனுடைய அன்பு குரங்குக்குத் தெரியவில்லை. தன்னை வீணாக ஆட்டி அலைத்துச் சிரமப்படுத்துகிறான் என்ற எண்ணமே தலையெடுத்தது.

ஒரு நாள் மாலை தன் உடம்பைச் சொறிந்து கொடுத்துக்கொண்டே யோசனையில் ஆழ்ந்திருந்தது குரங்கு. அன்று காலையில் வழக்கப்படி லங்கையைத் தாண்டாமையால் குப்பனிடத்திலிருந்து மெதுவாக ஓர் அடி கிடைத்தது அதற்கு. அதை நினைத்தபொழுது குரங்குக்கு மீட்டும் காட்டு வாழ்க்கையினிடம் மோகம் தலைகாட்டியது. பெண் குரங்கின் உபதேசங்கள் அத்தனையையும் அது நினைவுக்குக் கொண்டுவந்தது. "சரி, இனிமேல் நாம் விடுதலையைத் தேட வேண்டியதுதான்" என்ற தீர்மானத்துக்கு வந்தது.

ஒரே கிராமத்தில் கரடியும் கழுதையும் அன்னியோன்னியமாக இருந்தமையால் அதனோடு பழகிவந்தன. எப்போதாவது குதிரை லாயத்துக்கும் சென்று குரங்கு க்ஷேமம் விசாரித்து வருவதுண்டு.

இப்போது குரங்கின் மூளையில் லோகோத்தாரகமான ஞானம் ஒன்று உதயமாயிற்று. 'நாம் இந்த அடிமை வாழ்க்கையை உதறித் தள்ளிவிட்டு விடுதலைபெற நினைப்பது சரிதான். நம்முடைய சகோதரர்களான கழுதையும் கரடியும் குதிரையும் அடிமை வாழ்வில் அவதிப்படுகின்றார்களே. அவர்களையும் விடுதலை பண்ணினால் எல்லோரும் சேர்ந்து ஒன்றாகக் காட்டு வாழ்க்கையை அநுபவிக்க

லாமே!' என்பதுதான் அந்த ஞானம். குரங்கு இந்த யோசனை உதித்ததற்காகத் தனக்குத் தானே 'சபாஷ்' போட்டுக்கொண்டது. 'நமக்குப் புதிய இடமாக இருந்தாலும் பழைய சிநேகிதர்களைப் பிரியாமல் வாழும் வாழ்க்கை கிடைக்கும். சுதந்தரத்துக்கும் குறைவு இல்லை' என்று எண்ணி, விடுதலைப் பிரசாரத்தைத் தன் நண்பர்களிடம் செய்யும் கைங்கரியத்தை ஒரு நாள் சாயங்காலம் ஆரம்பித்தது.

2

"என் அருமை அண்ணுவே, உம்முடைய சுக சௌந்தரியமும் உல்லாச நடையும் யாருக்கு உபயோகப்படுகின்றன? எல்லாம் உம்முடைய எஜமானனுக்கு அல்லவா? வேளை தவருமல் கொள்ளு வைத்துப் பாதுகாக்கிருன் என்று சொல்லுகிறீரே. கசாப்புக் கடைக்காரன் ஆட்டைக் கொழுகொழுவென்று வளர்க்கிருனென்ருல், அது ஒரு பிரியம் ஆகுமா? அவனுவது ஒரே நாளில் அதை வெட்டொன்று துண்டு இரண்டாக ஆக்கி விடுகிருன். உமது எஜமானனே உம்மை ஆயுள் முழுதும் வேலைவாங்கிச் சித்திரவதை செய்கிருன்; கொல்லாமற் கொல்கிருன். உம்முடைய வாயிலே கடிவாளத்தைப் போடும்போது முதலில் அது ஏதோ ஆபரணமென்றுதான் நீர் நினைத்திருக்கவேண்டும். ஆனல் அது உம்முடைய சுதந்தரத்தை வேரறுக்கும் வாளென்பது இன்று உமக்குத் தெரிந்திருக்குமே!" இப்படி விடாமல் தன்னுடைய சாதுரிய வசனங்களைக் குரங்கு குதிரையின் காதில் ஓதிக் கொண்டு வந்தது.

"இதை விட்டால் நமக்கு வாழ்வு எங்கே?" என்று மெல்லக் கேட்டது குதிரை.

"என்ன அப்படிக் கேட்கிறீர்? காட்டு வாழ்க்கை சொர்க்கலோகம் அல்லவா? கடவுள் பிராணிகளைப் படைத்தது சுதந்தரமாக வாழத்தானே? வண்டியிலே பூட்டப்பட்டு விடுவதுதான் உம்முடைய ஜாதியாரின் உத்தியோகமானால் கடவுளே வண்டியைச் சேர்த்துச் சிருஷ்டித்திருக்க மாட்டாரா? காட்டில் நாம் இஷ்டப்படி உலாவலாம். கடிவாளம் இல்லை; சேணம் இல்லை. கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் புல் ஆள் உயரம் பரந்திருக்கும். பச்சைப் பசும் புல்லை வயிறு கொண்டமட்டும் தின்னலாம். கொள்ளுக்கூடக் காட்டிலே விளைகிறதென்று கேட்டிருக்கிறேன். அப்படி இருக்கும்போது நமக்கு என்ன குறை?"

"அங்கே பழக்கம் இல்லாத பிராணிகளோடு எப்படி வாழ்வது?"

"அப்படிக் கேளும்: அது சரியான கேள்வி. ஆனால் அந்தக் கேள்விக்கு நான் விடை தயாராக வைத்திருக்கிறேன். அங்கே நாம் தனியே வாழவேண்டாம். பல காலமாகப் பழகி ஒருவர் மனதை ஒருவர் தெரிந்து கொண்ட நான்குபேர் சேர்ந்து வாழப்போகிறோம். நமக்குச் சாமர்த்தியம் இருந்தால் நாம் நாலுபேரும் காட்டுப் பிரதேசத்தில் ஒரு தனி ராஜ்யத்தையே ஸ்தாபித்துவிடலாம். அந்த ராஜ்யத்துக்கு நீர்தாம் ராஜா. உமக்கு இஷ்டம் இருந்தால் நான் மந்திரியாக இருக்கிறேன்."

"நாலு பேரா? யார் நாலு பேர்?"

"நீர், நான், கழுதை, கரடி - இந்த நாலு பேரும் சேர்ந்தால் அந்தக் காட்டையே ஒரு கலக்குக் கலக்கிவிடலாமே!"

"அவர்களைப் பார்த்துப் பேசி அவர்களுடைய சம்மதத்தைத் தெரிந்துகொண்டாயா?"

"அவர்களுக்கு என்ன வலிக்கிறதா? முதலில் பெரியவர்களிடம் சம்மதம் பெற்றுக்கொண்டுதானே மற்றவர்களிடம் போகவேண்டும்? நீர் தஸ்தாஸ்து சொல்லும். அப்புறம் கணப் போதில் அவர்களைச் சம்மதிக்கச் செய்துவிடுகிறேன். கரும்பு தின்னக் கூலியா?"

குரங்கு தன்னுடைய சாமர்த்தியத்தால் குதிரையைச் சம்மதிக்கச் செய்துவிட்டது.

* * * *

அடுத்தபடி நேரே கழுதையிடம் போய்ச் சேர்ந்தது; "என்ன, வெள்ளி மூக்கண்ணா, இன்று சோர்ந்தாற்போல் இருக்கிறாயே?" என்று ஒரு கேள்வியைப் போட்டுக் கொண்டே அதை அணுகியது. "சோர்வு என்ன, சுறுசுறுப்பு என்ன? இந்த வாழ்க்கையில் இரண்டுக்கும் வித்தியாசம் இல்லை" என்று அலுத்துக்கொண்டது கர்த்தபம்.

"என்ன அப்படிச் சொல்லுகிறாய், அண்ணா? நீ பேசுவதிலிருந்து இன்று ஏதோ விசேஷம் நடந்திருக்கவேணுமென்று தோன்றுகிறது. சொல்லக்கூடாதா?"

"தம்பி, இந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறாய்? சலவை மூட்டையைச் சுமந்து வந்தபோது ஓரிடத்தில் சறுக்கியது; சாய்ந்தேன். கீழே விழுந்தேன். மூட்டையும் விழுந்தது. நான் விழுந்ததில் எனக்கு அடிபட்டது என் எஜமானன் கண்ணில் படவில்லை. மூட்டை அழுக்காகி விட்டதே என்று பிரமாதமாகக் கோபம் வந்தது. வந்தால் என்ன? கை இருக்கிறது; கழி இருக்கிறது; என் இடுப்பை ஒடித்துவிட்டான்."

"அட பாவி! இந்த மனித ஜாதியே மகாகிராதக ஜாதியப்பா! அது கிடக்கட்டும். நான் வந்த வேளை நல்ல வேளைதான் என்று சந்தோஷப்படுகிறேன்."

"என்ன தம்பி, பரிகாசம் செய்கிறாயா?"

"இல்லை, அண்ணா; நான் ஒரு விஷயம் சொல்ல வந்தேன். அதற்கு நீயே பீடிகை போட்டுவிட்டாய். இந்தச் சுமை சுமக்கும் வாழ்க்கையை அடியோடு விட்டுவிட வழி கண்டுபிடித்திருக்கிறேன்."

"அந்த வழி எனக்கு முன்பே தெரியுமே; ஆற்றில் நிறைய ஜலம் வரும்போது பேசாமல் இறங்கிவிட்டால் அப்புறம் இந்த எஜமானனுக்கும் மூட்டைக்கும் பயப்பட வேண்டாம். இந்த உடம்பே போய்விடுமே!"

குரங்கு சிரித்தது. "உனக்கு இந்த வழி ஒன்றுதான் தெரியும்போலிருக்கிறது. இந்தப் பாழும் அடிமை வாழ்வை விட்டுவிட்டுச் சுதந்தர வாழ்வை அநுபவிக்கும் காலம் நமக்கு வந்துவிட்டது. திட்டம் போட்டுவிட்டோம். புறப்படு என்றால் உடனே பதில் பேசாமல் புறப்பட நீ தயாராக இருக்கவேண்டும்."

"என்ன தம்பி, கதை பேசுகிறாயே. யாருக்குச் சுதந்தர வாழ்வு வருகிறது? யார் திட்டம் போட்டார்கள்? ஒன்றும் புரியவில்லையே!"

"குதிரையண்ணாவும் கரடியும் நீயும் நானும் இந்த ஊருக்குத் தலை முழுகிவிட்டுக் காட்டுக்குப் போய்விடுவதாகத் தீர்மானமாகிவிட்டது. குதிரையண்ணாவுக்கு இந்த யோசனையை நான் சொன்னபோது உண்டான சந்தோஷம் இவ்வளவு அவ்வளவு அல்ல."

"அது சரியப்பா; நான் காட்டு ஜாதி அல்லவே!"

"அட சட்! முட்டாள்கழுதை என்று சொல்லுவதற்கு ஏற்றபடியே பேசுகிறாயே. குதிரைக்கு இனம் என்று சொல்லிக்கொள்ள மாத்திரம் உனக்கு ஆசை இருக்கிறதே;

அதன் தைரியம் மாத்திரம் உனக்கு வரவில்லையே. காட்டு ஜாதி, நாட்டு ஜாதி என்று முகத்தில் எழுதி ஒட்டியிருக்கிறதோ? கட்டுப்பாடு இல்லாமல் மனம் போனபடி உலாவி, வேண்டிய உணவை உண்டு குஷியாகக் காலங்கழிக்க ஏற்பட்டது காடு. அதைக் கண்டு மனிதப் பதர்களல்லவா பயப்படவேண்டும்? நமக்கு என்ன பயம்? அதுவும் உயிருக்கு உயிராகப் பழகிய நாம் நாலுபேரும் சேர்ந்து வாழும் இடத்தில் பயம் எங்கே வந்தது? காட்டை நாடாக்கி விடுவோமே. என்ன? உனக்குச் சம்மதமா, இல்லையா?"

"குதிரையண்ணு சம்மதித்துவிட்டாரா?"

"அட, நீ என்ன பெரிய சந்தேகப் பிராணியாக இருக்கிறாய்? குதிரையண்ணு என்ன கொம்பனே? அவன் தாத்தாவானாலும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். நீ சம்மதிக்காவிட்டால் எங்களுக்கு ஒரு நஷ்டமும் இல்லை. நாங்கள் மூன்று பேரும் புறப்பட்டுவிடுவோம். நீ தினம் ஒரு விதமான பூசை பெற்றுக்கொண்டு, குடிசையே சொர்க்கம், எஜமானனே தெய்வம் என்று இருக்க வேண்டியதுதான்!"

"அத்தனை பெரியவர்களும் இத்தனை புத்திசாலியாகிய நீயும் தீர்மானம் செய்த பிறகு நான் குறுக்கே நிற்பேனு? ஏதோ சந்தேகம் வந்தது. கேட்டுக்கொண்டேன். கோபித்துக்கொள்ளாதே, தம்பி. என் விஷயத்தில் நீ இவ்வளவு அக்கறை எடுத்துக்கொள்ளுகிறாயே; நான் உனக்கு என்ன பிரதியுபகாரம் செய்யப் போகிறேன்!"

"உபகாரம் செய்யும் காலம் வரும்; அப்போது சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு மர்க்கடப் பிரசாரகர் கரடியிடம் வந்து சேர்ந்தார்.

கரடியினிடம் வேறு விதமான நியாயங்களை எடுத்துச் சொல்லியது குரங்கு.

'கரடியென்றால் காட்டில் வாழும் பிராணி என்பது அழும் குழந்தைக்கும் தெரியுமே. உல்லாசமாகப் பகலெல்லாம் திரிந்து காய் கனி கிழங்குகளை உண்டு இரவில் மரத்தின் மீதேறிப் படுத்து உறங்கும் வாழ்வைக் காட்டிலும் சுகபோகம் வேறு உண்டோ? அந்த விஷயத்தில் குரங்கு ஜாதியும் கரடி ஜாதியும் ஒரே மாதிரியானவை. நமக்குச் சுதந்தரம் வேண்டும். இந்த அடிமை வாழ்வை விட்டு நீங்கவேண்டும். நம்மை ஆட்டி அலைத்து வேலை வாங்கித் தம் வயிற்றை நிரப்பிக்கொள்ளும் கொடியவர்களின் சுயநலத்தை இதுகாறும் தெரிந்துகொள்ளாமல் மதி கெட்டு வாடினோம். இனியாவது இந்த வாழ்க்கையைத் தூவென்று தள்ளிவிட்டு நமக்கென்றே கடவுள் படைத்திருக்கும் காட்டுக்குப் போவோம். காட்டு வாழ்க்கையே நமது பிறப்புரிமை. உம்முடைய மூதாதையர்களெல்லாம் காட்டிலே வாழ்ந்துதானே மற்றவர்களுக்குக் கிடைக்காத பெருமையைப் பெற்றார்கள்? மனிதர்களாகிய ராம லக்ஷ்மணருக்குப் பக்கபலமாக இருந்து ராவணனோடு செய்த சண்டையில் வெற்றி வாங்கிக் கொடுத்தவர்கள் நம்முடைய முன்னோர்கள் என்பதை நாம் மறந்து போனோம். உங்கள் இனத் தலைவனாகிய ஜாம்பவானும் எங்கள் குல தெய்வமாகிய ஆஞ்சநேயரும் இல்லாமல் ராமர் ஜயித்திருப்பாரா? கரடியினத்துக்கும் கபியினத்துக்கும் பழங்காலம் முதலே நெருங்கின நட்பு இருந்ததை ராமாயணம் சொல்லுமே. நீ ஜாம்பவானைப் போலவும் நான் ஆஞ்சநேயரைப் போலவும் ஆவது பெரிய காரியம் அல்ல. சுதந்தர வாழ்வில் அதெல்லாம் சாத்

தியமே; நீ இந்த விஷயத்தில் என்னைப்போலவே எண்ணு பவன் என்பதில் என்ன தடை? உன் உள்ளமும் என் உள்ளமும் ஒன்றுகத்தானே நினைக்கும்?''

''என்ன தம்பி, கொட்டிக் கொட்டி அளக்கிருயே! இங்கே வாழும் வாழ்க்கையிலே என்ன துக்கத்தைக் கண்டு விட்டோம்?''

''என்ன அண்ணு, ஒன்றும் அறியாதவனைப் போலப் பேசுகிருயே! உன் பிரம்மாண்டமான உடம்பைப் பார்த் தால் எவ்வளவு பரிதாபமாக இருக்கிறது! போன வருஷம் உன் உடம்பில் இருந்த மயிர் இப்போது இருக்கிறதா? அத்தனையும் கொட்டிப் போய்விட்டதே! உடம்பு வரவரக் கிருசமாகி வருகிறதே. உன் எஜமானன் போடும் வாழைப் பழமும் அரிசியும் உனக்கு எந்த மூலே? காட்டிலே கிடைக்கும் கனிவர்க்கங்களை உண்டு வாழ்ந்தால் நீ இப் படியா இருப்பாய்? கருகருவென்று அடர்ந்து வளர்ந்த மயிரோடு கொழு கொழுவென்று பெருத்து ஆனையைப் போல இருக்கமாட்டாயா? இந்தப் பாழும் வாழ்க்கையில் நீ ஊறிப்போய் உன்னையே மறந்து, ஆண்மை இல்லா மல் பேசுகிருயே! நீ இப்படிப் பேசுவதை மாத்திரம் தயை செய்து விட்டுவிடு. உனக்குத் தலைவிதி, இப்படியே இருந்து அணு அணுவாகத் தேய்ந்து மாய்ந்து போவதாக இருக்கலாம். அதற்காக விடுதலை வேட்கை உடையவர் களை எல்லாம் முட்டாள் ஆக்கிவிடாதே. காட்டில் வாழ்வ தற்காகவே பிறந்த நமக்கு அதைப்பற்றி நல்ல அபிப் பிராயம் இல்லை என்றால் வேறு கேலிக்கூத்தே வேண்டாம். நாட்டில் வாழப் பிறந்த குதிரையும் கழுதையுங்கூட, நானும் வருகிறேன், நானும் வருகிறேனென்று நாலு கால் பாய்ச்சலில் வரத் தயாராக இருக்கிருர்கள். நீ என்னவோ

குடுகுடு கிழவனைப்போல, இதுவே போதும் என்று வேதாந்தம் பேசுகிறாயே!"

"அதென்ன சங்கதி? குதிரையும் கழுதையும் காட்டுக்கா வருகின்றன?"

"ஆமாம்; காடென்றால் கசக்கிறதோ? நம்மோடு பழகினதற்கு அவர்களையும் ஈடேற்றலாமென்று எண்ணி ஒரு வார்த்தை சொன்னேன். அவ்வளவுதான்; இப்போதே போய்விடலாமென்று துடித்துக்கொண்டிருக்கிறார்கள். என்ன இருந்தாலும் ஜாம்பவான் இல்லாமல் காரியம் நடக்குமா? உன்னிடம் வந்தேன்."

"அடே அப்பா! வெகு காரியம் செய்திருக்கிறாய் போல் இருக்கிறதே!"

"இதென்ன காரியம்? அங்கே போனபிறகு பார். எத்தனை அற்புதங்கள் செய்யப்போகிறேன்! நீ மட்டும் எனக்குத் தோள் கொடுத்தால் பழைய ராமாயணத்தையே கொண்டு வந்துவிடலாம்."

"சரி; அப்படியே செய்."

"நீ?"

"நானும் வருகிறேன்."

## 3

சுதந்தர வாழ்க்கையை நோக்கி அந்த நான்கு பிராணிகளும் பயணமாயின. குரங்கு வழிகாட்டி முன்னே செல்ல அதை அடுத்துக் கரடி போக அதன் பின்னே கழுதையும் குதிரையும் சென்றன. விடியற்காலையில் முன் ஏற்பாடு செய்தபடி குரங்கு குதிரையை விடுவித்தது. கரடியையும் விடுவித்தது. கழுதையை யாரும் கட்டிப் போடவில்லை. நான்கும் புறப்பட்டன.

ஊரைவிட்டு நெடுந்தூரம் வந்த பிறகே அவை பேசத் தொடங்கின. அது வரைக்கும் பேசுவதற்கும் பயமாக இருந்தது. மூச்சைப் பிடித்துக்கொண்டு நடந்து சென்றன. குரங்கு முன்பே விசாரித்து வைத்துக்கொண்டிருந்தபடியால் காட்டுக்குப் போகிற வழியிலே தன் சகாக்களை அழைத்துச் சென்றது. அது மிகவும் உற்சாகத்தோடு நடந்தது. "என்ன காடியண்ணு, நம்முடைய சிறையிலிருந்து நாம் தப்பி வந்துவிட்டோம். இனிமேல் நாம் சுதந்தர புருஷர்கள், நினைத்தபடி போகலாம். நினைத்ததெல்லாம் பேசலாம்" என்று பேச்சை ஆரம்பித்து வைத்தது. "நம்முடைய யஜமானர்கள் நம்மைத் தேடிக்கொண்டு வந்துவிட்டால்?" என்று மெலிந்த குரலில் கேட்டது கழுதை.

"கழுதையண்ணுவுக்கு எப்போதும் சந்தேகந்தான். கைலாசத்துக்கே கூட்டிக்கொண்டுபோய், இதுதான் கைலாசமென்று சொன்னல்கூட அங்கும் சந்தேகந்தான் வரும்" என்று ஏளனமாகப் பேசியது குரங்கு.

"அதற்கில்லை, தம்பி; உங்களால் ஜீவனம் செய்தவர்கள், விடிந்தால் இரண்டு ஊருக்குப் போய் வேடிக்கை காட்ட உங்களைத் தேடுவார்களே. என் யஜமானனுக்கு அத்தனை சங்கடம் இல்லை. உன் யஜமானனைச் சொல். காடியண்ணுவின் யஜமானனுக்கு வேறே காடி எங்கே கிடைக்கும்?"

"கழுதையண்ணு இந்த உலகம் முழுவதும் வாழ வேண்டுமென்று நினைக்கும் மகாஞானியென்று இப்போதல்லவா தெரிகிறது? அடாடா, என்ன நன்றியறிவு! என்ன கருணை! நம்மை எல்லாம் கையை முறித்துக் காலை முறித்து வேலை வாங்கினவர்கள்மேல் அண்ணுவுக்கு எத்

தனை பிரியம்! ஏன் அண்ணா, அப்படியானால் நாம் திரும்பிப் போய்விடுவோமா?"

குரங்கின் குறும்புப் பேச்சினால் கழுதைக்குக் கோபம் வந்தாலும் அடக்கிக்கொண்டது. குரங்கு மீண்டும் வனவாச மாகாத்மியத்தை விரிக்க ஆரம்பித்தது.

"கழுதை அண்ணா, உனக்குத்தான் சொல்லுகிறேன். காடென்றால் நம் இஷ்டப்போல் வாழ வேண்டிய இடம் அது. அங்கே அழுக்கு மூட்டையே இல்லை என்று நினைக்கக்கூடாது. சும்மா மனம் வந்தபடி குதிக்கலாம், கனைக்கலாம். நீ கொண்ணாரம் போடத் தொடங்கி விட்டால் காடு கொள்ளாதே. காட்டு ராஜ்யம் முழுவதும், உன்னுடைய சங்கீதக் கச்சேரியில் மூழ்கிவிடும்."

"சரி, சரி, பரிகாசம் பண்ணினது போதும், தம்பி" என்றது கழுதை.

"நான் எவ்வளவு யோசனை செய்து கூட்டிப் போகிறேன்! அடிக்கொரு தடவை சந்தேகப்படுகிறாயே. நான் முதலில் விஷயத்தைச் சொன்னபோது அதைப் பரம உபகாரமென்று சொன்னதோடு, எனக்குப் பிரதி உபகாரங்கூடச் செய்வதாகச் சொன்னாயே."

"வாஸ்தவந்தான், அப்பா. நான் என்ன செய்ய முடியும்?"

"இப்போது நான் உன்மேல் உட்கார்ந்து கொள்கிறேன்; என்னைத் தூக்கிப் போகிறாயா?"

"இதுதானா பிரமாதம்? இந்த முதுகு எத்தனை சுமையைச் சுமந்திருக்கிறது? நீ ஒரு பாரமா? குஷாலாக ஏறிக் கொள்."

குரங்கு ஜம்மென்று கழுதையின்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டது. ஏதோ பெரிய பதவி கிடைத்து விட்டது போன்ற எண்ணம் அதற்கு ஏற்பட்டது. "ஒரு வாகனத்தின்மேல் ஏறிச் சவாரி பண்ணுவதென்றாலே ஜோர்தான்! தெரியாமலா மனிதர்கள் குதிரையின்மேல் ஏறிச் சவாரி பண்ணுகிறார்கள்?"

இதுவரையில் எல்லாவற்றையும் கேட்டு வந்த குதிரைக்குக் குரங்கின் காரியம் சரியாகப் படவில்லை. ஒன்றுக்கொன்று தோழமை பாராட்டும்போது ஒன்று வாகனமாகவும் மற்றொன்று அதன் மேல் சவாரி பண்ணுவதாகவும் இருப்பது முறையா? குதிரைக்குக் குரங்கினிடம் சந்தேகம் தோன்றியது; குதிரையின்மேல் மனிதர்கள் சவாரி பண்ணுவதைக் குரங்கு சுட்டிக் காட்டுவதில் ஏதோ அர்த்தம் இருப்பதாக அதற்குப் புலப்பட்டது. இப்போது கழுதையின்மேல் குந்தியிருக்கும் குரங்கு அடுத்தபடி தன்மேல் வந்து குந்திக்கொண்டால்?

இப்படி அதன் நினைவு படர்ந்ததுதான் தாமதம், சொல்லி வைத்தாற்போல் குரங்கு விஷமத்தைக் காட்டத் தொடங்கியது; "குதிரை அண்ணா, என்ன மௌனமாக வருகிறீரே! கழுதை அண்ணாவின்மேல் அமர்ந்திருப்பதே இத்தனை சுகமாக இருந்தால், உம்மேல் சவாரி செய்வது எவ்வளவு இனிமையாக இருக்கும்!" என்று கேட்டது.

"அது மனித ஜாதியைச் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியது. குரங்கு மனிதனாக மாறுவதானால் குரங்குக்கும் ஒருகால் தெரியவரும்" என்று சுருக்கென்று குதிரை சொல்லிவிட்டது.

குரங்குக்கு மூஞ்சியில் அடித்ததுபோல் ஆயிற்று. பேசாமல் கழுதையின் முதுகினின்றும் கீழே இறங்கி முன்னே நடந்து செல்லத் தொடங்கியது.

காடு அணுக அணுகக் குரங்கு துள்ளிக் குதித்தது. கரடிக்குக்கூடச் சந்தோஷந்தான். கழுதைக்கோ ஒரு வித இன்ப உணர்ச்சியும் அதனோடு சிறிது பயமும் கலந்து உண்டாயின. குதிரை கம்பீரமாக ஒன்றையும் சிந்திக்காமல் நடந்தது. காடு வந்துவிட்டது; அடர்ந்த மரங்களும் நெருங்கின புதர்களுமாகக் காட்சி அளித்தது. நான்கு விலங்குகளும் அந்தக் காட்சியிலே பிரமித்துப் போய் நின்றன. குரங்கு விறுவிறுவென்று பக்கத்தில் இருந்த சிறிய மரத்தில் ஏறி வெறி பிடித்ததுபோல அதை உலுக்கியது. அங்கும் இங்கும் தாவிக் குதித்தது, துள்ளியது, கூத்தாடியது. "உங்களுக்குச் சுதந்தர வாழ்க்கையை அநுபவிக்கத் தெரியவில்லையே!" என்று கூறிக் கீச்சுக் கீச் சென்று கத்தியது. கரடியும் அங்கும் இங்கும் சென்று வந்தது. கழுதை மரடித்தடியில் சிறிது சென்று நின்றது. குதிரை அருகில் இருந்த புல்லை மேய்ந்தது.

மத்தியான்ன வேளையில் வெயிலே உறைக்காத மர நிழலில் குதிரை படுத்துக்கொண்டது. பக்கத்தில் கழுதை நின்றது. கரடி அருகிலே போய்ப் பழமும் காயும் கொணர்ந்து தின்றது. குரங்கு எங்கே போயிற்றென்று தெரியவில்லை. பிறகு எங்கோ சுற்றி அலைந்து வந்து சேர்ந்தது.

மாலைக் காலம் நெருங்கிக்கொண்டிருந்தது. காட்டு மிருகங்களின் சத்தம் கொஞ்சம் கொஞ்சமாகக் கேட்கத் தொடங்கியது. இருள் கவிந்துகொண்டது. வன விலங்குகளின் முழக்கத்தைக் கேட்டுக் குரங்கு குலை நடுங்கி விட்

டது. கழுதையோ பின்னங்கால் இரண்டும் ஒன்றனோடு ஒன்று முட்ட, நடுங்கத் தொடங்கியது. குதிரை ஏதோ யோசனையில் ஆழ்ந்தது.

அப்போது கரடி, "இரவில் நாம் எங்கே தங்குவது?" என்று கேட்டது.

"எங்கேயா? இங்கேதான் தங்க வேண்டும்" என்றது குரங்கு.

"இங்கே இரவில் ஏதாவது மிருகம் வந்தால்?"

"வந்தால் என்ன? நாமும் மிருகந்தானே?"

"புலி சிங்கம் சிறுத்தை என்ற மிருகங்களைப்பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?"

"கேள்விப்பட்டிருக்கிறேன்."

"அவை நம்மைக் கண்டால் ஒரே அடியில் கொன்று விடுமே!"

"என்ன?" என்று கழுதை திடுக்கிட்டது.

"மறைவாக இருக்கும் இடம் ஒன்றும் இல்லையா?" என்று கேட்டது குதிரை.

"மரத்திலே ஏறிக்கொள்ளலாம்" என்றது குரங்கு.

"உனக்கு மரமேறத் தெரியும். மற்றவர்கள் என்ன செய்வார்கள்?" என்று கேட்டது கரடி.

"அவர்களுக்கும் பழக்கிக் கொடுத்தால் போகிறது" என்று குரங்கு சொன்னபோது, குதிரைக்குக் கோபம் கோபமாக வந்தது. "நீ வண்டி இழுக்கக் கற்றுக்கொள்ளும்போது நாங்கள் மரமேறக் கற்றுக்கொள்வோம்" என்று விடை பகர்ந்தது.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலே சில நரிகள் ஊளையிட்டுக்கொண்டு அங்கே வந்தன. குரங்கு மரத்தின் மேலே ஏறிக்கொண்டது. "கரடி அண்ணு, நீயும் ஏறிக் கொள்" என்று கத்தியது. கரடியோ, நரிகள் குதிரையின் மேலும் கழுதையின் மேலும் பாயும் என்று தெரிந்து கொண்டு அவற்றை எதிர்த்து முன் நின்றது. அதன் உறுமலுக்குப் பயந்து நரிகள் ஓடிவிட்டன. கழுதைக்குப் பாதிப் பிராணன் போய்விட்டது. குதிரை தன் தலைவிதியை நினைந்து நொந்துகொண்டிருந்தது.

எப்படியோ ஒருவிதமாகக் கரடியின் காவலில் குதிரையும் கழுதையும் அன்றிரவைக் கழித்தன.

மறுநாள் பொழுது விடிந்தவுடன் குதிரை கரடியைப் பார்த்து, "தம்பி, இந்தக் காட்டு வாழ்க்கையின் யோக்கியதை தெரிந்துவிட்டது. போதும்; பழையபடியே ஊருக்குப் போகலாமென்று தோன்றுகிறது" என்றது.

கரடி, "சற்றுப் பொறுங்கள்; இரவு வேளைகளில் தங்குவதற்கு இடம் கிடைத்துவிட்டால் இங்கேயே இருந்துவிடலாம்" என்று சமாதானம் கூறியது. கரடியின் வார்த்தையில் நம்பிக்கை வைத்த குதிரை அதற்குச் சம்மதித்தது.

எங்காவது மறைவான இடம் இருக்கிறதா என்று பார்த்துவரப் புறப்பட்டது கரடி. குரங்கையும் அழைத்துக்கொண்டு சென்றது.

"பாவம்! அவர்களை அழைத்துக்கொண்டு வந்து அந்தரத்தில் விடலாமா?" என்று அங்கலாய்த்தது கரடி.

"அண்ணு, மரம் ஏறத் தெரியாத பிராணிக்கும் உயிர் வாழத் தகுதி உண்டா? விலங்குகளுக்குள் உனக்கும் எனக்குந்தான் இந்த ஆற்றல் இருக்கிறது. ஆகவே, நாம்

இருவருமே ஆப்த நண்பர்களாக இருக்க முடியும். கழுதை ஒன்றுக்கும் உதவாத கழுதை. குதிரை மாத்திரம் என்ன? கொஞ்சம் பார்க்க அழகான கழுதை; அவ்வளவுதானே? அவற்றைப்பற்றி நாம் அத்தனை அக்கறை கொள்ள வேண்டியதில்லை" என்று குரங்கு பேசியது.

"என்ன தம்பி, உனக்குக் காட்டுக்கு வந்தவுடன் புத்தி பிசகிவிட்டதா? ஆசை காட்டி அவர்களை இங்கே அழைத்து வந்துவிட்டு, அவர்கள் உயிருக்கே அபாயம் நேரும்படியான சமயத்தில் கைவிடத் துணிகிறாயே" என்றது கரடி.

"உன் இஷ்டம்போல் செய். நான் ஒன்றும் பேசவில்லை" என்று குரங்கு அடங்கியது.

நெடுந்தூரம் போன பிறகு ஒரு சிறிய குன்று இருந்தது. அதன் அடியிலே ஒரு குகை தென்பட்டது. "அதற்குள் வேறு மிருகம் ஒன்றும் இல்லையா என்று பார்த்துவா" என்று கரடி குரங்கினிடம் சொல்லியது. அதற்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? "ஹூ ஹூம்; நான் மாட்டேன்" என்று சொல்லிவிட்டது. கரடியே உள்ளே போய்ப் பார்த்து ஒன்றும் இல்லை என்று தெரிந்துகொண்டு வந்தது.

மறுபடியும் குதிரையும் கழுதையும் இருக்கும் இடம் வந்து, "இனிமேல் நாம் சந்தோஷமாக வாழலாம். உங்கள் இரண்டு பேருக்கும் பாதுகாப்பான இடம் கண்டு பிடித்துவிட்டேன். பகலெல்லாம் இஷ்டம்போல் இருந்து வாழலாம். இரவில் நீங்கள் அந்தக் குகையில் யாதொரு பயமுமின்றி இருக்கலாம்" என்று தைரியம் ஊட்டி அங்கே அழைத்துக்கொண்டு சென்றது.

அன்று மாலை வயிறாரப் புல்லைத் தின்றுவிட்டுக் குதிரையும் கழுதையும் குகைக்குள் போயின. அதன் வாசலைக் காடி ஒரு குண்டுக் கல்லால் அடைத்தது. பிறகு இரவுப் போதைக் குரங்கு ஒரு மரத்திலும் காடி மற்றொரு மரத்திலும் கழித்தன. இரவில் சிங்கம் கர்ஜிக்கும்போது குரங்கு பயந்து போய்க் கத்தும். மரத்திலிருந்து சுயாதீன மற்று விழுந்துவிடும். காடி அதை எடுத்து மறுபடியும் மரத்தின் மேல் விடும். குகைக்குள் இருந்தாலும் கழுதை மயக்கம் போட்டு விழும். குதிரையும் நடுங்கும்.

## 4

நாலைந்து நாட்களில் அரண்ய வாழ்வு ஒவ்வொரு பிராணிக்கும் புளித்துவிட்டது. குதிரை வெறும் புல்லை மாத்திரம் தின்று ஜீவிக்க முடியவில்லை. பதமாக வெந்த கொள்ளைத் தின்று கொழுகொழுவென்று வளர்ந்த அதன் உடம்பு இளைத்துவிட்டது. இரவில் ஒரு சிறை, பகலில் ஒரு சிறையாக அதற்கு இருந்தது. கழுதைக்கோ எந்தச் சமயத்தில் பகல் நேரத்தில் நரி வந்து தன் காலைக் கடித்து விடுமோ என்ற பயம். அதோடு ஒவ்வோர் இரவும் சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்கும்போதெல்லாம் அதன் பிராணன் ஒருமுறை போய்விட்டு வந்தது.

குரங்கு மாத்திரம் என்ன வாழ்ந்தது? குடிசையிலே பிறந்த அதற்குக் காட்டில் வாழத் தெரியவில்லை. ஓங்கி உயர்ந்த மரத்தின் உச்சியில் ஏறத் தெரியவில்லை; மரத்துக்கு மரம் வேகமாகப் பாயும் பயிற்சியும் இல்லை. இது குரங்கு ஜாதிக்கே உரியதல்ல என்று காட்டுக் குரங்குகள் நினைத்துவிட்டன. அதனால் அதைக் கொன்றுவிட எண்ணி அவை சூழ்ந்துகொண்டன. காடி காப்பாற்றவிட்டால் அதன் உயிருக்கே மோசம் வந்திருக்கும்.

கரடி மாத்திரம் ஏதோ சமாளித்து வந்தது. ஆனாலும் தன்னுடைய தோழர்கள் படும் அவஸ்தையைப் பார்க்க அதற்குச் சகிக்கவில்லை. சுதந்தரக் காட்டு வாழ்க்கை போதும் என்றாகிவிட்டது.

குரங்கு கரடியிடம் வந்து, "அண்ணு, நான் பாவி, அந்தச் சாதுக்களை இங்கே அழைத்து வந்தேன். மறுபடியும் ஊருக்கே போய்விடுவதுதான் நல்லதென்று தெரிகிறது. என் எஜமானன் பிரியத்தோடு கடித்துக் கொடுக்கும் வாழைப்பழத்துக்கு இந்தக் காட்டுப் பழங்கள் அத்தனையும் ஈடு ஆகுமா?" என்று சொல்லி அழுதது.

"அழாதே, தம்பி; புறப்படலாம்" என்று சொல்லித் தேற்றியது கரடி.

அப்படியே மறுபடியும் அந்த நான்கும் ஊரை நோக்கிப் புறப்பட்டன. குதிரை வழி காட்டக் கழுதை பின் தொடரக் கரடியும் குரங்கும் பின்னே வர இந்தப் பிரயாணம் நிகழ்ந்தது.

சாதுப் பிராணிகளாக நான்கும் தங்கள் தங்கள் இடத்தைப் போய் அடைந்தன.

ஆனால் ?

குதிரையைக் கண்டவுடன் சந்தா சாகிபுக்கு ஆனந்தம் சொல்ல முடியவில்லை. காணாமல்போன குழந்தையைக் கண்டு பிடித்ததுபோலத் துள்ளினான். அதைக் கட்டிக்கொண்டான். தட்டிக் கொடுத்தான். கொள்ளை வேகவைத்து முதலில் கட்டினான். வெந்நீர் காய்ச்சி ஊற்றினான். ஆசார உபசாரமெல்லாம் நடந்தன. அதன் அதிருஷ்டம் அது.

காரடிக்காரக் கறுப்பன் கரடியைக் கயிற்றால் கட்டி அங்கும் இங்கும் இரண்டு இழுப்பு இழுத்தான். அதோடு அவன் கோபம் மாறியது. வேண்டிய உணவெல்லாம் கொடுத்தான். கரடியின் பாக்கியம் அது.

வண்ணான் முத்துவுக்குக் கழுதையைக் கண்டவுடன் ஆத்திரம் பொத்துக்கொண்டது. அதைக் கட்டிப் போட்டு அடி அடியென்று கைகொண்ட மட்டும் அடித்து இடுப்பை ஒடித்தான்; நாலுநாள் வெறுந் தண்ணீர் மாத்திரம் காட்டினான். பிறகு பழையபடி மூட்டை தூக்கச் செய்து பராமரிக்கலானான். அது பெற்ற வரிசை அது.

குரங்கைக் கண்ட குப்பன் நீண்ட கோலால் அதன் உடம்பு ரணமாகும்படி அடித்தான். இந்த ஒரு வாரத்தில் அவன் வேறு குரங்கைச் சம்பாதித்துக்கொண்டான். ஆகவே பழைய குரங்கு அவனுக்குத் தேவையில்லை. அடித்துக் காலை ஒடித்துத் தெருவில் வீசி எறிந்துவிட்டான். பாவம்! அது நொண்டியபடியே சுவரோரம் சென்று படுத்துக்கொண்டது.

குரங்கின் தோழர்கள் மறுபடியும் அடிமைகளாகி விட்டார்கள். குரங்கோ சுதந்தர வாழ்வை நிரந்தரமாகப் பெற்றுவிட்டது!

# கடன்காரன்

'செட்டியார் அடிக்கடி ரிக்ஷாவில் போகிறவரா யிற்றே; அவரைக் கேட்டால் உபகாரம் செய்வார். ஏதோ கொஞ்சம் கொஞ்சமாகக் கூலிப் பணத்தில் கழித்து விடலாம்' என்ற எண்ணத்தோடு பாவாடை வந்தான். அவனுக்கு இவ்வளவு காலமாக இப்படிப்பட்ட சோதனை வரவே இல்லை. இப்போது எங்காவது கடன் வாங்கா விட்டால் பட்டினிதான் என்ற நிலை வந்திருக்கிறது.

"என்ன பைத்தியக்காரத்தனம் செய்தோம்! தெலுங்க ரிக்ஷாக்காரர்களெல்லாம் எப்படிப் பிழைக்கிறார்கள்! எத் தனையோ பேர் பணம் சேர்த்துக்கொண்டு இந்த ரிக்ஷா இழுக்கிற தொழிலையே விட்டுவிட்டு ஊருக்குப் போய் விட்டார்கள். சண்டை வந்தாலும் வந்தது. மிலிடரிக் கார மகாராஜன் ரூபாய் கோட்டாகத்தான் வாரிக் கொடுத் தான். தெலுங்கனுக்கு மாத்திரமா கொடுத்தான்? எல் லோருக்குமே கொடுத்தான். ஆனால் இந்தத் தமிழ்ச்சாதி சம்பாதிக்கிறதையெல்லாம் கள்ளுக்கடையிலே கொண்டு போய்க் கொட்டிவிட்டது. 'ஒஸ்தி சரக்கைக்'கூடப் பழக் கம் பண்ணிக்கொண்டது. இந்தச் சாதிக்கு விடிமோட்சம் ஏது?"

இப்படியெல்லாம் அவனுக்குப் பச்சாத்தாபம் ஏற்பட் டது. ஆண்டவன் அவனுக்கு உடம்பில் வலுவைக் கொடுத்திருந்தான். அடாபிடி வழிக்கு அவன் போகவே மாட்டான், மற்ற ரிக்ஷாக்காரர்களோடு சண்டை போடு வதும் இல்லை. வண்டி ஏறும்போது ஒரு கூலி, ஓடும்

போது ஒரு கூலி, இறங்கும்போது ஒரு கூலி பேசிச் சண்டை பிடிக்கமாட்டான். வெட்டொன்று துண்டு இரண்டாக முதலிலேயே கூலியைப் பேசிக்கொள்வான். 'எசமான் கொடுத்ததைக் கொடுங்க' என்று சொல்லி விட்டு, 'மாடு மாதிரி இழுத்து வந்தேனே; இதுதானா?' என்று இறங்குமிடத்தில் தகராறு பண்ணும் வழக்கமும் அவனிடம் இல்லை.

ஆனால், பாழும் கள்ளுக்குடியை அவனால் உதறித் தள்ள முடியவில்லை. அதைக் கண்ணாலே கூடப் பார்க்கிறதில்லையென்று எத்தனையோ தடவை சாமி அறியச் சத்தியம் செய்திருக்கிறான். ஆனால் சரியாக ஏழு மணிக்குத் தன்னுடைய தோழர்கள் அடையாற்றுப் பக்கம் புறப்படும்போது அவனை அந்த நினைவு இழுக்கும். அவனும் அடிமையாகிவிடுவான்.

அவனுக்கு இருக்கிற நயமான பேச்சுக்கு, வேறு வேலை ஏதாவது செய்து மானமாக வயிறு பிழைக்கலாம். லோகநாத செட்டியாரே அதைச் சொல்லியிருக்கிறாரே. "என்னப்பா பெரிய வாய்ப் பந்தல் போடுகிறாயே. நீ ஒரு கடையில் இருந்தால் நல்ல பேர் வாங்கிச் சம்பளமும் வாங்கலாமே!" என்பார்.

கடையிலா! அவன் ஹரிஜன். அவனைக் கடையில் சேர்த்துக்கொள்ள அவ்வளவு தூரம் இன்னும் ஒற்றுமை உணர்ச்சி வரவில்லையே! செட்டியார் சர்க்கரை வட்டமாகப் பேசுகிறாரே! அவர் நினைத்தால் ஏதாவது ஒரு வேலை பண்ணி வைக்கக்கூடாதா? அவருக்கு அவனைப்பற்றி என்ன கவலை? ரிக்ஷா ஏறும்போது அவனைத் தட்டிக் கொடுத்துப் பேசுவார். அவ்வளவுதான்; அதற்கு மேல் அவர் உண்டு, அவர் கமிஷன் வியாபாரம் உண்டு.

தலையில் ரிக்ஷா இழுக்க வேணுமென்று எழுதியிருக்கும்போது, அது மாறுமா ?—இதுதான் அவனுக்குச் சமாதானம் தரும் மகா வாக்கியம். அவன் பெண்டாட்டி பாவம்! அவளால் அவளுக்கு என்ன சுகம்?—எவ்வளவோ சொல்லியிருக்கிருள்: பேசாமல் திண்டிவனத்திற்குப் போய்த் தன்னுடைய சொந்தக்காரருடன் வாழலாமென்று சொல்லியிருக்கிருள். அங்கே போனால் 'பயிர் வேலை'யல்லவா செய்யவேண்டும்? பாவாடை கை ரிக்ஷா இழுக்க வேணுமென்று இருக்கும்போது, பயிர் வேலை செய்யப் போகுமா? அப்படித்தான் செய்தாலும் என்ன பிரமாதமாகச் சம்பாதித்துவிட முடியும்? கழனிக்கு உடையவன் பண்ணைக்காரன், அவன் மனசு வைத்துக் கொடுக்கிற கூலியை வாங்கிக்கொள்ள வேணும். அன்றைக்குப் பீச்சிலே பேசினரே ஸ்டாலின் பக்தர், அவர் சொல்லுகிற மாதிரி நெற்றி வேர்வை நிலத்தில் விழக் கஷ்டப்பட்டாலும் கால் வயிற்றுக் கஞ்சி கூடக் கிடைக்காது. நிலத்துக்காரன் மாட்டையும் மனிதனையும் ஒன்றுபோல வேலை வாங்குகிற ராக்ஷஸ சாதியாம்! அவனிடம் போய்ப் பழக்கமில்லாத வேலையைப் புதிதாகப் பண்ணுவதிலே லாபம் என்ன ?

"எங்க அண்ணன், அண்ணன் மகன் எல்லோரும் நல்லாத்தான் இருக்காங்க. தீவளிக்கு நல்ல வேட்டி வாங்கித் தாரு எசமான். அவுங்க அவுங்க குடிசை சொந்தமாகக் கட்டிக்கிட்டு இருக்காங்க. நோய் நொடி இல்லாமே, பீடி, சுருட்டு இல்லாமே, கள்ளுத்தண்ணி இல்லாமே சொகமா இருக்காங்க" என்று எல்லம்மாள் அந்தக் கிராமத்துப் புராணத்தைப் பாடுவாள்.

"எல்லாம் எனக்குத் தெரியும். யாரோ சொன்னதைக் கேட்டு மெய்யென்று நம்பியிருக்கிறாய். அதெல்

லாம் ஒன்றும் இல்லை. இக்கரைக்கு அக்கரை பச்சை தான்'' என்று அவள் வாயை அடக்கி விடுவான் பாவாடை.

நாட்டுப்புறத்திலே இனிமேல் போய்க் குப்பை போடுவதென்பது அவனுக்குச் சாத்தியமா? இங்கே அவனுக்குக் கிடைக்கும் வரும்படி வேறு எங்கேதான் கிடைக்கும்? அந்தக் குமாஸ்தா ஐயருக்கு மாசம் ஐம்பது ரூபாய்தான் சம்பளம். அவன் மாத்திரம் நன்றாக உழைத்தால் மாசம் தொண்ணூறு ரூபாய்க்குக் குறைவில்லையே! மிலிடரிக்காரன் சவாரியில் மாசம் இருநூறு ரூபாய் சம்பாதித்தவர்கள் இல்லையா? அன்றைக்கு ஒரு நாள் நல்ல குடி மயக்கத்திலே மூழ்கியிருந்த அந்த வெள்ளைக்கார ஸோல்ஜரை ராயப்பேட்டைச் சந்துக்கு ராத்திரியிலே இழுத்துக்கொண்டு போனானே, அது இன்னும் அவனுக்கு ஞாபகம் இருக்கிறது. ஸோல்ஜர் பூட்சுக் காலாலே இடித்த அடையாளம் அவன் விலாவிலே இன்னும் தழும்பாக நிற்கிறது. ஆனால் என்ன? குடி மயக்கத்திலே அவன் பத்து ரூபாய் நோட்டையல்லவா வீசியெறிந்தான்? மறுநாள் ஒரே மோக்ஷா! சீமைச் சரக்கை ருசி பார்க்கும் அதிருஷ்டம் அவனுக்குக் கிடைத்ததற்குக் காரணம் அதுதானே?—

நாசமாய்ப் போக அந்தச் சீமைச் சரக்கு! அதனாலே தான் அவன் குடியே கெட்டது. அவன் விலாவிலே உதைத்த வெள்ளைக்காரன் சரியாகத்தான் புத்தி புகட்டினான். ஆனால் அவனுக்கு உறைத்தால்தானே? பத்து ரூபாய் எப்படி வந்ததோ அப்படிப் போய்விட்டது. அதோடே எத்தனையோ பத்து ரூபாயைக் கறுப்புச் சரக்கு வாரிக்கொண்டு போய்விட்டது.

இப்போது அதையெல்லாம் நினைத்து என்ன பண்ணுகிறது? கிராமணி கடையிலே உள்ள வெள்ளைச் சாக்குக்குக்கூடத் திருப்தியானபடி காசு கிடைக்கிறதில்லை. அந்தச் சனியனை விட்டுத் தலை முழுகலாமென்றாலோ உடம்போடு நிழல் வருகிறதுபோல, பொழுது விழுந்தால் அதோடு அந்த ஞாபகம் வந்து விடுகிறது. சோற்றுக்கு இருக்கிறதோ இல்லையோ, அவனுக்குக் கவலையில்லை; தன் காணிக்கையை அடையாறு ரோட்டுக் கள்ளுக் கடையிலே செலுத்திவிடவேண்டும்.

கிராமத்துக்குப் போகிற நினைப்பிலே இத்தனை பழைய கதையும் அவன் மனசுக்கு வந்தது.

பட்டணத்திலே மாசம் நூறு ரூபாய் சம்பாதிக்கலாம். சம்பாதிக்கிறதெல்லாம் அவனுடையதா? அது தானே இல்லை? முக்கால் ரூபாயானாலும் சரி, மூன்று ரூபாயானாலும் சரி, அன்றன்று கையிலிருந்து போய்விடுகிறது. அதிலிருந்து எல்லம்மாள் அழுதோ தொழுதோ வாங்கிக்கொண்டது லாபம்.

பாவம்! அவள் என்ன சுகத்தைக் கண்டாள்? உழைத்து உடம்பு ஓடாகிவிட்டது. இத்தனை காசு அவன் சம்பாதித்து அவளுக்கு என்ன ஆயிற்று? அவள் உத்தம பத்தினி. அவள் இல்லாவிட்டால் மிலிடரி சவாரிப்பணம் வந்த மோஜிலே, எல்லோரையும்போல் அவனும் வேறு வழியிலே திரும்பியிருப்பான். யாரோ இதற்காகவே தெற்கேயிருந்து கொண்டைக்காரிகள் வந்திருக்கிறார்களே. வெள்ளம் வந்தால் வடிமடை வேண்டாமா? அதோ அந்தக் கந்தன் பயல் தெற்கத்தியாள் வலையிலே அகப்பட்டுக் காசையெல்லாம் பறி கொடுத்ததோடு, சீக்கு வேறே சம்

பாதிச்சுக்கொண்டான். சே! அது கிடக்கிறது கசுமாலம்! அதைப்பற்றி நினைத்தாலே ஆபாசம்.

எல்லம்மாள் பத்தினி. அவளுக்கு அவன் ஒன்றும் விசேஷமாக வாங்கித் தரவில்லை. அதனால் அவனிடம் அவளுக்கு அலக்ஷிய புத்தி இல்லை. கள்ளைக் குடித்த வெறியிலே வீட்டுக்கு வந்தால், "இன்னிக்குக் கோயிலுக்குப் போனையாக்கும்!" என்று ஏளனச் சிரிப்போடு அவள் வரவேற்பாள். கள்ளுக்கடையேதான் கோயில் என்று சொல்வாள். ஆனால் அந்த வார்த்தை பாவாடைக்கு உண்மையில் கோயில் ஞாபகத்தை உண்டாக்கும். அவளே எல்லையம்மனைப்போலத் தோற்றுவாள். அவளிடம் ஏதோ சக்தி இருக்கிறது. இல்லாவிட்டால் அப்படி அவன் கண்ணுக்குத் தெரிவானேன்? அவன் ஒன்றும் பேசமாட்டான். பேசாமல் போய் முடங்கிக்கொள்ளுவான்.

ஒரு வார்த்தை கடுகடுப்பாகப் பேசுவாளா? ஒருநாளாவது அவனுக்குச் சோறு போடமாட்டேனென்று சொல்லியிருப்பாளா?

அடுத்தாற்போல் கந்தன் சமாசாரம் என்ன? அவன் தினசரி எட்டணா வீட்டுக்குக் கொடுத்துவிடுகிறான். அவன் கொடுக்காவிட்டாலும் 'ஸ்டாண்டு'க்கே வந்து அந்தப் பெண்பிள்ளை சண்டைபோட்டு வாங்கிக்கொள்வாள். பெண்பிள்ளையா அவள்? பேயல்லவா? நாலுபேருக்கு நடுவில், நடு ஸ்டாண்டில் அவள் பேசுகிற பேச்சு, மனிசன் கேட்கமாட்டான்; அப்படிப் பேசுவாள். அவளைக் கந்தன் கட்டிக்கொள்ளவில்லையாம்; சேர்த்துக்கொண்டு வந்தவளாம். அதனால்தான் கூலிக்காரியைப்போல அன்றன்று பணம் வாங்கிக்கொள்கிறாள்.

ஆமாம்! கட்டின பெண்டாட்டி மட்டும் வாழ்ந்தாளாக்கும்! முனியன் பெண்சாதி சமாசாரம் என்ன? அவளை அவன் கட்டிக்கொண்ட கதையை அவன் எவ்வளவு சுவாரஸ்யமாகப் பாவாடையிடம் சொல்லியிருக்கிறான்! அவள் அவனுக்கு மாமன் மகளாம். அவளை அவனுடைய அத்தை மகன் கட்டிக்கொள்ளப் பார்த்தானும். சண்டை, பூசல், அடிதடி எல்லாம் நடந்து, கடைசியில் அந்தப் பெண்பிள்ளை இவனோடு ஓடிவந்துவிட்டாளாம். எங்கேயோ போயிருந்து ஒரு மாசத்துக்கப்புறம், இவனுடைய அப்பன் சமாசாரம் சொல்லியனுப்பினானும். 'மானம் போகிறது; அந்தப் பிள்ளையையே அவன் கட்டிக்கொள்ளட்டும். செய்கிற சாங்கியத்தைச் செய்து ஒரு தாலியைக் கட்டி எங்கேயாவது அழைத்துக்கொண்டு தொலையட்டும்' என்று கிழவன் சொல்லியனுப்பின பிற்பாடுதான் இவன் அவளையும் அழைத்துக்கொண்டு போய்ச் சாமிக்கு முன்னாலே தாலியைக் கட்டினானும். இந்த ஊருக்கு வந்து இரண்டு வருஷங்கூடச் சரியாக ஆகவில்லை; அதற்குள்ளே சண்டை. அடே அப்பா, அவள் பண்ணுகிற அட்டகாசம்! இவன் கொடுக்கிறது எட்டணா. அவள் வைத்துக்கொள்கிற பூவே எட்டணாவுக்கு மேலே போகும்போலே இருக்கிறதே! அதற்கும் அவள் துணிக்கும் வேண்டிய பணத்துக்கு என்ன செய்கிறாள்? இவனைப் பார்த்தால் பஞ்சத்திலே அடிபட்டவன் போலே இருக்கிறான். அவளோ ராசாத்தி மாதிரி இருக்கிறாள். எத்தனையோ ராத்திரி ரோட்டு மேடையிலே இவன் விழுந்து கிடக்கிறானே; குடித்தனக்காரன் வேலையா இது? பெண்சாதி படைத்தவன் ராத்திரியிலே வீதியிலே கிடந்து புரளுவானேன்? அதிலே என்னவோ ரகசியம் இருக்கிறது. கட்டின பெண்டாட்டிதான்; மனசு

வைத்து இவனோடே ஓடிவந்த ஆசைக்காரிதான்; ஆனால் என்ன? இன்றைக்கு எப்படி இருக்கிறாள்?

சீ, என்ன மானங்கெட்ட பிழைப்பு? எல்லம்மாளையும் நினைத்து இந்தப் பேய்களையும் நினைப்பதா? இவள் தெய்வம்! பத்தினி.

"நான்தான் பாவி; மகாபாவி; பேய்; பிசாசு. அந்தப் பத்தினியைப் பூ வைத்துக் காக்கிறதுபோலே காப்பாற்ற வேண்டும். அதற்குக் கொடுத்து வைக்காத முரடன்."

அவன் கண்கள் குபுக்கென்று நீரைக் கக்கின. துடைத்துக்கொண்டான். இன்றைக்குச் சரியாக ஒரு வாரம் ஆகிவிட்டது; அவளுக்கு வந்த குளிர் ஜுரம் நின்ற பாடில்லை. இந்த அஞ்சாறு நாளில் அவள் போக்கே மாறி விட்டது. பாவம்! அவள் உடம்பு எப்படி மெலிந்துவிட்டது! எப்படி இருந்தாள்! அவன் குடித்துவிட்டு மதயானையைப்போல வரும்போதுகூட அவள் முகத்தில் அவனை வரவேற்க முன் நிற்குமே, அந்தச் சோபையான சிரிப்பு, அது எங்கே? இனிமையான வார்த்தை எங்கே? இப்போது கூட, "ஐயோ, அடுப்பு மூட்டத் தெரியாத உனக்கு இந்த வேலை வச்சேனே" என்றல்லவா முனகுகிறாள்? அவள் எத்தனை கஷ்டத்தைச் சகித்துக்கொண்டு அவனைக் காப்பாற்றினாள்! அவளுக்கு மனசு குளிரும்படியாக ஒரு காரியம் பண்ணியிருக்கிறானா? இப்போதல்லவா அவனுக்கு அவள் அருமை தெரிகிறது? உலகத்திலே உள்ள பெண் பிள்ளைகளெல்லாம் ஒரு சாதி; அவள் ஒரு சாதி; அவள் தெய்வப் பிறப்பு, பொறுமைசாலியென்று வெறுமனே சொன்னால் போதுமா? அந்தப் பூமாதேவிதான் அவள். எத்தனையோ நாள் அவன் காசு கொடுக்காமல் இருந்திருக்கிறான். அப்பொழுதெல்லாம் அவள் கடனோ உடனோ

வாங்கிக் கஞ்சி காய்ச்சி ஊற்றியிருக்கிறாள். "காசு கொடுத்தது தட்டுக்கெட்டுப் போயிற்றே? மானம் இல்லாமல் காக்கை நீட்டிக்கொண்டு சோறு விழுங்க வந்துவிட்டாயே!" என்று சொல்லுகிற மகராஜிகள் இருக்கிறார்களே; எல்லம்மாள் அப்படி ஏதாவது ஒரு வார்த்தை சொன்னதுண்டா? அவளைத் தப்புச் சொன்னால் வாய் வெந்துவிடும்.

ஏதோ சாமியாகப் பார்த்து அந்த அருமையான பத்தினியை அவனுக்குத் தந்திருக்கிறது. அவனுக்கு அவள் அருமை தெரியவில்லை. இதுவரைக்கும் அவன் கவனிக்காமல் அசட்டையாக இருந்தாலும், இனிமேலாவது புத்தி வரவேண்டும். இதுவரைக்கும் பண்ணின பாவத்துக்குத்தான் சாமி இப்போது தண்டனை கொடுத்திருக்கிறார்; அவனுக்குச் சஷ்டம் தந்திருக்கிறார்!

தண்டனையா? யார் பண்ணின பாவத்துக்கு யார் தண்டனை அடைவது? அவளல்லவா இப்போது கஷ்டப்படுகிறாள்? ஜுரத்தினால் அவதிப்படுகிறாள்? அவனுக்கு என்ன வந்தது? திம்சுக்கட்டைபோல இருக்கிறானே! கடவுளுக்குக்கூடக் கண் இல்லை. அவன் பாவம் பண்ணியிருக்க அவனுக்கு ஒன்றும் வராமல், அவளுக்கல்லவா வியாதியைத் தந்திருக்கிறார்?

இதிலேகூட அவள் பெருமைதான் தெரிகிறது. பாவம் என்னவோ, அவன் செய்த பாவந்தான், அவனுக்குத் தண்டனை கொடுத்தால் அவள் தாங்கமாட்டாள். அந்தத் தண்டனையையும் தானே அநுபவிக்க வேண்டுமென்று சாமியிடம் வரம் வாங்கிக்கொண்டாளோ? ஆகா! என்ன உத்தமமான குணம்!

* *

"ஏன் அழுவறே?" என்ற மெல்லிய தொனி அவன் காதில் விழுந்தபோது அவன் தன் நினைவுக்கு வந்தான். அவன் அழுவதோடு நிற்கவில்லை. விம்மத் தொடங்கினான். "எல்லம்மா! க்க்க்க்"—விக்கி விக்கி அழுகிறான். பேச்சு வரவில்லை.

"ஏன்னு இப்படிப் பச்சைக் கொயந்தை மாதிரி கண்ணிலே தண்ணி விடறே?" என்று மீண்டும் கேட்டாள்.

"நான் பாவி. என்னை மன்னித்துவிடு. இனிமேல் நீதான் எனக்குச் சாமி. நீயே எனக்கு எசமானி. உன் காலிலே விழுந்து...."

"என்ன பைத்தியம், மாதிரி ..." என்று காலை மடக்கிக்கொண்டாள் எல்லம்மாள்.

"எல்லம்மா, நீ இனிமேல் என்னை அடி, உதை, எனக்குப் புத்தி வரட்டும். மறுபடியும் பழையபடி எழுந்திருந்து நடமாடினால் போதும். நானே உனக்குச் சமையல் செய்து போடுகிறேன். நிதமும் ஒரு ரூபாய் கிடைத்தால்கூடப் போதும். அதை வைத்துக்கொண்டு நாம் சுகமாக வாழ முடியும்."

"அடையாத்துச் சாலைக்கு........"—மேலே அவளுக்கு வாய் வரவில்லை. அவனுக்கு ஈட்டியாலே குத்தினது போலே இருந்தது.

இரண்டு கைகளாலும் ஓங்கிப் பளார் பளாரென்று கன்னத்தில் போட்டுக்கொண்டான். "எல்லம்மா, என்னைக் கொன்று போட்டுவிடு. அதனால் பாவம் இல்லை. நான் சாமி சத்தியமாகச் சொல்லுகிறேன். கள்ளுக்கடைப் பக்கமே கண்ணெடுத்துப் பார்க்கமாட்டேன். என் தலைமேல் ஆணை........"

"போதும் போதும்!" என்று தன் மெலிந்த கையைத் தூக்கினாள் எல்லம்மாள். அதை எடுத்து அவன் தன் கண்ணில் ஒத்திக்கொண்டான்.

"கொதிக்கிறதே!" என்றான் அவன்.

"கைக்கு ஜில்லுனு இருக்குதே!" என்றாள் அவள். ஆம், அவன் கண்ணீர் அவள் கையை நனைத்தது.

2

மறுபடியும் வாழ்க்கையைப் புதிதாக ஆரம்பிக்கத் திடமான சங்கற்பம் செய்துகொண்டான் பாவாடை. லோகநாத செட்டியாரிடம் அஞ்சு ரூபாய் கடன் வாங்கி எல்லம்மாளுக்கு வேண்டிய மருந்தை வாங்கிக்கொடுத்து அவள் உடம்பைத் தேற்றிவிட்டால், அப்புறம் சொர்க்க போகம் அவனுக்கு!

"குடிகாரனை யாரும் நம்பமாட்டார்கள்"—இந்த உண்மை அவனுக்கு முன்பே தெரியாதா? நன்றாகத் தெரியும். ஆனால் அவன் மனசில் உறைக்கவில்லை. இப்போது தான் உறைத்தது. எல்லம்மாள் தனக்கு வந்த வியாதிக்கு அஞ்சவில்லை. அடையாற்றுச் சாலைக்கு அவன் போவானே என்றுதான் அஞ்சினாள். அவன் அவள் மனசிலே கொடிய வியாதியை உண்டாக்கிவிட்டான். அவள் அஞ்சுகிறாள்; செட்டியார் அவநம்பிக்கை கொள்கிறார். இரண்டுக்கும் காரணம் ஒன்றுதானே?

அவனுக்கு உடம்பு குலுங்கியது. வியர்த்தது. செட்டியார் கௌரவ மனிதர்களின் பிரதிநிதியாக நின்று, "நீ குடிகாரன்; நம்பத் தகாதவன்; தீண்டத் தகாதவன்; பேசத் தகாதவன்; உபகாரம் பண்ணத் தகாதவன்" என்று குற்றம் சாட்டுவதுபோல இருந்தது. குடிகாரர்கள் பெண்

டாட்டியின் பெயரைப் பணயமாக வைக்கிறவர்கள் என்றல்லவா அவர் சொல்லுகிறார்! அதாவது, பெண்டாட்டியின் பெயருக்கு மாசு தேடும் அயோக்கியர்கள் என்றுதானே அர்த்தம்? ஆகவே, பெண்டாட்டியோடு வாழத் தகாதவன் என்ற குற்றமும் முன்னே சொன்னதனோடு சேரவேண்டுமல்லவா?

செட்டியார் சொல்வதில் தவறு உண்டா? இல்லவே இல்லை. செட்டியார் ஒருவர் மட்டுமா அவனைக் குறை கூறுகிறார்? எங்கே போனாலும் யாரைப் பார்த்தாலும், "நீ குடிகாரன்; சொன்ன சொல்லைக் காப்பாற்ற மாட்டாய். உன்னோடு பேசுவது பாவம்" என்று சொல்லத் தயாராக இருக்கிறார்கள். வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும், அவர்களுடைய உள்ளம் சொல்லுகிறது; முகம் சொல்லுகிறது.

உலகம் முழுவதும் அவனைக் குடிகாரன், ஆதலால் நம்பத் தகாதவன் என்று குற்றம் சாட்டத் தயாராய் இருக்கிறது போலும். அவன் நெற்றியிலே குடிகாரன் என்று எழுதி ஒட்டியிருக்கிறதா, என்ன? உடம்பு வியர்த்தது; நெற்றியைத் துடைத்துக்கொண்டான். அப்படி ஏதாவது ஒட்டியிருந்தால் அதைத் துடைப்பவனைப்போல இருந்தது.

"எசமான், சாமி சத்தியமாய்ச் சொல்கிறேன். நான் இதுவரையில் குடித்தது என்னவோ மெய்தான். இனிமேல் குடிக்கமாட்டேன். இரண்டாந் தடவையாகச் சத்தியம் செய்கிறேன்" என்றான் பாவாடை.

அவர் லேசில் பணம் கொடுப்பாரா? எதிலும் 'கமிஷன்' கேட்கும் தொழிலல்லவா அவருக்கு? நயமாகப் பேசினார்.

"எனக்கு வட்டிகிட்டி வேண்டாம். நீ ஏழை; பிழைத்துப் போ. சமயத்துக்கு ரிக்ஷாக் கொண்டுவா. நான் இனமாக ஏறவில்லை. இன்னொருத்தனுக்குக் கொடுக்கிற காசை உனக்குக் கொடுக்கிறேன். நீ புத்தியாகப் பிழைத்தால் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன்."

இந்தத் தேன்போன்ற மொழிகளோடு ரூபாய் ஐந்து கடனாகக் கொடுத்தார் செட்டியார்.

அவனுக்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லை இல்லை. வீட்டிற்கு ஓடினான். எல்லம்மாளிடம் குதூகலத்தோடு பேசினான்.

"அஞ்சு ரூபாயைத் திருப்பித் தருகிற வரைக்குமாவது கள்ளுத் தண்ணீரை மறந்து இருக்க வேண்டும்" என்று அவள் ஞாபகம் மூட்டினாள்.

"இந்தா எல்லம்மா, திருப்பி அப்படிப் பேசாதே. நான் என் ஆயுசுக்கும் அந்தச் சனியன் முகத்தில் விழிக்க மாட்டேன்" என்று சொல்லிவிட்டுக் கடைக்குப் போனான். வைத்தியனிடம் போனான். மருந்து வாங்கினான். எல்லம்மாளுக்கு உபசாரம் செய்தான்.

ஆண்டவன் கருணை பாலித்தான். எல்லம்மாள் நோய் நீங்கி எழுந்தாள்.

கடனைக் கட்ட வேண்டுமென்ற ஒரே தீவிர நோக்கத்தில் அவன் உழைத்தான். செட்டியார் சமயத்தில் உதவினாரென்ற நன்றியறிவினால் அவர் எப்போது கூப்பிட்டாலும் போய் ரிக்ஷாவில் ஏற்றிக்கொள்வான்.

லாபமே கண்ணாக வாழ்கிறவர் செட்டியார். நாலணாக் கொடுக்கவேண்டிய இடத்தில் இரண்டணாக் கொடுப்பார். பாவாடை ஒன்றும் பேசாமல் வாங்கிக்கொள்

வான். இன்னும் சில சமயங்களில் ஓரணாக்கூட வாங்கிக் கொள்வான். சில சமயங்களில் நாள் முழுவதும் அவர் வேலை வாங்குவார். ஒரு மணி இரண்டு மணி வெளியிலே சம்பாதிக்க நேரம் கிடைக்காது.

"எசமான், கொஞ்சம் பாங்கி முதலியார் வரச் சொன்னார்; போய்விட்டுக் கால்மணியில் வருகிறேன்" என்பான் அவன்.

"நான் அவசரமாகத் திருவல்லிக்கேணி போக வேணும். பாங்கி முதலியார், கடைக்காரப்பிள்ளை எல்லாரும் அன்றைக்கு வரவில்லையே! பணம் வேண்டுமென்று கெஞ்சினை அன்றைக்கு அவர்களிடம் போயிருக்கலாமே! கடன் கொடுக்கச் செட்டியார்; சவாரி பண்ண முதலியாரா?" என்று கேட்பார் செட்டியார்.

அவர் அவனுக்கு ஐந்து ரூபாய் கடனைக் கொடுத்து விட்டதனால் அவனையே விலைக்கு வாங்கியதாக எண்ணினார். அதிகாரம் எவ்வளவு பண்ணலாமோ, அவ்வளவும் பண்ணினார். கூலியை மிகவும் குறைத்துக் கொடுத்தார். அவன் எவ்வளவு நாள் அதைப் பொறுப்பான்!

"சாமீ, எட்டணச் சவாரியை விட்டுவிட்டு வந்தேன். வேறே எவனாவது இங்கே வந்தால் பத்தணா வாங்கியிருப்பான். மூன்றணக் கொடுக்கிறீங்களே! நியாயமா?" என்று கேட்பான்.

"நியாயமா பேச வந்துவிட்டாய்? சமயத்துக்கு ஏற்று கிறேன் என்று அன்று எந்த நாக்கிலே சொன்னாய்? நீ வாங்கின கடனுக்கு வட்டியா கட்டுகிறாய்? அல்லது நான் காசில்லாமல் இனமாகச் சவாரி பண்ணுகிறேனா? காலம் கலிகாலமப்பா, கலிகாலம்! பணத்தையும் வாங்கிக்கொண்டு

எனக்கு நியாயம் சொல்ல வருகிறாயே, அதுதான் விசேஷம்'' என்று சீறுவார் செட்டியார்.

செட்டியாரின் சுயரூபம் இப்போது தெரிய வந்தது. 'இவருக்குப் பணத்தைச் சீக்கிரமாகத் திருப்பிக்கொடுத்து விட வேண்டும்' என்று உறுதி செய்துகொண்டான் பாவாடை.

செட்டியார் வரச்சொல்லிப் போயிருந்தான். அன்றைக்கு வாசலில் ஒரு மணியாகக் காத்துக்கொண்டிருந்தான். திண்ணையிலே ஒரு சிநேகிதரோடு பேசிக்கொண்டிருந்தார் செட்டியார்.

''நீங்கள் பணம் வாங்கி மூன்று மாச காலம் ஆகிவிட்டது. அடுத்த மாசமே தருவதாகச் சொன்னீர்கள். கைம்மாற்றாகக் கேட்டதனால் புரட்டிக் கொடுத்தேன். அந்தப் பணம் என் சொந்தக்காரருடையது'' என்றார் வந்தவர்.

''என்னப்பா, இல்லாத அளப்பெல்லாம் அளக்கிறாய். கைமாற்றாக வாங்கினால் என்ன? நான் ஊரை விட்டா ஓடிப் போகிறேன்? உன்னிடம் பணம் இருந்தால் இவ்வளவு நாளில் செலவழித்திருப்பாய். என்னிடம் இருக்கிறதோ, அது உருப்படியாக இருக்கிறது. உங்கள் தகப்பனார் என்னை நம்பி எவ்வளவோ கொடுத்திருக்கிறார், வாங்கி இருக்கிறார். நீ சிறுபிள்ளை; ஆள் நிதானம் தெரிவதில்லை'' என்று அலக்ஷிய பாவத்தோடு பேசினார் செட்டியார்.

''அப்படி இல்லை, ஊரார் பணத்தை வைத்துக்கொள்வது எப்போதும் ஆபத்து. என்னிடம் பணம் கொடுத்தவர்கள் வந்து தொந்தரவு செய்கிறார்கள். ஒரு தடவை

நாணயம் போய்விட்டால், பிறகு வராது. அதனால்தான் உங்களுக்கு ஞாபகப்படுத்த வந்தேன்."

"சரி, சரி, பார்க்கிறேன். நான் அவசரமாக வெளியிலே போகவேண்டும்" என்று சொல்லிச் செட்டியார் அவரை அனுப்பிவிட்டார். ஆனால் வேறு யாரோ ஒருவர் கையில் ஒரு கற்றை காகிதத்தை வைத்துக்கொண்டு வந்து சேர்ந்தார்.

"என்ன ஸார், மூன்று மாசத்துப் பில் பாக்கி நிற்கிறது. டாக்டர் கொஞ்சம் ஞாபகப்படுத்தச் சொன்னார்" என்று வந்தவர் செட்டியார் கையில் ஒரு பில்லைக் கொடுத்தார்.

செட்டியார் அதைத் தலைகுனியாமலே கம்பீரமாகப் பார்த்தார். "பூ! இதுதானா? நூறு ரூபாய்தானே ஆகியிருக்கிறது? இதுதானா பிரமாதம்? என்ன ஐயா, உங்கள் டாக்டர் பெரிய மனுஷர்களிடமெல்லாம் பழகுகிறார்; இந்த நூறு ரூபாய் இல்லாமல் கஷ்டப்படுகிறாரா, என்ன? இப்போதென்ன அவசரம்? சேர்ந்தாற்போலே கொடுத்துவிடலாமென்று எண்ணியிருக்கிறேன். நாலு ரிக்ஷாக்காரர்களுக்குக் கைம்மாற்றுக் கொடுத்த பணம் காணுதே இது" என்று சொல்லிக்கொண்டே ரிக்ஷாக்காரப் பாவாடையைப் பார்த்துச் சிரித்தார் செட்டியார். பில் கலெக்டரும் திரும்பிப் பார்த்தார்.

அவர் போனவுடன் மளிகைக் கடைப் பையன் வந்தான்; "கடைக்காரச் செட்டியார் சாமான் வாங்கின ரூபாய் ஐம்பதும், கைம்மாற்று வாங்கின ரூபாய் நூறும் உடனே வேண்டுமென்று சொல்லச் சொன்னார். கைம்மாற்று ரூபாயையாவது உடனே வாங்கி வரச் சொன்னார்", என்றான்.

"நான்தான் அன்றைக்கே சொன்னேனே; கைம்மாற்றுப் பணம் எங்கே அப்பா போகிறது! சர்க்கரை, அரிசி அது இது என்று மொத்தமாகச் சரக்கு எடுக்கிறபோது வந்து கேட்டால் கொடுக்கத்தானே வாங்கினேன்? சமயத்துக்கு உபகாரமாக இருக்குமே. சரி, நீ போய்ச் சொல்லு, அவசரமாக எங்கேயோ போகிறாரென்று சொல்லு..........

"ஏ பாவாடை, பாவம்! நீ இரண்டு மணி நேரமாகக் காத்திருக்கிறாய்..........பையா, நாழிகையாகிவிட்டது. நான் அவசரமாகப் போகவேண்டும்; சாயந்திரம் செட்டியாரைப் பார்க்கிறேனென்று சொல்" என்று சொல்லியபடியே, பையன் பதிலை எதிர்நோக்காமல் ரிக்ஷாவில் ஏறிக்கொண்டார்.

பாவாடை நினைக்கிறான்: 'நான் வாங்கின ஐந்து ரூபாய்க்கு என் ரத்தத்தைச் சுண்டச் செய்து வேலை வாங்குகிறாரே; இவர் வாங்கின இத்தனை கடனையும் பஞ்சு போல எண்ணி இறுமாந்து கிடக்கிறாரே!'

* * *

மறுநாள் பாவாடை செட்டியாரிடம் வந்தான். ரிக்ஷாவோடு வரவில்லை. கையை வீசிக்கொண்டு வந்தான்.

செட்டியார் வாசலில் நின்றபடியே, "ஏன், ரிக்ஷா இல்லையா?" என்று அதிகாரத்தோடு கேட்டார்.

"இதை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லியபடியே ரூபாயும் சில்லறையுமாக அவர் காலடியில் பணத்தைக் கொட்டினான் பாவாடை. "இதிலே பத்து ரூபாய் பணம் இருக்கிறது. உங்கள் பணம் ஐந்து ரூபாய்; அதற்கு வட்டி ஐந்து ரூபாய். இனிமேல் என்னைக் கூப்

பிடாதீர்கள். என் ரிக்ஷாவையும் மறந்துவிடுங்கள்" என்று பணிவோடு சொல்லிவிட்டுப் பணத்தைப் போட்டு வந்த துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டான்; திரும்பிப் பாராமல் புறப்பட்டுவிட்டான்.

தமக்குக் கிடைத்த வேட்டையை நழுவவிட்ட கிழப் புலியைப்போலே செட்டியார், தலை நிமிர்ந்தபடியே செல்லும் பாவாடையின் முதுகைப் பார்த்துக்கொண்டு நின்றார்.

# தீபாவளி விருந்து

கோபாலன் தகப்பனார் இறந்து இன்னும் ஒரு வருஷம் ஆகவில்லை. அவர்கள் வீட்டில் பண்டிகையோ விசேஷமோ எதுவும் ஒரு வருஷ காலம் வரையில் நடத்தக்கூடாதென்பது கோபாலனுடைய தாயின் கட்டளை. கர்நாடக வைதிகக் கொள்கைகளில் ஊறிப்போன அவளுக்குத் தங்கள் குடும்பத்தின்மேல் பிதுருக்களின் சாபம் விழுந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம். "ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு" என்று வளர்த்த பிள்ளை கோபாலன். ஏதோ பெரியவர்கள் புண்ணியத்தினால் கிட்ரடன் கம்பெனியில் நல்ல வேலையாகி, நாலுபேர் கண்டால் நின்று வார்த்தை சொல்லும் கௌரவத்தைப் பெற்றிருக்கிறான். பந்துக்களைக் காட்டிலும் நண்பர்களுடைய கூட்டந்தான் அவனுக்கு அதிகம்.

கல்யாணம் ஆகி இரண்டு வருஷங்கள் ஆகியிருக்கின்றன. இன்னும் கடவுள் கண் திறந்து பார்க்கவில்லை. "அவர் இருக்கும்போது ஒரு குழந்தை பிறந்து பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. அவரே வந்து பிறக்கப் போகிறார்" என்று கோபாலன் தாய் சொல்லிக்கொண்டிருப்பாள். அவரே வந்து பிறக்க வேண்டுமானால், பிதுருக்கள் வாழும் லோகத்தில் நல்ல பெயர் வாங்க வேண்டாமா? இல்லாவிட்டால் அவரை அங்கிருக்கும் பிதுருக்கள் இந்த வீட்டுக்கு அனுப்ப மாட்டார்களே!

இந்த வருஷம் தீபாவளி இல்லை. அதனால் அவர்கள் வீட்டில் கலகம் உண்டாக நியாயம் இல்லை. குழந்தை

குட்டிகள் இருந்தால் அதற்கு இடம் உண்டு. கோபாலன், அவன் மனைவி, தாய் என்ற மூன்று பேரும் குழந்தைப் பருவம் தாண்டி எவ்வளவோ வருஷ காலம் ஆகிவிட்டதே. அதுவும் அம்மாவின் வாக்கை அநுசரிப்பதில் கோபாலன் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பவன். பண்டிகைகளை ஒரு வருஷத்திற்குக் கொண்டாடக்கூடாது என்ற திட்டத்தை அவன் மனப்பூர்வமாக நம்பினுனென்று சொல்வதற்கில்லை. அம்மாவைத் திருப்திப்படுத்துவதற்காக அவன் அந்தத் திட்டத்தினின்றும் பிறழாமல் நடந்து கொண்டான்.

மறுநாள் தீபாவளி. ஊர் முழுவதும் அந்த 'ஒரு நாள் வாழ்வு'க்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தது. காசை வீணுக்காமல் 'புகையாக்கும்' கைங்கரியத்துக்குக் குழந்தைகளும், அவர்கள் பேரைச் சொல்லிக்கொண்டு வயசான குழந்தைகளும் முன்னேற்பாடுகள் செய்தார்கள். நெய்க்கும் சர்க்கரைக்கும் என்றும் இல்லாத கிராக்கி உண்டாகிவிட்டது. ஜவுளிக் கடைகள் உலகத்தில் பெண்மணிகளே 'மெஜாரடி' கட்சி என்பதை நிரூபித்துக்கொண்டிருந்தன.

இந்தக் கோலாகலத்துக் கிடையில் கோபாலன் குடும்பத்தில் அமைதியே நிலவியது. அவன் தாய் மறுபடியும் அவனுக்கு உபதேசம் செய்ய ஆரம்பித்தாள். "கோபாலா, நான் இப்படிச் சொல்கிறேனே என்று நினைக்காதே. பெரியவர்கள் எப்படிச் செய்தார்களோ அப்படிச் செய்தால்தான் நம் குடும்பத்துக்கு க்ஷேமம். தீபாவளி நமக்குப் பெரிய பண்டிகை. உடனே அமாவாசை வந்து விடுகிறது. அமாவாசை பிதுருதினம். தீபாவளியென்று சொல்லி உன்னுடைய சிநேகிதர்கள் அழைப்பார்கள். பருப்பும் பாயச

மும் நாம் சாப்பிடக்கூடாது. பிழைத்துக் கிடந்தால் அடுத்த வருஷம் நன்றாகக் கொண்டாடலாம்" என்று அவள் சொன்னாள்.

"சரிதான், அம்மா!" என்று நல்ல பிள்ளையாகிய கோபாலன் ஒப்புக்கொண்டான்.

அவன் வாய் மூடவில்லை; அதற்குள் அவனுடைய கம்பெனி மானேஜர் ராமதுரை வந்தார். "என்ன கோபாலன், நாளைக்கு உங்கள் வீட்டில் தீபாவளி இல்லையாமே! நாளைக்கு நம் வீட்டுக்கு வந்துவிடும். அங்கேயே சாப்பிடலாம்" என்று சொல்லிக்கொண்டே வந்தார். அவர் மானேஜர்; அவன் உதவி மானேஜர். இரண்டு பேரும் அன்னியோன்னியமாகப் பழகுகிறவர்கள்.

கோபாலன் பேசவில்லை; அவன் தாய் சமையலறைக்குள் இருந்தாள். அவள் காதில் மானேஜர் கூறிய வார்த்தைகள் விழுந்ததும் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. கோபாலன் பதில் சொல்லாமல் இருக்கவே ராமதுரை, "என்ன யோசிக்கிறீர்? தம்பதி சமேதராக வந்துவிடும்; அவர்களுக்குத் தனி அழைப்பு வரும். நான் போய் அனுப்புகிறேன்" என்று வற்புறுத்தினார்.

கோபாலன், "இல்லை; அப்பா காலமாகி இன்னும் ஒரு வருஷம் ஆகவில்லை; பண்டிகை கொண்டாடுவது உசிதம் அல்ல........" என்று இழுத்தாற் போலப் பேசினான்.

"அதனால்தானே நான் கூப்பிடுகிறேன்? அடுத்த வருஷம் உம்மைக் கூப்பிட்டால் வருவீரா? இந்த வருஷம் நேர்ந்து கொண்டது. உம் வீட்டில் பண்டிகை இல்லை.... சரி, வந்து விடுகிறீரா? சீக்கிரம் சாப்பாடு ஆகிவிடும்."

உள்ளே இருந்து குரல் வந்தது; "கோபாலா, நாளைக் குப் பண்டிகை நடக்கும் வீட்டிலே சாப்பிடுகிறது அவ்வளவு உசிதம் அல்ல. வேறே ஒருநாள் போனால் போகிறது" என்று முன் ஜாக்கிரதையோடு அவன் தாய் பேசினாள்.

"பண்டிகை நடப்பதனால்தானே நான் கூப்பிடுகிறேன்? வெறும் நாளாக இருந்தால் உம்மை எதற்காகக் கூப்பிடப் போகிறேன்?....என்ன யோசனை? சாப்பிடுவதற்குக்கூடக் கிராக்கி பண்ணிக்கொள்கிறீரே!"

"அப்படி இல்லை, நீங்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. பண்டிகை நாளில் பருப்புப் பாயசத்தோடு சாப்பிட்டால் பிதுருசாபம் வந்துவிடும் என்று அம்மா சொல்கிறாள்."

"இதுதானே? உம்முடைய இலையில் பருப்போ, பாயசமோ போட வேண்டாமென்று உத்தரவு போட்டு விடுகிறேன். வாரும், தட்டாமல் வாரும்."

கோபாலன் தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டான். "எனக்காகக் காத்துக்கொண்டிருக்கவேண்டாம். முடிந்தால் வருகிறேன்" என்று ஒருவாறு பதில் சொல்லி அவரை அனுப்பினான்.

* * *

அவர் எழுந்து போனவுடன் அவன் தாய் பிரசன்னமானாள்; "எனக்குத் தெரியுமே! வெள்ளைக்காரன் கம்பெனியில் வேலை பார்த்தால் ஆசாரம், அநுஷ்டானம் எல்லாம் போக வேண்டியதுதான். இந்த மானேஜர் எதற்காக உன்னைத் தொந்தரவு செய்கிறார்? அவர் ஆபீஸில்தான் உனக்கு மேலதிகாரியே ஒழிய வீட்டிலே

கூட உனக்கு எஜமானு?" என்று கோபத்தோடு கேட்டாள். பிதுர் லோகத்தில் தங்கள் குடும்பத்தைப்பற்றி முணுமுணுக்கத் தொடங்கியது அவள் காதில் கேட்டிருக்குமோ, என்னவோ!

"என்ன, அம்மா அப்படிச் சொல்லுகிறுய்? அவர் எவ்வளவு நல்லவர்! மானேஜராவது, உதவி மானேஜராவது! எங்களுக்குள் வித்தியாசமே இல்லையே! மேலதிகாரியென்ற ஞாபகம் அவருக்கு இருந்தால் நம்மைத் தேடிக்கொண்டு நேரில் வருவாரா? ஒரு காக்காய் காலில் சீட்டெழுதி அனுப்ப மாட்டாரா? அவர் என்னிடம் எவ்வளவு அந்தரங்கமாகப் பழகுகிறுர்! நல்ல மரியாதை தெரிந்த மனுஷர். 'இதெல்லாம் என்ன குருட்டு நம்பிக்கை!' என்று அவர் சொன்னுரா? என்மேல் அபிமானத்தினுல் கூப்பிட்டார். அதைத் தப்பாக எண்ணிக் கொள்ளலாமா?"

"அப்படியானுல் நீ அவர் வீட்டில் விருந்து சாப்பிட வேணுமென்று சொல்கிறுயா?"

"எனக்கு விருந்து சாப்பிடவேணுமென்ற ஆசை இல்லை, நான் என்ன குழந்தையா? அவர் வந்து கூப்பிட்டாரே; மரியாதைக்கு வருவதாகச் சொல்லக் கூடாதா? ராத்திரியே போய் ஏதாவது சாக்குச் சொல்லித் தட்டிக் கழித்து வருகிறேன்."

கோபாலன் குரல் கம்மியது. இருதலைக்கொள்ளி எறும்புபோல மாட்டிக்கொண்டான்.

* * *

ஐந்து நிமிஷத்தில் மானேஜரின் மனைவி அங்கே வந்து சேர்ந்தாள். தீபாவளி விருந்துக்குக் கோபாலன் மனைவியை அழைத்தாள். அவன் தாய் மிகவும் தந்திர

மாகப் பேசி அவள் வர முடியாது என்பதைத் தெரிவித்து விட்டாள். கோபதாபம் இல்லாமல் நியாயமென்று படும்படி சொன்னாள். வந்தவள், "சரி, அவரையாவது அனுப்புங்கள்" என்று ஒரு வார்த்தை போட்டுவிட்டுப் போனாள்.

அவளோடு நேரிலே பேசினபோது அவள் எவ்வளவு அபிமானத்துடனும் அன்புடனும் அழைத்தாளென்பது கோபாலன் தாய்க்குத் தெரிந்தது. 'நல்ல மனிதர்கள்' என்று நிச்சயம் செய்துகொண்டாள். அவளுக்கு அவர்களோடு பழக்கம் இல்லை. எங்கே பழக்கம் செய்து கொள்வது? அவள் கோலம் மாறி ஒரு வருஷம் ஆக வில்லையே! அந்தத் தடையினால் சகஜமாக எல்லோருடனும் பழகிப் பேச வழியில்லாமல் இருக்கிறதே!

"கோபாலா, அந்தப் பெண் எத்தனை ஆசையாக அழைத்தாள்! சாதாரண நாளாக இருந்தால் நான் அனுப்பி யிருப்பேன். அவள் வேறே உன்னை வரும்படி ஞாபகப் படுத்தினாள்" என்றாள் தாய்.

"அதைப்பற்றி என்ன அம்மா இப்போது?" என்று பராமுகமாகப் பதில் சொன்னான் கோபாலன்.

தன் பிள்ளை மரியாதையையும் தாக்ஷிண்யத்தையும் பாராட்டுகிறவன் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். இப்போது அவன் மனம் புண்பட்டிருக்கவேண்டும் என்று தெரிந்துகொண்டாள்: மானேஜர் வந்தபோது அவள் மனம் இருந்த நிலை வேறு; "இப்போதுதான் சொல்லிக் கொண்டிருக்கிறோம்; உடனடியாக இதோ விருந்துக்குக் கூப்பிட வந்துவிட்டானே! இது அடுக்குமா? நியாயமா? தர்மமா? பிதுர் சாபத்தை யார் வாங்கிக் கட்டிக்கொள் வது?" என்றெல்லாம் அவள் எண்ணினாள்.

மானேஜர் மனைவி வந்தபோது அவள் உள்ளத்தின் நிலை மாறுதல் அடைந்திருந்தது. கோபாலன் சொன்ன சமாதானங்கள் அவளுடைய கோபத்தை ஓரளவு ஆற்றின. அதோடு வந்தவளுடைய சுபாவத்தை உணர்ந்தபோது சாந்தம் உண்டாயிற்று. இப்போது தன் 'குழந்தை' மனசுக்கு வருத்தம் ஏற்பட்டுவிட்டது என்பதைக் கவனித்தபோது அவள் ஒரு படி இறங்கியே வந்துவிட்டாள்.

"கோபாலா, நீ வருத்தப்படாதே! மானேஜர் நல்லவராக இருக்கலாம். நான் தப்பாக எண்ணிவிட்டேன். நீ மாத்திரம் அவர் வீட்டுக்குப் போய்விட்டு வா. ஆனால் பருப்பு பாயசம் மாத்திரம் சாப்பிடவேண்டாம்!"

"அந்தத் தொல்லை எதற்கு, அம்மா? நான் வரவில்லை என்று சொல்லி அனுப்பிவிடுகிறேன்."

* * * *

இப்போது காற்றுத் திசை மாறி அடித்தது.

"அப்படி அல்ல; மரியாதைப்பட்ட மனுஷர் என்று சொல்கிறாய். அவர் பேச்சைத் தட்டுவது நல்லதல்ல. நீ போய்க் கையை நனைத்துவிட்டு வந்துவிடு....எனக்கு என்ன தெரியும், அடுப்பங்கரையில் இருப்பவளுக்கு? நாலு பேரோடு பழகுகிறவன் நீ. நாளைக்கு அவர் முகத்தில் விழிக்கவேண்டியவன் நீ. ஆகையால் நீ நாளைக்குப் போய்விட்டு வா. தட்டவேண்டாம். பாயசத்தை மாத்திரம் இலையில் ஒதுக்கிவைத்துவிடு."

இப்போது ஸ்வரம் இறங்கிவிட்டது. பருப்பும் பாயசமும் சேர்ந்து பஹிஷ்காரம் செய்தது போய், பாயச பஹிஷ்காரம் மாத்திரம் நின்றது.

"பார்க்கலாம்" என்று சொல்லிக் கோபாலன் வெளியே போய்விட்டான்.

* * * *

தீபாவளி; ஊர் முழுவதும் திமிலோகப்படுகிறது. நண்பர்கள் போட்டி போட்டுக்கொண்டு கோபாலனை அழைத்தார்கள். காலையில் எழுந்து ஸ்நானம் செய்துவிட்டுப் புறப்பட்டான். முதலில் இவனுடைய காலேஜ் நண்பன் வைத்தா வீட்டுக்குப் போனான். அவன் ஓடிவந்து இவனைக் கட்டிக்கொண்டான். "கோபால், இன்றைக்கு நம் வீட்டில் கதர் தீபாவளி. ஒரு கஜங்கூட வேறே துணி எடுக்கவில்லை" என்று ஆனந்தம் கொப்புளிக்கச் சொன்னான்.

"அப்படியா ? அந்தப்புரத்துக்குக்கூடக் கதர்தான் வாங்கினாயோ ?" என்று கிண்டலாகக் கேட்டான் கோபாலன்.

"அந்தப்புரத்திலே கதர் நுழைந்தால் நாளைக்கே சுயராஜ்யம் வந்துவிடாதா ? அங்கேயெல்லாம் நம்முடைய உத்தரவு செல்லாது" என்று பதில் வந்தது. அதற்குள் தட்டுத் தட்டாய் வகை வகையான பக்ஷணங்கள் வந்து கோபாலன் முன் காட்சி அளித்தன.

"எங்கள் மாமியார் அகஸ்மாத்தாக வந்திருக்கிறாள். கிராமத்திலிருந்து சுத்தமான நெய் கொண்டுவந்தாள். இவ்வளவு விதமான பக்ஷணங்களை நம் வீட்டில் யார் செய்கிறார்கள் ? குழந்தைக்குக் குளிப்பாட்டிச் சோறூட்டிக் காப்பாற்றுவதே பிரம்மப் பிரயத்தனமாக இருக்கிறதே !"

"சரி, ஆரம்பித்துவிட்டாயா ? நல்ல நாளும் அதுவுமாக உன் குற்றச்சாட்டு வேண்டாம்."

சம்பாஷணை படர்ந்துகொண்டே சென்றது. பேச்சுச் சுவாரஸ்யத்தோடு தட்டிலிருந்த பக்ஷணங்களும் காலி யாயின. காபி சாப்பிட்டுவிட்டுக் கோபாலன் புறப் பட்டான். "சாப்பாடு?" என்ற கேள்விக்கு, "வேறு இடம்" என்று வேகமாகப் பதில் அளித்துவிட்டு அவன் வேறு நண்பர்களை நோக்கிப் புறப்பட்டான்.

அவனுடைய அத்தங்காள் வீட்டுக்குப் போனான். அஞ்சு நிமிஷப் பேச்சுத்தான். அதற்குள் இரண்டு தட்டுப் பக்ஷணத்தை விழுங்கிவிட்டான். அடுத்தபடி சிநேகிதன் தண்டபாணி வீடு. அங்கே எல்லாம் தேங்காய் எண் ணெய் மயம். அங்கும் கொஞ்சம் ருசி பார்த்தான்.

* * * *

மத்தியான்னம் மானேஜர் வீட்டில் சாப்பாடு. பாயசத்தை ஒதுக்குவதாவது! அங்கே பாயசமே இல்லை; சர்க்கரைப் பொங்கல்தான். "என்ன ஸார், இந்தக் குருட்டு நம்பிக்கையெல்லாம்? நீங்கள் இதைச் சாப் பிட்டதாகச் சொல்லவேண்டாமே!" என்று சிரித்துக் கொண்டே உபசரித்தார் மானேஜர். ஒரு பதார்த்தமும் குறைவின்றி விருந்துண்டான்.

பிற்பகல் சில நண்பர்கள் வீட்டுக்குப் போனான்; தீபாவளி அழைப்பு வந்ததற்காகவும், பார்க்கவேண்டும் என்பதற்காகவும் சில வீடுகளுக்குப் போனான். ஆபீஸ் விஷயமாக இரண்டோரிடங்களுக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மாமனார் ஊரிலிருந்து எழுதிய சமாசாரத்தைக் கவனிக்கச் சில பேரைப் பார்க்கவேண்டி யிருந்தது. எல்லாம் லீவு நாளிலேதான் கவனிக்கவேண் டும். தீபாவளியில் எல்லோரும் அவரவர்கள் வீட்டில் இருப் பார்கள். மிகவும் சௌகரியமான தினம் அல்லவா?

போன இடங்களிலெல்லாம் அவன் தன் தந்தை இறந்துபோனதையும் இப்போது தகப்பன் இல்லாப் பிள்ளையாக இருப்பதையும் பிரகடனப்படுத்த வேண்டி நேர்ந்துவிட்டது. "என்ன வேஷ்டி வாங்கினீர்கள் ?" என்று எடுத்தவுடன் கேட்டால் வேறு என்ன சொல் வது? அதோடு விட்டுவிடுகிறார்களா ?

"அப்படியானால் உங்களுக்குத் தீபாவளி இல்லை என்று சொல்லுங்கள். அடாடா ! முன்பே தெரிந்திருந் தால் நம் வீட்டில் சாப்பிடக் கூப்பிட்டிருப்பேனே.... சொல்லாமல் இருந்துவிட்டீர்கள்....கமலம் ! எங்கே இந்த மாமாவுக்குப் பக்ஷணம் கொண்டு வா !"

"மானேஜர் வீட்டிலேதான் சாப்பிட்டேன். வேண் டிய மட்டும் பக்ஷணம் தின்றாகிவிட்டது. இனி என் வயிற்றில் இடமே இல்லை. மன்னிக்கவேணும்."

"அப்படிச் சொல்லுங்கள். மானேஜர் பெரியவர், அவர் வீட்டில் சாப்பிடுவீர்கள். நம் வீட்டில் எல்லாம் சாப்பிட உங்களுக்குத் தோன்றுமா? கிடக்கிறது. ஏதோ இந்த அல்ப பக்ஷணத்தையாவது எடுத்துக்கொள்ளுங்கள்."

"மன்னிக்கவேணும். என் வயிற்றிலே துளிக் கூட இடம் இல்லை. இதுவரையில் பத்து வீட்டுப் பக்ஷணம் என் வயிற்றில் போயிருக்கிறது."

"கிடக்கிறது ஸார், பத்தோடு பதினொன்றாக இதை யும் போட்டு வையுங்கள். ஒன்றும் பண்ணாது. சுத்த மான நெய்."

அநேகமாகச் சம்பாஷணை இந்தத் தோரணையிலே நடைபெறும். மறுக்க முடியாமல் ஏதாவது ஒரு விள்

ளையாவது கோபாலன் வாயில் போட்டுக்கொள்ளும் படியான நிர்ப்பந்தம் வந்துவிடும்.

* * * *

இப்படியாகத் தீபாவளி பண்டிகை கொண்டாடியவர்களுக்கு ஒரு வீட்டு விருந்து, அதைக் கொண்டாடாதவர்களுக்கு ஊரெல்லாம் விருந்து என்று கோபாலன் தெரிந்துகொண்டான். வீட்டுக்கு வந்து ஒன்பது மணிக்குப் படுத்தான். "பசிக்கவில்லை; கொஞ்சம் வெந்நீர் தா" என்று சொல்லி வாங்கிக் குடித்துவிட்டுப் படுத்தான். வயிறு கட புடா என்றது; தலை வலித்தது. தூக்கம் வராது போல் இருந்தது.

அன்று ராத்திரி அவன் வயிறு புரட்சி செய்ய ஆரம்பித்துவிட்டது. அஜீர்ணம், அதன் பயனாகப் பேதி, அதன் விளைவாகப் பலஹீனம், அதன் பிறகு லேசான ஜ்வரம்—இத்யாதி. காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்காமல் படுத்திருந்தான். அவன் தாய்க்கு இரவு தான் சிரமப்பட்டதைத் தெரியாமல் மறைத்தான். அவள் சமையல் அறையிலேயே படுத்துக்கொண்டாள்.

காலையில் எழுந்து வந்து பார்த்தாள். கோபாலன் ஜுரத்தோடு படுத்திருக்கிறான்! "நான் அப்பொழுதே சொன்னேனே, வேண்டாம் வேண்டாமென்று! ஐயோ! பிதுர் சாபம் பொல்லாததாயிற்றே....பெரியவர்களெல்லாம் தெய்வமாக இருந்து குழந்தையைக் காப்பாற்ற வேணும் அடியே, மஞ்சள் துணியைக் கொண்டு வா; ஒரு ரூபாயை எடுத்து முடி. இந்த அபசாரத்தைப் பொறுத்துக் கொள்ளவேணுமென்று வேண்டிக்கொள்...."என்று அவன் தாய் ஆவேசம் வந்தவளைப்போல உத்தரவு போடலானாள்.

# புதிய படம்

ஜமீன்தார் காமைய நாயக்கர் ஜமீனை ஏற்றுக் கொண்டபோது எல்லாம் ஏக களேபரமாக இருந்தது. இடையிலே இரண்டு தலைமுறையாக ஜமீனின் நியாயமான வாரிசுகள் ஆட்சியை நடத்தாமல் யாரோ அவாந்தரமாக வந்தவர்கள் தங்களுடைய சுகத்தை மாத்திரம் கவனித்து இன்பம் அநுபவித்து வந்தார்களே யொழிய, எவ்வளவோ காலமாகத் தமிழ்நாட்டு ஜமீன்களுள் ஒன்றாக இருந்து வந்த கூழைப்பட்டி ஜமீனைப் பாதுகாத்தார்களென்று சொல்வதற்கில்லை. சாப்பிட வேண்டியது, அதிகாரிகளுக்கு விருந்து வைக்கவேண்டியது, பல ரகமான பெண்களை எப்படியாவது வருவித்து லீலைகள் செய்யவேண்டியது, கட்சி கட்டிக்கொண்டு சண்டை செய்யவேண்டியது, கேஸ் வந்தால் பணமூட்டையைக் கட்டிக்கொண்டு 'பிரிவி கௌன்ஸில்' வரைக்கும் போகவேண்டியது— இப்படியாகச் செலவழித்தால், அந்த ஜமீனில் லக்ஷ்மீகரம் இருக்குமா? குடிகளுக்கு ஜமீன்தாரிடம் மதிப்புத்தான் உண்டாகுமா?

நடுவிலே உண்டான இரண்டு பேர்களுடைய ஆட்சிகள் ஜமீன் சரித்திரத்திலேயே பெரிய பிரளயத்தை உண்டாக்கி, மேட்டைப் பள்ளமாகவும் பள்ளத்தை மேடாகவும் ஆக்கிவிட்டன. இப்போது காமைய நாயக்கர், இருபத்தைந்து வயசுள்ள இளைஞர், ஜமீனை ஏற்றுக்கொண்டிருக்கிறார். பழைய பரம்பரையிலே வந்த ஒரு குடும்ப விளக்கு அணைந்து போகாமல் எங்கேயோ மூணுக்கு மூணாக்கென்று சுடர் விட்டுக்கொண்டிருந்தது. யாரோ புண்ணியவான்கள் ஜமீன் போகும் போக்கைப் பார்த்து, இன்னும்

சில காலம் இந்த அவாந்தரப் பேர்வழிகளிடம் இருந்தால், ஒரு காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த ஜமீன் தரைமட்டமாகிவிடுமென்று இரங்கித் துப்புத் துலக்கி வியாஜ்ய விவகாரம் பண்ணி இந்தப் பிள்ளையை முன்னுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

காமைய நாயக்கர் ஒரு விதமாக வறுமையிலே வளர்ந்தவராகையால் அவருக்கு மூளைப் பலம் அதிகமாக இருந்தது. அவருக்கு ஜமீன் கிடைக்குமென்று முன்பே தெரிந்திருந்தால் ஒருகால் அவரும் சுகபோகங்களை அநுபவிக்க மாத்திரம் தெரிந்துகொண்டிருப்பார். நல்ல வேளையாக அவருக்கு இளமையில் கெட்ட காலம் இருந்தது. இப்போது கஷ்ட நஷ்டந் தெரிந்து, ஏழை எளியவர்கள் நிலை தெரிந்து, பசி தாகந் தெரிந்து, பழி பாவத்துக்குப் பயப்பட வேண்டுமென்று தெரிந்து, பக்குவப்பட்ட மனசோடும் மேலும் மேலும் உழைக்கவேண்டும், நல்ல பேர் வாங்கவேண்டும் என்ற ஊக்கத்தோடும் அதற்கேற்ற இளமையோடும் வந்திருக்கிறார். குடிகளுக்கெல்லாம் பரம சந்தோஷம்.

கூழைப்பட்டி ஜமீனைப்பற்றிய சரித்திரம் புத்தக ரூபமாக ஒன்றும் இல்லாவிட்டாலும், அந்த ஊரிலும் ஜமீனைச் சார்ந்த சுற்று வட்டங்களிலும் கர்ண பரம்பரையாகச் சொல்லிக்கொள்ளும் வரலாறு மாத்திரம் ஒரு பெரிய சரித்திரப் புத்தகத்துக்குப் போதுமானது. அவர்களுக்குக் கி. பி., கி. மு. கணக்குத் தெரியாது. அந்தக் கர்ண பரம்பரைச் சரித்திரம் கலிகாலத்துக்கு முன்பு போகவில்லை; புராணமாக இருந்தால் கிருத யுகத்திலிருந்து ஆரம்பித்திருக்கும். ஏதோ ஒரு காலத்தில் சேர சோழ பாண்டியர்களுக்குள் சண்டை மூண்டதாம். யாரோ ஒரு வீரன்

பாண்டிய சேனாதிபதியாக இருந்தானும். அந்தப் பெரும் போரில் பாண்டியன் ஜயித்தமையால் அவனுடைய சேனாபதிக்கு அதிருஷ்டம் அடித்தது; கூழைப்பட்டி ஜமீனுக்கு அந்த வீரனே அதிபதியானான்; அவன் வெறும் ஜமீன்தார் அல்ல; அந்தக் காலத்தில் கூழைநாட்டுக்கு அரசன்; கூழை மண்டலாதிபதி. அதே கூழை மண்டலந்தான் வெள்ளைக்கார ராஜாங்கத்தில் கூழைப்பட்டி ஜமீனென்ற திரு நாமத்தைப் பெற்று நின்றது. ஆம்; நின்றது; விழுந்துவிடுமோ என்று பயப்படும்படியாயிற்று. நல்ல காலம், மறுபடியும் ஊன்றி நிற்குமென்ற நம்பிக்கைக்கு இடம் ஏற்பட்டது; இந்த இளைய ஜமீன்தார் நிலை நிறுத்துவாரென்ற நம்பிக்கை குடிஜனங்களிடம் உண்டாயிற்று.

இதில் ஒரு பெரிய ஆச்சரியம் என்னவென்றால் ,கர்ண பரம்பரையாக வந்த சம்ஸ்தான சரித்திரத்தின்படி இந்தக் கூழை மண்டலத்துக்கு அரசராக இருந்து இதை ஆண்ட முதல் சம்ஸ்தானாதிபதியின் பெயர் காமைய பாண்டியர். இப்போது மீட்டும் அதே வீரர் காமைய நாயக்கராக அவதரித்திருக்கிறார் என்று பழைய கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கும் கிழவர்களும், ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சொல்ல ஆரம்பித்தார்கள்.

புதிய ஜமீன்தாருக்கு, முதல் முதலில் ஜமீனில் என்ன என்ன இருக்கின்றன என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை. பிறகு என்ன என்ன இல்லை என்று தெரிந்துகொள்ள வேண்டும். அதற்குப் பின் என்ன என்ன வேண்டுமென்ற திட்டம் போட வேண்டும். அரண்மனையிலுள்ள பழைய கட்டுகளையெல்லாம் புரட்டிப் பார்த்தார்; கூழை மண்டலம் கூழைப்பட்டியானாலும் ராஜா ஜமீன்தாரான போதிலும் ஜமீன்தாரின் வாசஸ்தலம் மாத்திரம்

தன் பெயரை இழக்கவில்லை; இன்றும் அது அரண்மனை தான். தம்முடைய ஜமீனிலுள்ள கிராமங்கள், கிராமங் களிலுள்ள நிலங்கள், ஏரிகள், குளங்கள், கோவில்கள், சுடு காடுகள் ஒன்றுவிடாமல் பார்த்துவிட வேண்டுமென்பது அவர் ஆசை. தமக்குச் சொந்தமான கட்டடங்களையெல் லாம் ஆராய்ந்து அரண்மனையின் மூலை முடுக்குகளெல்லாம் துருவிப் பார்த்து, என்ன என்ன அபூர்வ வஸ்துக்கள் கிடைக்கின்றனவோ அவற்றையெல்லாம் சேகரித்து வைக்கவேண்டும்; சம்ஸ்தானத்திலுள்ள தஸ்தவேஜுகளி லிருந்தும் கர்ண பரம்பரையாக வழங்கும் செய்திகளிலிருந் தும் ஜமீன் சரித்திரத்தை எழுதச் செய்ய வேண்டும்—இப் படி என்ன என்னவோ செய்ய எண்ணினார்.

அரண்மனையைப் பரிசோதிக்கப் புறப்பட்டார். தஸ்த வேஜுக் கட்டுகளைப் பார்த்தால் எல்லாம் வியாஜ்யக் கட்டுகள்; வீண் சண்டைகளில் பணத்தை வாரி வாரி இறைத்த வயிற்றெரிச்சலை விளக்கும் காகிதங்கள். இடை யிடையே கறையான்கள் பல காலமாகத் தம்முடைய சங் கார கிருத்தியத்தை நடத்திக்கொண்டிருந்தன. புழு, பூச்சி, வௌவால் முதலிய படைகளை விரட்டுவதற்கு அவர் மேற்கொண்ட பிரயாசையால் ஒரு சைனியத்தையே போராடி ஓட்டிவிடலாம். இந்த நம்பர்க் கட்டுகளும் கறையான்களும் என்ன சரித்திரத்தை வெளியிடப் போகின்றன? அந்தக் குப்பை கூளத்தை ஆராய்ந்து ஜமீன்தார் சலித்துப் போனார்.

ஒடிந்த பூட்டு, பழைய காலத்துக் கொக்கித் திறவு கோல், உருண்டைக் கல் ஒன்று, கூழை மண்டலாதிபதி ஜகவீரபாண்டிய நாயக்கர்மேல் காதல் பிரபந்தம்—இப் படியாகச் சில சாமான்கள் கிடைத்தன. அவற்றை

எடுத்துப் பத்திரப்படுத்தினார். ஜகவீர பாண்டிய நாயக்கர் காதலென்ற பிரபந்தம் கிழிந்தும் குறைபட்டும் இருந்தது. கரடாக் காகிதத்தில் எழுதப்பட்டிருந்த அந்தப் பிரதியைக் கண்டபோது ஜமீன்தாருக்கு இழந்த தனத்தைப் பெற்றது போன்ற ஆனந்தம் உண்டாயிற்று; சரித்திரம் எழுதுவதற்கு உபயோகமாக இது ஒன்றாவது அகப்பட்டதே என்ற ஆறுதல் பெற்றார். அவரே தமிழில் இலக்கிய அறிவு படைத்தவர். ஆகையால் அதை நன்றாகப் பிரதி பண்ணச் செய்து படித்துப் பார்த்தார். ஆதியந்தமில்லாத அந்தப் பிரதியின் இடையிடையே கூழை மண்டலத்தின் பெயரும் ஜகவீர பாண்டிய நரபதியின் பிரதாபமும் காணப்பட்டன. காலமோ, மற்ற விவரங்களோ ஒன்றும் தெரியவில்லை. அந்த மகாராஜா ஒரு பெண்ணோடு ஸரஸ ஸல்லாப லீலைகளை நடத்திய வருணனைதான் பிரமாதமாக இருந்தது. அதைப் பார்க்கையில் ஜமீன்தாருக்கு எரிச்சலாக வந்தது. 'ஜமீன்தார்களின் சிங்கார லீலைகளுக்கு இலக்கியம் வேறா?' என்று எண்ணிச் சிரித்தார்.

அரண்மனை முழுவதும் சோதனை போட்டதில் விசேஷமாக ஒன்றும் கிடைக்கவில்லை. கிழவர்களையெல்லாம் கூப்பிட்டுப் பழங்கதைகளைக் கேட்கத் தொடங்கினார். பாரத ராமாயண காலத்திலிருந்து ஆரம்பித்தார்கள் அவர்கள். அவர்கள் சொல்வதைக் கேட்க எவ்வளவோ பொறுமை வேண்டியிருந்தது. ஜமீன்தாரின் இளம் பருவ முறுக்கிற்கும் மனோ வேகத்துக்கும், அந்தக் கிழவர்களின் ஆமை நடைக்கும் ஒத்துவரவில்லை. ஆனாலும் ஜமீன்தார் பல்லைக் கடித்துக்கொண்டு கேட்டு வந்தார்.

ஒரு கிழவன் ஒரு ரகசியத்தைச் சொன்னான். ஜமீன்தாரைத் தனியே அழைத்துச் சென்று மூன்றாம் பேர்

காதில் விழக்கூடுமென்று சொன்னான். "எசமானே, இந்த ஜமீன் அழிந்துபோகாமல் தப்பினது உங்கள் பூட்டன்மார் செய்த புண்ணியம். நடுவிலே வந்த மகாபாவிகள் பண்ணின அட்டூழியங்களுக்குக் கணக்கில்லை. இந்த ஜமீனில் நெட்டைக் குளம் என்ற ஊர் இருக்கிறதே அங்கே எசமானுக்குச் சொந்தமான கோயில் ஒன்று இருக்கிறது. அந்தக் கோயிலைச் சேர்ந்த மண்டபம் ஒன்றில் இந்த ஜமீன் சம்பந்தமான பழைய சுவடிகளையும் கட்டுகளையும் போட்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் வருஷத்துக்கு இரண்டு தடவை அந்தக் கோயிலில் அபிஷேகம் செய்துவிட்டு, ஜமீன்தாரும் கணக்குப் பிள்ளைகளும் அந்த மண்டபத்திலிருந்து கணக்குவழக்குப் பார்த்து ஏதாவது முக்கியமான வழக்கிருந்தால் நியாயம் பேசித் தீர்த்துக்கொள்வார்களாம். இரண்டு தலைமுறையாக அந்த மண்டபம் பூட்டியே கிடக்கிறது. உங்கள் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நடுவில் ஜமீனை ஆண்ட காலத்தில் யாரோ ஒரு ஜமீன்தாரன் ஒரு பெண்ணை அங்கே அழைத்துக் கொண்டு போனானாம். அவளை அவசரமாக மறைக்க வேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டதாம். அந்த மண்டபத்தின் உள்ளே விட்டுப் பூட்டிவிட்டு வந்தவன் மறுநாள் தான் திறக்க முடிந்ததாம். திறந்து பார்க்கிறபோது அவள் பிணமாய்க் கிடந்தாளாம். நெட்டைக்குளத்து அம்மன் அக்கிரமக்காரர்களுக்குக் கைமேல் பலன் கொடுத்து விடுவாள். அந்தச் சாவு நேர்ந்தது முதல் மண்டபத்துக்குள் ஒருவரும் போவதில்லை. அது பூட்டியே கிடக்கிறது. பழைய காகிதக் கட்டுகளும் ஓலைச் சுவடிகளும் அங்கே இருந்தனவென்று கேள்வி" என்று கிழவன் சொல்லி முடித்தபோது ஜமீன்தாருக்கு ஒரு புதிய உற்சாகம் உண்டாயிற்று. தம்முடைய ஆராய்ச்சிக்கு

நிரம்ப விஷயம் கிடைக்கப் போகிறதென்ற ஆசையோடு இருந்தார். நெட்டைக் குளத்துக் கோயில் மண்டபத்தைத் திறந்து உள்ளே இருக்கும் சரக்குகளைப் பார்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் ஆரம்பமாயின.

## 2

குறிப்பிட்ட நாளில் நெட்டைக்குளத்து அம்மனுக்கு அபிஷேக ஆராதனைகள் நடந்தன; மண்டபத்தைப் பட்டப் பகலில் திறந்தார்கள். அப்பா, ஒரே நாற்றம்! குடலைப் பிடுங்கியது. கறையானும் புற்றும் புழுதியும் மூடிக் கிடந்த மண்டபத்தில் என்ன இருக்கிறதென்று தெரிந்து கொள்ளவே முடியவில்லை. தீவட்டிகளையும் விளக்குகளையும் பிடித்துக்கொண்டு ஆட்கள் உள்ளே போய்ப் பார்த்தார்கள். சில வாகனங்கள் உருமாறிக் கறையான் பிடித்து உளுத்துப் போய் அக்கினி பகவானுக்கு உபயோகப் படும்படி இருந்தன. ஒரு நாளிலே அதைச் சுத்தம் பண்ணுவதென்பது நடக்காத காரியம். பத்து நாள் அந்த வேலை நடைபெற்றது. ஒரு வகையாகக் குப்பை கூளங்களை எடுத்து எறிந்தார்கள். வாகனங்களின் சின்னங்களை நெட்டைக் குளத்தம்மன் திருமடைப்பள்ளியில் உபயோகித்துக்கொண்டார்கள். மூலையிலே ஒரு பெட்டியின் பாதியைக் கறையான் விருந்துண்டு மிச்சம் வைத்திருந்தது. இவ்வளவு சிரமப்பட்டு மண்டபத்தைத் திறந்ததற்குப் பிரயோசனம் அந்தப் பெட்டிதான் என்று ஜமீன்தார் எண்ணிக்கொண்டார்.

கிழவன் சொன்னது பொய்யாகப் போகவில்லை. அதில் பனையோலைச் சுவடிகளும், என்ன என்னவோ காகிதங்களும் அரையுங் குறையுமாக இருந்தன. எல்லா

வற்றையும் ஒன்றுவிடாமல் பார்த்துவிட வேண்டுமென்று சிரத்தையோடு பெட்டியிலுள்ள சாமான்கள் அவ்வளவையும் ஜமீன்தார் தம் அரண்மனைக்குக் கொண்டு போனார். ஒவ்வொரு துண்டாகப் பார்க்க எண்ணி ஓலைச் சுவடிகளையும் காகிதங்களையும் தனித்தனியே பிரித்து வைத்தார். அந்தக் குவியலில் ஏதோ ஒரு துணிச் சுருள் பாதி கறையானால் தின்னப்பட்டு இருந்தது. எடுத்துப் பிரித்துப் பார்த்தார். பிரமித்துப் போனார். ஓர் அழகான சித்திரத்தின் ஒரு பகுதியாக இருந்தது. எவ்வளவு காலத்துக்கு முன் எழுதப்பட்ட ஓவியமோ தெரியவில்லை. ஆனால் வர்ணங்கள் மிகப் பொருத்தமாகவும் மங்காமல் விளக்கமாகவும் இருந்தன. மிகச் சிறந்த ஓவியப் புலவன் ஒருவன் எழுதியதென்பதற்குச் சந்தேகமே இல்லை. ஒரு பாதிக்கு மேல் கோணல் மாணலாக அரிக்கப்பட்டுப் போயிருந்தது.

படம் யாரோ ஒரு ஜமீன்தாருடைய படந்தானென்று தீர்மானித்தார் காமைய நாயக்கர். முகத்தின் இடப் பக்கம் மாத்திரம் இருந்தது; இடப் பக்கத்து வாய்க்கு மேல் மீசையும் இருந்தது. ஒரு கால் - இடக்கால் மாத்திரம், இடுப்பும் அதற்கு மேல் வயிறும் ஓரமாக மாத்திரம்- அரித்திருந்தது. அந்தப் பாதி சொரூபத்திலேயே உருவத்தின் வீரமும் அழகும் உடலுறுப்புக்களின் வன்மையும் புலப்பட்டன. ஆடைகளின் பாணியைப் பார்த்தால், பழைய காலத்துச் சிற்றரசர்களுடையதைப் போல் இருந்தது.

காமைய நாயக்கர் அதைக் கண் இமையாமல் பார்த்தார். அந்தப் படம் முற்றும் கிடைக்காமல் போனதில் அவருக்கு உண்டான வருத்தம் இவ்வளவு அவ்வளவு அல்ல. உலகத்திலே கறையானுடைய வம்சத்தையெல்

லாம் நாசமாக்க வேண்டுமென்று ஆத்திரம் உண்டாயிற்று. கடவுளால்கூட அது முடியாதே! அவர் மனிதர், என்ன செய்யக்கூடும்?

படத்தின் மிச்சத்தை ஒவ்வோர் அணுவாகக் கூர்ந்து கவனித்தார். பார்க்கப் பார்க்க அதன் அழகு அதிகமாகப் புலப்பட்டு வந்தது. அதே சமயத்தில் அது முற்றும் இல்லையே என்ற குறைபாடும் அவருக்குத் துக்கத்தை உண்டாக்கியது. 'இனிமேல் என்ன செய்வது!' என்று பெருமூச்சு விட்டார்.

அந்தப் படக் கிழிசலைப் பத்திரமாக வைத்துவிட்டு மேலும் ஆராய்ச்சி செய்யும்போது ஏதோ ஓர் ஓலைநறுக்கில், "கூழை மண்டலாதிபதி பாண்டியர் மானங்காத்தான் ஸ்ரீ காமைய பாண்டிய மகாராஜா அவர்கள் திருவுருவக் கிழி தம்முடைய உருவத்தைக் கிழியிடலாகாதென்று மகாராஜா உத்தரவானகையினால் இந்தக் கிழி உதவவில்லை. கடவுள் காக்க!" என்ற வரிகள் காணப்பட்டன. ஜமீன்தார் சந்தோஷ அருவியிலே துள்ளிக் குதித்தார். தம்முடைய பரம்பரையின் முதல்வரை நேரே கண்டுவிட்டவரைப் போன்ற ஆனந்தம் அடைந்தார். "இவரா காமைய பாண்டியர்! ஆகா, என்ன அழகு! பார்த்தவுடனேயே தெரிகிறதே! வீரத் திருமேனி யென்று அந்த இடப்பாகச் சித்திரமே சொல்லுகிறதே! ஐயோ! சித்திரம் முழுசாகக் கிடைக்கக்கூடாதா? என் துரதிருஷ்டம்! முன் இருந்த பாவிகள் இந்த அருமையான படத்தை இப்படி நாசமாகும்படி செய்துவிட்டார்கள். இந்த வீரசிங்கத்தின் படத்தை அரண்மனையில் வைத்துப் பூசை செய்யவேண்டாமா? படத்தைத்தான் எவ்வளவு அழகாக எழுதியிருக்கிறான் சித்திரகாரன்! அந்த அழகுக்காவது இதைப் போற்

றிப் பாதுகாத்திருக்கவேண்டாமா? இந்த ஜமீனைக் குட்டிச் சுவராக அடித்தது போதாதென்று இத்தகைய கலைப் பொருள்களையுமா நாசமாக்க வேண்டும்?" என்று என்ன என்னவோ கூறிப் புலம்பினார் காமைய நாயக்கர்.

"இனி என்ன செய்யலாம்? இந்த அரைகுறைப் படத்தை வைத்துக்கொண்டு ஏதாவது செய்ய முடியுமா? இடப் பக்கத்தைப் போல வலப்பக்கத்தையும் எழுதச் சொல்லி உருவத்தைப் பூர்ணம் செய்துவிடலாமே?" என்று எண்ணும்போது அவருக்கு ஓரளவு நம்பிக்கை உதயமாயிற்று. உடனே தக்க சித்திரப் புலவர்களை வரு வித்து அதைக் காட்டலானார். அவர்கள் யாவரும் அந்தச் சித்திரத்தை வானளாவப் புகழ்ந்தார்கள். வர்ணங்களின் சேர்க்கையைப் பாராட்டினார்கள். "யாராவது மேல்நாட்டு ஆராய்ச்சிக்காரர் கையில் இது கிடைத்தால் இதைப்பற்றி ஒரு புத்தகமே எழுதிவிடுவார். அவ்வளவு அருமையாக இருக்கிறது" என்றார்கள்.

"நம் கையில்தான் கிடைத்திருக்கிறதே. இதைப் பார்த்து, இதே மாதிரி வர்ணங்களை உபயோகித்து இதன் குறைப் பகுதியையும் ஊகித்து அமைத்துச் சித்திரத்தைப் பூர்த்தி செய்து தருவீர்களா?" என்று ஜமீன்தார் கேட்டார்.

"ஏதேது! அது மிகவும் கஷ்டமான காரியம். இதை இப்படியே போட்டோ எடுத்து மேல்நாட்டுப் பத்திரிகை களுக்கு அனுப்புங்கள். இப்படி ஒரு படம் இருக்கிறது தெரிந்தால் இந்த ஜமீனுக்கே புகழ் உண்டாகும்" என்றார் ஒருவர்.

"அதெல்லாம் யாரையா கேட்டார்கள்? இதை மறு படியும் உருவாக்க முடியுமா?" என்று ஜமீன்தார் வின

விஞர். எல்லோரும் கையை விரித்து விட்டார்கள். காமைய நாயக்கர் மனம் தளரவில்லை. எங்கெங்கே ஓவியர்கள் இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் எழுதி வருவித்துக் காட்டினர். "இந்த மாதிரி இந்தக் காலத்தில் யார் எழுதுகிறார்கள்? இப்போது போட்டோகிராபி வந்து விட்டதே!" என்று சொல்லித் தங்கள் கையாலாகாத் திறமையைப் பலர் வெளிப்படுத்திவிட்டுப் போனார்கள். கடைசியில் ஒரு சித்திரகாரர் வந்தார்; இந்திய ஓவிய முறையில் சித்திரம் எழுதுபவர். அவர் படத்தைப் பல பல கோணங்களில் வைத்துப் பார்த்தார்; கண்ணுக்கருகே வைத்துப் பார்த்தார்; தூரத்தில் வைத்துக் கவனித்தார். எல்லாம் பண்ணிவிட்டு ஜமீன்தாரிடம் பேசலானர்.

"இந்தச் சித்திரத்தின் அருமையை இந்தக் காலத்தில் உள்ள முட்டாள்கள் தெரிந்துகொள்வது கஷ்டம். நம்முடைய தேசத்துக்குச் சொந்தமான கலைகளையெல்லாம் நாம் இழந்துவிட்டோம். இந்தச் சித்திரக் கலை இருக்கிறதே, இதைப் போலச் சீர்கெட்டழிந்து போனது வேறில்லை. போட்டோப் படத்தைப் பார்த்துக் கூத்தாடிப் பரிசளிக்கும் காலம் இது. போட்டோக் கருவி உயிரற்ற யந்திரமாக இருந்து, உயிருள்ள பதார்த்தங்களின் உயிரற்ற நிழலைக் காட்டி ஏமாற்றுகிறது. அவர்களுக்கு உயிருள்ள சித்திரத்தின் அருமை தெரியவே தெரியாது. இந்தச் சித்திரம் இருக்கிறதே, இது இப்போது சின்னபின்னமாகத்தானே இருக்கிறது? ஆனாலும் இதில் ஜீவன் இருக்கிறது. இது என்னோடு பேசுகிறது. இந்த வர்ணங்களைப் பாருங்கள்: இப்படிப்பட்ட வர்ணம் இந்தப் பிருதிவி முழுவதும் தேடினாலும் கிடைக்காது. பாரத தேசத்தில் உண்டான வர்ணம் இது; இதற்கு அழிவே இல்லை. இந்த

மாதிரி வர்ணமும் இந்த முறையான சித்திரமும் இனி வரப் போகின்றனவா, என்ன? நாம் எத்தனை வஸ்துக்களை இழந்துவிட்டோம்! ஊர் ஊராகத் தாண்டவமாடிய கலைகள் இப்போது இருந்த இடம் தெரியாமல் மங்கிப் போயினவே! இனி நல்ல காலம் வருமா? பழைய ஓவியக் கலை தலையெடுக்குமா?''

கோபத்திலே ஆரம்பித்த அந்தக் கலைப்பித்தர் பிரசங்கம் இரக்கத்திலே இறங்கியது.

''கலையைப்பற்றிச் சொல்வதை நிறுத்தி இந்தச் சித்திரத்தைப் பூர்ணமாக்கித் தரமுடியுமா என்பதைச் சொல்லுங்களையா!'' என்று ஜமீன்தார் இடையிலே கேட்க வேண்டியதாயிற்று.

''அதைத்தான் சொல்ல வருகிறேன். இந்தச் சித்திரத்தைப் பூர்த்தி பண்ணிக் கொடுக்கிறேன். ஆனால் எனக்கு இரண்டு மாசம் அவகாசம் கொடுக்கவேண்டும். இந்தச் சித்திரத்தைப்போல எழுதி விடுவது பிரமாதமல்ல; இந்த வர்ணத்தைப்போல அமைப்பதுதான் கடினம். அதற்குத் தான் காலம் ஆகும்.''

''இரண்டு மாசம் என்ன? மூன்று மாசங்களாகட்டும். அந்த மூன்று மாசமும் நீங்கள் இந்த அரண்மனையிலேயே இருக்கலாம். உங்களுக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் இங்கே அமைத்துத் தருகிறேன். நிதானமாக வேலை செய்யுங்கள். படம் எப்படியாவது பூர்ணமானால் போதும்.''

ஜமீன்தாருடைய வார்த்தைகளில் ஆர்வம் பொங்கியது.

''இங்கேயா? அதெல்லாம் முடியாது. நான் வேலை செய்துகொண்டே இருப்பேன். யாரையாவது தாங்கள்

கூட்டிக்கொண்டு வருவீர்கள். எனக்கு வேலை ஓடாது. என்னுடைய சொந்த இடத்தில்தான் எனக்கு வேலை ஓடும்" என்று உறுதியாகச் சொன்னான் சித்திரகாரன்.

'மூலப் பொருளே போய்விட்டால் என்ன செய்வது!' என்று சிந்தித்தார் ஜமீன்தார்.

"தாங்கள் இந்தப் படத்தை நான் கொண்டு போனால் திரும்பி வராதோ என்று யோசிக்கிறீர்கள்போல் இருக்கிறது. அப்படி நம்பாவிட்டால் நான் போகிறேன். கலைஞனிடத்தில் நம்பிக்கை வைத்தால்தான் கலை பரிபூர்ணம் அடையும்." ஜமீன்தார் யோசித்துப் பார்த்தார். வேறு வழி ஒன்றும் தெரியவில்லை. அந்தக் கிழியைக் கொடுத்து, "ஜாக்கிரதை! நான் இதைக் குலதனமாகப் பாதுகாத்து வருகிறேன். இதைப் பார்த்து வேறு ஒரு படம் எழுதவேண்டும்" என்று சொல்லிச் சரியாக இரண்டாவது மாதத்தில் கடைசி நாளில் படத்தைத் தரவேண்டுமென்று அவனிடமிருந்து வாக்குறுதி வாங்கிக்கொண்டு ஜமீன்தார் அவனை அனுப்பினார்.

## 3

சரியாக இரண்டு மாதம் ஆவதற்குள் ஜமீன்தார் நாலைந்து முறை சித்திரகாரன் ஊருக்குப் போய் விசாரித்து விட்டுவந்தார். அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவர் விசாரித்தபோதெல்லாம் அந்த ஓவியக்கலைஞன் அவர் அளித்த அரைகுறைப் படத்தைமாத்திரம் காட்டி அது பத்திரமாக இருப்பதைத் தெரிவித்தான். "உங்கள் படம் எந்தமட்டில் இருக்கிறது?" என்று கேட்டால், "வேலை நடந்துகொண்டிருக்கிறது" என்று சொல்வான். நடந்த வேலையைக் காட்டமாட்டான். மூன்றாம் முறை ஜமீன்தார்

போனபோது, "தங்கள் அதிருஷ்டம், நான் ஜயமடைந்தேன்." என்று அவரைக் கண்டவுடனே கலைஞன் சொன்னான். "படம் முடிந்துவிட்டதா?" என்று ஆவலுடன் கேட்டார் ஜமீன்தார்.

"முடிகிறதா! இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறேன். இனிமேல் முடிந்த மாதிரிதான். அடேயப்பா! எவ்வளவு சிரமப்பட்டேன்! என்ன வர்ணம்! லேசில் கண்டுபிடிக்க வந்ததா? கண்டுபிடித்து விட்டேன். இந்தப் படம் நிறைவேறினால் உங்களைக் காட்டிலும் எனக்குத்தான் அதிகத் திருப்தி; முதல் திருப்தி."

"அப்படியே இருக்கட்டும். எப்படியாவது திருப்தியாக நிறைவேறினால் சரி. படத்தைப் பார்க்க........"

"அதுதான் என்னிடம் வழக்கமில்லையே! தங்களுக்குச் சொன்ன கெடுவில் கொடுத்து விடுகிறேன். பொறுமையாக இருங்கள், தாங்கள் இங்கே வந்து அலைவதுகூட வேண்டாம்."

அவரா கேட்பவர்? வந்து அலையத்தான் அலைந்தார். அவர் ஆவல் அவருக்கல்லவா தெரியும்?

இரண்டு மாதங்கள் ஆயின. கணக்காய் அறுபதாவது நாள் காலையில் சித்திரப்புலவன் கூழைப்பட்டி அரண்மனைக்கு வந்தான். தான் கொணர்ந்திருந்த படத்தைப் பிரித்துக் காட்டினான். ஜமீன்தார் துள்ளினார், குதித்தார்; கூத்தாடினார். சித்திரகாரனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டார். 'அந்தச் சித்திரம் எழுதினவன்தான் இப்படிப் பிறந்தானோ!' என்று பிரமை கொண்டார். "ஐயா, நீங்கள் செய்த இந்த உபகாரத்தை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன். உங்களுக்கு இந்த ஜமீனையே கொடுத்தாலும் தகும்" என்று

பல படியாக அந்தக் கலைஞனைப் பாராட்டினார். ஆயிர ரூபாய் சம்மானத்தோடு மற்றோர் ஐந்நூறு ரூபாய் சேர்த்து வழங்கினார்.

புதிய படம் உண்மையிலேயே கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பழைய படத்தின் புத்துருவம் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த முழு உருவத்தையும் பார்த்த காமைய நாயக்கர் சொக்கிப் போனார். "என்ன கம்பீரம்! என்ன பார்வை! அந்தக் கண்களில் தான் என்ன ஒளி!"

"இந்த அழகிய படத்தைத் தக்க இடத்தில் வைக்க வேண்டும். அரண்மனையின் நடுக்கூடத்தில் எல்லோர் கண்ணிலும் தெரியும்படி வைக்கவேண்டும். வந்தவர்களெல்லாம் கண்டு மகிழ வேண்டும்" என்று மேலும் மேலும் கற்பனை செய்துகொண்டு போனார் காமைய நாயக்கர்.

ஒரு நல்ல நாளில் பல பிரபல கனவான்களின் முன்னிலையில் படம் அரண்மனைக் கூடத்தில் திறந்து வைக்கப்பெற்றது. படத்தைப் பார்த்தவர்களெல்லோரும் அதை வியந்து ஜமீன்தாரின் சிரத்தையைப் பாராட்டினார்கள். கிழவிகள்கூடப் பார்த்து மகிழ்ந்தார்கள். வெளியூரிலிருந்து கூழைப்பட்டிக்கு யார் புதிதாக வந்தாலும் 'காமைய பாண்டிய மகாராஜா'வின் படத்தைப் பார்க்காமல் போவதில்லை. அதைத் திறந்து வைத்தது முதல் காமைய நாயக்கருடைய வியாபகங்கூட அதிகமாயிற்று. பழைய படத்தையும் அவர் மிகவும் ஜாக்கிரதை பண்ணிப் பெட்டியில் வைத்திருந்தார். புதிய படத்தைப் பார்த்துப் பார்த்து ஆனந்தம் அடைந்தார்.

தாம் ஜமீனை ஏற்றுக்கொண்டதன் பயனாக ஏற்பட்ட காமைய பாண்டியர் படப்பிரதிஷ்டை ஒன்றே போதுமென்ற திருப்தி ஜமீன்தாருக்கு உண்டாயிற்று. அந்த வீரதீர பராக்கிரமசாலியாகிய பாண்டியரின் கௌரவத்தையும் பெருமையையும் வெளிப்படுத்தும் சரித்திரம் இருந்தால் தம் ஜன்மமே சாபல்யம் அடைந்துவிட்டதாகக் கருதலாமென்று அவர் எண்ணினார். அரை குறைக் கிழி கிடைத்த பிறகு அதை உருவாக்குவதிலேயே முழு ஞாபகமும் செலுத்தி வந்த ஜமீன்தாருக்குப் பழம்பெட்டியிலிருந்து கிடைத்த சுவடிகளை ஆராய நேரமில்லை. தொடர்ச்சியாகப் படித்துப் பார்க்கும்படியாகவா அவை இருந்தன? மூளியான ஏடுகளிலும், இடையிடையே அரித்த சுவடிகளிலும் உள்ள விஷயத்தைத் தெரிந்துகொள்வது சுலபமான காரியமா? அவருக்கு உள்ளுக்குள் ஒரு நம்பிக்கை இருந்து வந்தது. தமக்கு ஒரு சித்திரகாரன் கிடைத்தது போல யாராவது ஆராய்ச்சிக்காரனும் கிடைப்பான், சம்ஸ்தானத்துச் சரித்திரத்தை உருவாக்க நெடுங்குளத்து அம்மன் உதவி செய்வாளென்று எண்ணினார். அவருடைய உற்சாகமும் அந்த எண்ணத்திற்கு ஒரு காரணம்.

அவர் ஆசை வீண் போகவில்லை. நல்ல ஆராய்ச்சிக்காரர் ஒருவர் கிடைத்தார். புதிய முறைப்படி ஆராய்ச்சி செய்யும் திறமையும் சரித்திர உணர்ச்சியும், தமிழிலக்கியங்களில் புலமையும் ஏட்டுச் சுவடிகளைப் பார்த்து ஆராய்ச்சி செய்யும் ஆற்றலும், ஆராய்ச்சி செய்யவேண்டுமென்ற ஆர்வமும் பொருந்திய ர் இளைஞர் ஜமீன்தாருக்கு அகப்பட்டார். அவரை அழைத்து, துப்பறியும் போலீஸ்காரர்களுக்கு ஒவ்வொரு தடையத்தையும் காட்டுவது போல, பழம் பெட்டியில் அகப்பட்ட உடைந்த பூட்டு

முதலியவற்றையும் காட்டி, "இவற்றை வைத்துக் கொண்டு ஆராய்ச்சியை ஆரம்பியுங்கள். உங்கள் ஆராய்ச்சிக்கு உபகாரமாக எந்த எந்தப் புத்தகம் வேண்டுமோ அவற்றையெல்லாம் வாங்கித் தருகிறேன். சரித்திரத்துக்கு உபயோகமாக உள்ள எந்தச் சிறு செய்தியையும் விடாதீர்கள். இந்தப் பக்கத்திலுள்ள கிழங்களையெல்லாம் அழைத்து வரச் செய்கிறேன். அவர்களிடம் நீங்கள் விசாரித்துத் தெரிந்துகொள்ளக்கூடியவை சில இருக்கலாம். உங்களுடைய ஆராய்ச்சியின் பயனாக நம்முடைய ஜமீன் சரித்திரம் நன்றாக உருப் பெற்றுவிடுமானால், மிகவும் அழகாக உயர்ந்த முறையில் அச்சிடலாம். இந்தச் சம்ஸ்தானத்தின் முதல் அதிபதியான பாண்டியரவர்களுடைய வர்ணப் படத்தைப் புத்தகத்தின் முகப்பில் போட்டுவிடலாம். எல்லாம் உங்கள் ஆராய்ச்சியைப் பொறுத்திருக்கிறது. உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் எந்தச் சமயத்திலும் கேட்கலாம்" என்று அன்பொழுகக் கூறினார் ஜமீன்தார்.

"உங்களுடைய அன்பு ஒன்றைப் பார்த்தே எனக்கு ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்ற ஆசை உண்டாகிறது. இப்படிச் சரித்திர உணர்ச்சியுடையவர்களை எங்கே காண்கிறோம்!"

ஆராய்ச்சி வேலை ஆரம்பமாயிற்று. அந்த இளைஞருக்கு முன் பெட்டியிலுள்ள குப்பைக் கூளங்கள் குவிந்தன.

## 4

"இன்றைக்கு ஏதாவது புதிய விஷயம் தெரிந்ததா?"

"நேற்றுச் சந்தேகப்பட்டுக்கொண்டிருந்தேனே, அந்த விஷயத்தில் சிறிது தெளிவு கிடைத்திருக்கிறது. 'கோ ஜடிலபன்மரான....ஸ்ரீ வல்லப தேவர்க்கு' என்ற துணுக்கிலிருந்து தெரிந்ததை இன்று தெளிவுபடுத்திக்கொண்டேன். 'ஸ்வஸ்தி ஸ்ரீ கோ ஜடிலபன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான் திருநெல்வேலிப் பெருமாள் வீர வெண்பா மாலையான் தர்மப் பெருமாள் நந்தனுரான அழகன் பெருமாள் அதிவீர ராமனுன ஸ்ரீ வல்லப தேவர்க்கு....' என்று வரும் தாமிரப்பட்டயத்தால் நம்முடைய சம்ஸ்தானம் கி. பி. 1650-ஆம் வருஷ அளவில் ஏற்பட்டதென்று தெரிகிறது. அந்தக் காலத்தில் நிகழ்ந்த போரில் அழகன் பெருமாள் அதிவீரராம பாண்டியன் என்ற பாண்டிய அரசருக்குக் காமைய பாண்டிய நாயக்கர் உதவி செய்திருக்க வேண்டும்."

"சபாஷ்! நம்முடைய சம்ஸ்தான சரித்திரத்தின் தலைப்பைக் கண்டுபிடித்து விட்டீர்களே! நம் முதல்வராகிய பாண்டியருடைய பட்டங்கள், அவர் செய்த போர் விமரிசை—இவைகளில் ஒன்றும் கிடைக்கவில்லையா?"

"இன்னும் சில ஏட்டுத் துணுக்குகளைப் பார்க்கவில்லை. ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத பெயர்கள் அடிபடுகின்றன. கணக்குச் சுருணையில் சேர்ந்த ஏடுகளே அதிகமாக இருக்கின்றன. இந்த அளவில் எதையும் தீர்மானமாகச் சொல்லமுடியாது."

"இந்தப் படத்தோடிருந்த ஓலை நறுக்கை நான் உங்களுக்குக் காட்டவில்லையே" என்று சொல்லிப் பழம் பட்

தோடு சேர்த்து வைத்திருந்த அதை ஜமீன்தார் எடுத்து ஆராய்ச்சிக்காரருக்குக் காட்டினார்.

அதை ஆராய்ச்சிக்காரர் வாசித்துப் பார்த்தார். என்னவோ யோசனை பண்ணினார்; "இதில் ஏதோ சூக்ஷ்மம் இருக்கிறது" என்றார்.

"என்ன சூக்ஷ்மம்? படம் பாண்டியருடையதல்லவென்று நினைக்கிறீர்களா?"

"அப்படி நினைக்கவில்லை. படம் அவருடையதுதான்; அதில் சந்தேகமே இல்லை...."

ஜமீன்தார் மூச்சை அடக்கிக்கொண்டு அவர் என்ன சொல்லி விடுவாரோ என்று பயந்துகொண்டே கேட்டவர், ஆறுதலாகப் பெருமூச்சு விட்டார்.

"பின், என்ன யோசனை செய்கிறீர்கள் ?"

"ஒன்றும் இல்லை; இந்தப் படத்தை ஏன் வெளியுலகத்திற்குக் கொண்டு வரவில்லை? தம்முடைய உருவத்தைக் கிழியிடலாகாதென்று மகாராஜா உத்தரவிட்டதாக இதில் இருக்கிறது. அப்படியானால் இந்தப் படம் மாத்திரம் எப்படி உண்டாயிற்று? 'கடவுள் காக்க' என்று எழுதுவானேன்? இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. சித்திரக்கலை சம்பந்தமாகவோ, இதை எழுதிய சித்திரகாரனுடைய சம்பந்தமாகவோ, ஏதாவது ரகசியம் இருக்கலாம். இதையும் என்னுடைய ஆராய்ச்சியில் சேர்த்துக்கொள்கிறேன்!" என்று சொல்லிவிட்டுத் தம்முடைய ஆராய்ச்சிச் சாலைக்குப் போய்விட்டார் அவர்.

அந்தப் படத்தைத் தம் உயிரினும் மேலாக எண்ணிப் பாதுகாத்த ஜமீன்தாருக்கு, அதன் சம்பந்தமான மர்மத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலும்

சேர்ந்துகொண்டது. படம் கிடைத்த சந்தோஷத்தில் அந்தச் சிறு துணுக்கிலுள்ள வாக்கியங்களினுள்ளே புகுந்து பார்க்கும் திறம் அவர்பால் ஏற்படவில்லை. அந்த மர்மம் விளங்கினால், காமைய பாண்டியருடைய உத்தம குணம் ஒன்று வெளியாகுமென்று எதிர்பார்த்திருந்தார் ஜமீன்தார்.

## 5

அன்று, என்றும் இல்லாதபடி முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு வந்தார் ஆராய்ச்சிக்காரர். அவருடைய இயல்பான உற்சாகத்தை அன்று காணவில்லை. வழக்கம்போல் ஜமீன்தார், "இன்று ஏதாவது விசேஷம் உண்டா?" என்று கேட்டார். ஆராய்ச்சிக்காரர் சட்டென்று பதில் சொல்லவில்லை. தயங்கித் தயங்கி நின்றார். பிறகு, "எங்கேயாவது உட்கார்ந்துகொண்டு பேசலாமே" என்றார்.

"ஆஹா, வாருங்கள்; என்னுடைய அறைக்குப் போகலாம்" என்று ஜமீன்தார் அழைத்துச் சென்றார்.

இருவரும் உட்கார்ந்துகொண்டார்கள். ஆராய்ச்சிக்காரர் மெல்ல ஆரம்பித்தார்: "இன்றைக்கு ஒரு புதிய விஷயத்தைக் கண்டுபிடித்தேன்."

"அதை முன்பே சொல்லவில்லையே" என்று தம் பரபரப்பைக் காட்டினார் ஜமீன்தார்.

"ஆனால், அது அவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய செய்தி அல்ல. ஒரு வார காலமாக ஓர் ஏட்டுச் சுவடியின் சிதறுண்ட ஏடுகளைப் பொறுக்கிச் சேர்க்க முயன்றேன். சேர்ந்தாற்போல அகப்படவில்லை. இரண்டு ஏடுகள் மாத்திரம் துரதிருஷ்டவசமாக ஒன்று சேர்ந்து ஒட்டிக்கொண்டிருந்தன. அவற்றை எண்ணெய் போட்டுப்

பிரித்துப் பார்த்தேன். வேறு சில குறிப்புகளையும் பார்த்தேன். அவற்றையெல்லாம் சேர்த்துப் பார்த்தபோது ஓர் உண்மை வெளியாயிற்று. சரித்திரக்காரன் உண்மையை வெளியிடக் கடமைப்பட்டவன். அது இனிய செய்தியானாலும் மனசுக்குக் கஷ்டத்தைத் தருவதானாலும் உண்மையை உள்ளவாறே சொல்லவேண்டும்.''

''நானும் உண்மையைத்தான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். எங்கள் பரம்பரையில் எல்லோரும் நல்லவர்களென்று நான் குருட்டுத்தனமாக எண்ணிக்கொள்ளவில்லை. அவர்களுக்குள் சிலர் மிகவும் இழிந்த சுபாவமுடையவராக இருந்திருக்கலாம். சிலர் குற்றவாளிகளாக இருக்கலாம். அதனால் என்ன? சரித்திரத்தை நாம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும்.''

''அது வாஸ்தவந்தான். ஆனால் நான் கண்டுபிடித்த விஷயம் அந்த மாதிரியானதல்ல. உங்கள் ஆசைக்குகந்த பொருள் பற்றியது. அதைக் கேட்டால் நீங்கள் மிக்க ஏமாற்றத்தை அடைவீர்கள்.''

''எதுவாயிருந்தாலும் சொல்லிவிடுங்கள். நான் கேட்கத் தயாராயிருக்கிறேன்.''

''சொல்லுகிறேன். கூடத்தில் வைத்திருக்கிறீர்களே, அந்தப் படம் நீங்கள் நினைத்தபடி காமைய பாண்டியருடையதல்ல!''

''என்ன!'' ஜமீன்தார் திடுக்கிட்டார். நான் கண்டெடுத்தது அவர் படம் அல்லவா?'' என்று கேட்டார்.

தாங்கள் கண்டெடுத்த பழைய படம் காமைய பாண்டியருடையதுதான்; அதில் சந்தேகமே யில்லை. ஆனால் இந்தப் புதிய படம் அவருடையது அல்ல.''

''இரண்டும் ஒன்றுதானே?''

''அல்ல, இரண்டும் வெவ்வேறு.''

"இது பெரிய மர்மமாக இருக்கிறதே!"

"பழைய படத்துடன் கிடைத்த நறுக்கின் வாக்கியமும் அப்படித்தான் மர்மமாக இருந்தது. இப்போது எல்லாம் தெரிந்துவிட்டது. சற்றுப் பொறுமையோடு கேட்டால் விஷயத்தை விளக்குகிறேன்."

"சொல்லுங்கள்" என்று சொல்லி ஜமீன்தார் தம் நெற்றியில் துளித்த வேர்வையைத் துடைத்துக் கொண்டார்.

"காமைய பாண்டிய நாயக்கர் மகா வீரர். அவரைப் பாண்டிய அரசன் கண்ணைப்போல் பாவித்தான். இந்தச் சம்ஸ்தானத்தை வழங்கினான். அவனுக்கு அவரைப் பிரிந்திருக்கவே மனம் சம்மதிக்கவில்லை. தனக்கு அருகிலேயே இருக்கும்படிச் செய்து விடலாமா என்று யோசித்தான். அப்படிச் செய்தால் காமைய பாண்டியர் தம் இஷ்டப்படி சௌக்கியமாக இருக்கவேண்டாமா? ஆகவே, அவரை அடிக்கடி தன்னிடம் வந்து போகும்படி சொல்லிச் சம்ஸ்தானத்துக்கு அனுப்பினான். அவர் தெய்வபக்தி உடையவர். காமைய பாண்டியர் இந்தச் சம்ஸ்தானாதிபதி ஆனவுடன் செய்த முதற்காரியம் என்ன தெரியுமா? நெட்டைக்குளத்தில் ஓர் அம்மனைப் பிரதிஷ்டை செய்து தம்முடைய அரசனாகிய அழகன் பெருமாள் பெயரால் அழகம்மை என்ற திருநாமத்தை வைத்துப் பூசித்தார். அந்தச் செய்தியைத் தெரிவிக்கப் போனபோது, பாண்டிய அரசன் காமைய பாண்டிய நாயக்கரைப் பிரிந்திருப்பது கஷ்டமாக இருக்கிறதென்று தெரிவித்தானாம். அவருடைய படமாவது இருந்தால் தான் அடிக்கடி பார்த்துச் சந்தோஷிக்கலாமென்று சொன்னபோது நாயக்கர், 'அடிமையினுடைய அவலக்ஷண சரீரத்துக்குப் படம் வேறா? வேண்டவே வேண்டாம்'

என்று மறுத்துவிட்டாராம். ஆனாலும் பாண்டியன் கேட்க வில்லையாம். எப்படியோ ஒரு சித்திரகாரனை இங்கே அனுப்பி ஜமீன்தாருக்குத் தெரியாமலே ஒரு படம் எழு தச் செய்து வருவித்தானாம். ஒரு சமயம் நாயக்கர் பாண் டியனிடம் போனபோது அவ்வரசன் அவருக்கு அந்தப் படத்தைக் காட்டி ஆச்சரியப்படும்படி செய்யவேண்டு மென்று நினைத்தான். அப்படியே அதைக் காட்டும் போது நாயக்கர் உடம்பெல்லாம் குன்றிப்போனாராம். அழாக் குறையாகப் பாண்டியனிடம், தம் படத்தை அங்கே வைக்க வேண்டாமென்றும், அதனால் வருங்காலத் தினரின் அவமதிப்புக்குத் தாம் ஆளாகவேண்டுமென்றும் சொல்லித் தம்மிடமே அந்தப் படத்தைக் கொடுத்துவிடும் படி வற்புறுத்தினாராம். பாண்டியன் வேறு வழியொன் றும் தெரியாமல் அந்தப் படத்தை அழிப்பதில்லை என்ற வாக்குறுதியை வாங்கிக்கொண்டு காமைய பாண்டியரி டமே அதைக் கொடுத்துவிட்டானாம். அதை அப்படியே சுருட்டிக் கொணர்ந்து அழகம்மை கோவிலில் வைத்து விட்டார் அவர்.

"எவ்வளவு வினயம்! ஏன் அப்படிச் செய்தார்? அவர் வடிவம் ராஜவடிவமாயிற்றே!"

"அதுதான் இல்லை. அவருக்கு வலது கண்ணில் நோய் வந்து அந்தக் கண்ணை அவர் இழந்தார்; அவ் விடத்தில் ஆழமான குழிதான் இருந்தது. இந்தக் குறையை நித்தியமாக்கக் கூடாது, தம் குறையை வருங் காலச் சந்ததியார் உணரக்கூடாதென்று எண்ணியே அவர் அவ்வாறு செய்தார்; இதுதான் மர்மம்."

கூழைப்பட்டி ஜமீன்தார் ஸ்ரீமான் காமைய நாயக்கர் அயர்ந்து போனார். அவர் அகக் கண்ணின் முன்னே பழைய படத்தின் மற்றொரு பாதி பயங்கரமாகத் தோற்ற மளித்தது.

# நழுவிய பழம்

ஞானமங்கல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மங்கல ஞானதேசிக பண்டார சந்நிதிகள் எந்த ஊருக்கு எழுந்தருளினாலும் அங்கே முதல் நாள் பட்டணப்பிரவேசம் தவறாமல் நடைபெறும்; அடுத்த நாளும் புலவர் மகாசபை நிகழும்; முடிந்தால் அன்றும் மறுநாளும் சைவ சித்தாந்த வளர்ச்சிக் கழகத்தின் கூட்டம் நடக்கும். இவற்றிலெல்லாம் தலைமை வகித்துப் புலவர்களையும் சமய சாஸ்திரத் தேர்ச்சி பெற்றவர்களையும். ஆதரித்துச் சபையைச் சிறப்பாக நடத்திக் கொடுக்கும் பேராற்றல் படைத்தவர், ஆதீன கர்த்தராகிய ஸ்ரீலஸ்ரீ மங்கல ஞான தேசிகர். அவருக்குச் சித்தாந்த சாஸ்திரமென்றால் தண்ணீர் பட்ட பாடு. சிவஞான போதத்துக்குப் பண்டார சந்நிதிகளுடைய விளக்கமான உரை ஒன்று வெளிவர வேண்டுமென்று சைவ உலகமே தவங்கிடந்தது.

தமிழ்ப் புலமையிலும் சரி, மடத்தின் நிர்வாகத்திலும் சரி, பண்டார சந்நிதிகள் ஓர் உதாரண புருஷர்.

ஞானமங்கல ஆதீனத்தைப்பற்றி முன்பெல்லாம் தமிழ்நாட்டில் பலருக்குத் தெரியாது. அவர் பன்னிரண்டாவது ஞானாசிரியராக எழுந்தருளியிருக்கிறார். அவருக்கு முன் பதினொருவர் மடாதிபதிகளாக இருந்த காலத்தில் அந்த மடத்தைப்பற்றி ஒரு தாலுகாவுக்காவது தெரியுமா என்பது சந்தேகம். இப்போதோ சைவ ஆதீனங்களைப்பற்றி யார் நினைத்தாலும் முதலில் ஞானமங்கலந்தான் நினைவுக்கு வருகிறது. லக்ஷக்கணக்கில்

வரும்படியுள்ள மடம் அன்று. உண்மையைச் சொல்லப் போனால் ஸ்வாமிகள் பட்டத்திற்கு வரும்போது ஒரு லக்ஷ ரூபாய் கடன் மூட்டை மடத்தின் நிர்வாகத்தை அமிழ்த்திக்கொண்டிருந்தது. வருவாயோ இருபதினாயிரத் துக்குள் அடங்கி நின்றது. அதனையும் ஒழுங்காகத் தொகுக்கும் வகையில்லை. ஏதோ அந்தர தர்பாராக மடத் தின் நிர்வாகம் காரியஸ்தர்களின் மனம் போன போக்கிலே முன்பெல்லாம் நடைபெற்று வந்தது. மடாதிபதியோ வெறும் பொம்மையாக இருந்தார். அவருக்குத் தனி மனி தர் என்ற முறையில் வேண்டிய போகங்களெல்லாம் கிடைத்து வந்தன. அதற்குமேல் மடத்தைப்பற்றியோ, சைவத்தைப்பற்றியோ, உலகத்தைப்பற்றியோ அவருக் குக் கவலை இல்லை. மடத்துக் காரியஸ்தர்கள் வைத்தது சட்டமாக இருந்ததில் என்ன ஆச்சரியம்?

கலியுகம் மறைந்து கிருதயுகம் வந்ததுபோல ஆயிற்று, இந்த ஞானதேசிக பரமாசாரிய ஸ்வாமிகள் பட்டத்திற்கு வந்தது. வர வர இவர் செய்த ஏற்பாடுகள் மடத்தின் வருவாயையும் மதிப்பையும் உயர்த்தின. தக்கபடி வேலை செய்யும் நிர்வாகிகளை நியமித்துப் பழைய பெருச்சாளி களையெல்லாம் விலக்கி விட்டுப் புதிய கணக்குகளையும் சம்பிரதாயங்களையும் அமைத்து ராஜாங்கத்தைப்போல நிர்வாகம் நடக்கும்படி செய்தார்.

இயற்கையாக மடத்துக்கு இருந்த வருவாயோடு புதிய வருவாய்களும் சேர்ந்தன. ஸ்வாமிகளுடைய கல்வி, ஒழுக் கம், நிர்வாகம் ஆகியவற்றைக் கண்ட பலர் ஞானமங்கல மடத்துச் சிஷ்யர்களானார்கள். ஸ்வாமிகளுக்குப் பொன் னாலும் மணியாலும் நிலத்தாலும் கலத்தாலும் காணிக்கை செலுத்தினார்கள். தேசாடனத்தில் அவரை உபசரித்து

மகேசுவர பூஜை நடத்திச் சபைகளைக் கூட்டுவித்து இன்பம் அடைந்தார்கள். இத்தனை காரியங்களாலும் மடத்தின் பொருளும் புகழும் உயர்ந்தன. ஸ்வாமிகள் பட்டத்திற்கு வந்து பத்து வருஷங்களுக்குள் பழைய கடன் தீர்ந்துவிட்டதென்றால், அவருடைய நிர்வாகத் திறமைக்கு வேறு என்ன சாட்சி வேண்டும்?

## 2

**வ**ருஷத்தில் பதினொரு மாதங்கள் வெளியூர்ப் பிரயாணத்தில் இருக்கும் மடாதிபதி, ஆதீன மூல புருஷருடைய குருபூஜைக்கு மாத்திரம் ஞானமங்கலத்துக்கு எழுந்தருளி ஒரு மாதம் தங்குவார்.

அடுத்த சித்திரை மாதம் குருபூஜை வரப் போகிறது; மாசி பங்குனியிலே அதற்குரிய திட்டம் தயாராகிவிட்டது. வரவர நிர்வாகம் அதிகமாவதால் மடத்தில் உத்தியோகம் பார்ப்பவர்கள் போதவில்லை. இன்னும் சில தக்க அறிவாளிகளை ராயச வேலைக்கும் தேவஸ்தான வேலைக்கும் காறுபாறு வேலைக்கும் நியமிக்க வேண்டியிருந்தது. அப்படி நியமிக்கும் விஷயத்தில் மடாதிபதியே நேரில் கண்டறிந்து திருப்தியடைந்தால்தான் ஒருவரை நியமிப்பார்கள். மடாதிபதியும் போகும் இடங்களில் தரிசனத்துக்கு வருபவர்களில் மடத்து உத்தியோகம் பார்க்கத் தகுதியுள்ளவர் யாராவது இருக்கிறாரா என்று கவனிப்பது உண்டு. சில நேரம் பார்த்துப் பேசிய மாத்திரத்திலே மனிதருடைய இயல்பையும் திறமையையும் அளவெடுக்கும் அதிமேதையாகையால் அவர் கண்ணுக்கு முன்னே நிற்பவரின் சொரூபம் எக்ஸ்ரே படம் பிடித்ததுபோல உள்ளும் புறம்பும் நன்றாகத் தெரியும்.

இந்த ஆராய்ச்சிக் கண்ணுக்குச் சிவஞானம் எதிர்ப்பட்டான். துறையூரில் ஞானதேசிகர் எழுந்தருளியபோது அந்தப் பிள்ளையாண்டான் கூட்டத்தோடு கூட்டமாக வந்து நமஸ்காரம் செய்தான். அவன் முகத்திலே பால் வடிந்தது. நெற்றியில் அணிந்திருந்த திருநீறு தனிச் சோபையுடன் பிரகாசித்தது. அவன் கழுத்தில் வெறும் சிவப்புக் கயிற்றில் கோத்து அணிந்திருந்த ஒற்றை ருத்திராட்சம், பொன்னிலே பதித்த வைரத்தைப்போலத் தக்க இடத்திலே அமைந்திருக்கிறதென்று சொல்லும்படி அழகாக இருந்தது.

அவனைக் கண்டதுமே ஞானதேசிகருக்கு அருள் பிறந்தது.

"நீ யார், அப்பா?" என்று அன்போடு விசாரித்தார்.

"அடியேன் இந்த ஊர்தான். சமரபுரி முதலியாருடைய தம்பி."

"என்ன வகை?"

"தொண்டைமண்டல முதலியார்."

"தகப்பனார் இவ்வூரில் இருக்கிறாரா?"

"அவர்கள் காலமாகிவிட்டார்கள். அடியேன் தமையனாரே தகப்பனாரைப்போல அடியேனைப் பாதுகாத்து வருகிறார்கள்."

மேலே விசாரணை நடத்தியதில் சிவஞானம் நாலாவது பாரம் வரையில் ஆங்கிலம் படித்தவனென்றும், தமிழில் ஓரளவு நல்ல தேர்ச்சி உள்ளவனென்றும், தேவாரம் இனிமையாகப் பாடுவானென்றும் மடாதிபதி தெரிந்து கொண்டார்.

"மடத்தில் வேலை பார்க்க வருகிறாயா? தக்க சம்பளம் கொடுக்கச் சொல்கிறோம்."

"அடியேன் பாக்கியம். மகா சந்நிதானத்தின் கட்டளையைச் சிரசின்மேல் தாங்கி நடக்கக் காத்திருக்கிறேன்" என்றான் சிவஞானம்.

உடனே பண்டார சந்நிதி அவனுக்கு ராயச வேலை கொடுத்துவிட்டார். "சில காலம் யாத்திரையில் நம்முடன் இருந்து, வேலை பார்த்துப் பிறகு ஞானமங்கலத்துக்குப் போய் வேலை செய்யலாம்" என்று உத்தரவாயிற்று. அப்படியே அவன் யாத்திரைக் காலத்தில் பண்டார சந்நிதியின் கணக்கு வழக்கைப் பார்க்கும் காரியஸ்தருக்கு உதவியாக அமர்ந்து வேலை பார்த்து வந்தான்.

பணிவும், புத்திசாலித்தனமும், கண்கவர் தோற்றமும் உள்ள அவனிடம் பண்டார சந்நிதியின் உள்ளம் பதிந்தது. துறவியாகிய அவர் பற்றற்ற உள்ளத்தோடு இருக்கவேண்டுமென்று சங்கற்பம் செய்துகொண்டவர். கூடியவரையில் அப்படியே இருக்க முயல்பவர். அதனால் தான் அவர் தம் ஒழுக்கத்தைப் பாதுகாத்து வர முடிந்தது. இப்போது இந்தப் பிள்ளையின்மேல் அவரையும் அறியாமல் ஒரு வகையான பாசம் தலைக்கொண்டது.

போகும் ஊர்களிலெல்லாம் மடாதிபதியின் பிரசங்கங்கள் நடைபெறும். மிகவும் கடினமான சாஸ்திர விஷயங்களை உதாரணங்களின் மூலமாக எளிதில் விளக்குபவர் அவர். அவருடைய பேச்சைக் கேட்க ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவார்கள். சிவஞானம் அந்தப் பிரசங்கங்களை ஒன்று விடாமல் கேட்பான்.

ஒவ்வொரு நாளும் பிரசங்கம் முடிந்த பிறகு ஞானதேசிகர் தம் இருக்கையை அடைவார். இரவு நிவேதனமான பிறகு சிவஞானம் தனியே போய் அவரைப் பார்ப்பான். மாலையில் நடந்த பிரசங்கத்தில் தான் தெரிந்து

கொண்டதை அவன் சொல்வான். சில சந்தேகங்களைக் கேட்பான். இந்தச் சம்பாஷணையால் சிவஞானத்தின் அறிவு விசாலமாயிற்று. அவனுடைய கூரிய அறிவைக் கண்ட தேசிகருடைய அருளும் விசாலமாயிற்று. அவனை மடத்தின் நிர்வாகத்திலே ஒரு நல்ல உத்தியோகஸ்தனாக்க வேண்டுமென்று ஆரம்பத்தில் பண்டார சந்நிதி நினைத்திருந்தார், அதற்காகத்தான் யாத்திரைக் காரியஸ்தருக்கு உதவியாக இருக்கச் செய்தார். இப்போதோ கணக்கைக் காட்டிலும் சாஸ்திரத்தைக் கவனிக்கும் காரியத்தில் அவனை ஈடுபடுத்த எண்ணினார். அதற்குக் காரணம் அவருடைய உள்ளத்தின் ஆழத்தில் இருந்த ஓர் ஆவல்.

மடம் இருந்த பழைய நிலையிலிருந்து ஒவ்வொரு முழமாகச் சிரமப்பட்டு உயர்த்தினவர் அவர்; பல தலைமுறையிலே ஏறின அழுக்கைத் துடைத்து மெருகு கொடுத்தவர். தாம் எழுப்பிய அந்த மாளிகை நிலையாகப் பொலிவோடு விளங்க வேண்டுமென்று அவர் ஆசைப்பட்டார். அவருடைய காலத்தில் வரவர விருத்தியாம்சமாக இருந்த மடம், அடுத்தபடி எப்படியாகுமென்பது அவருக்குப் பின் வருபவரைப் பொறுத்தது. நல்ல ஒழுக்கமும் அறிவும் இருந்தாலொழிய மடத்தின் உயர்வைக் காப்பாற்ற முடியாது. அத்தகைய தகுதி பெற்ற ஒருவரைப் பரமேசுவரன் தமக்கு அளித்தால் நிச்சயமாக மடத்தின் புகழ் இன்னும் பல காலம் குன்றாமல் சுடர்விட்டு ஒளிரும்; சைவ சமயத் தொண்டும் விடாமல் நடைபெறும்; மடம் உண்டான நோக்கம் நிறைவேறும்.

இந்தச் சிந்தனை இப்போது தேசிகருக்கு வர வேண்டிய அவசியம் இல்லை. அவர் அப்படி ஒன்றும் தேகத்தளர்ச்சி அடையவில்லை. இன்னும் இருபது

வருஷம் இல்லாவிட்டாலும் நிச்சயமாகப் பத்து வருஷகாலமாவது இப்போதுள்ள மாதிரியே நிர்வாகத்தை நடத்த அவருக்குச் சக்தி இருக்கிறது. பின் இந்த ஞாபகம் வரக் காரணம் என்ன? சிவஞானந்தான். வேண்டியபோது ஆளைத் தேடினால் கிடைக்குமா? கிடைக்கும்போது வேண்டிய ஏற்பாடு செய்வதுதானே நல்லது?

ஆகவே சிவஞானத்தின் திறமையை அறிய அறிய, அவருடைய நினைவு மடத்தின் வருங்கால ஆராய்ச்சியிலே இறங்கியது. அவனுக்கு மடத்தின் நிர்வாகத்தில் ஏதோ சிறிய வேலையைக் கொடுப்பதைவிட மடத்தின் தலைமைப் பதவியையே அளித்துத் தம் கண்முன்னே மடத்தின் நிர்வாகம் சிறப்பாக நடப்பதைக் கண்டு களிக்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு உண்டாயிற்று. அந்தப் பதவிக்கு ஏற்ற அடிப்படையான இலக்கணங்கள் அவனிடம் இருந்தன; சைவகுலம், பிரம்மசாரி, இளைய பிராயம்; இவற்றோடு அறிவும் ஒழுக்கமும் அவனுடைய தகுதியைப் பின்னும் அதிகமாக்கின.

பண்டார சந்நிதி அடிக்கடி சிவஞானத்தை அழைத்துப் பேசுவதும், அவன் அறிவின் இயல்பை அறிவதும், அவனைத் தேவாரம் பாடச் சொல்லிக் கேட்பதும், மற்றவர்கள் கவனத்திற் படாமற் போகவில்லை. அவனை மடத்தைச் சார்ந்தவர்கள் மரியாதையோடு நடத்தத் தொடங்கினார்கள்.

"சிவஞானம், உனக்குச் சைவசித்தாந்த சாஸ்திரம் பாடம் சொல்லலாமென்று நினைக்கிறோம்" என்று சொன்னபோது சிவஞானத்துக்கு மயிர்க்கூச்செறிந்தது. "அடியேனுக்கு அந்த மகா பாக்கியம் கிடைக்குமானால்

இப்பிறவி பெற்ற பயனை கிடைத்தது போல ஆகும்'' என்று மனமுருகித் தன் ஆர்வத்தை வெளிப்படுத்தினான்.

''இடையிடையே தமிழ் இலக்கண இலக்கியங்களும் கேட்க வேண்டும். ஓரளவு படித்துவிட்டால் மேலே நீயே உணர்ந்துகொள்ளலாம். சித்தாந்த சாஸ்திர விஷயத்தில் மட்டும் சில நூல்களைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். நமக்குள் பல வேலைகளில் இதையும் ஒன்றாக வைத்துக்கொள்ள எண்ணியிருக்கிறோம்.''

''மகா சந்நிதானத்தின் பேரருள் இந்த நாயடியேனைப் பொருட்படுத்தி இத்தகைய பெரிய லாபத்தை வழங்கத் திருவுள்ளங்கொண்டிருப்பதை அடியேன் கனவிலும் முன்பு எண்ணியிருக்கவில்லை.''

''உலகில் ஒழுக்கமும் அறிவும் சேர்ந்த இடத்தில் தெய்வம் விளங்கும். சைவசமயம் மிகச் சிறந்தது. இதன் உயர்வு இதனை உலகிலே பரப்பிய பெரியார்களின் சிறப்பினால் உண்டாகியது. பல சைவ ஆதீனங்களை நிறுவிய மூல புருஷர்கள் தவத்தினாலும் அறிவினாலும் சிறந்தவர்கள். அவர்கள் வழிவந்த நாமும் அறிவையும் ஒழுக்கத்தையும் பாதுகாக்க வேண்டும். மடத்தின் தொடர்பு எல்லோருக்கும் கிடைக்காது. புண்ணியம் செய்தவருக்கே அது கிடைக்கும். அந்த நிர்வாகத்தில் சிறிய தொண்டு புரிந்தாலும் அது பெரிய சிவத்தொண்டாகும். எவ்வளவுக்கு எவ்வளவு அந்த நிலை உயர்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அந்தத் தொண்டின் பெருமையும் பயனும் சிறந்து நிற்கும்.''

தேசிகர் இந்தக் குட்டிப் பிரசங்கத்தை ஆரம்பித்ததற்குக் காரணம் சிவஞானத்துக்கு முதலில் விளங்கவில்லை.

பிறகு, 'நாம் மடத்திலிருந்து விலகி வேறு உத்தியோகத்திற்குப் போய்விடக்கூடுமென்று சந்நிதானத்திற்குச் சந்தேகம் உண்டாயிற்றோ?' என்று யோசித்தான்.

"இந்த மடாலயத்தின் தொடர்பு பெற்றவர்கள் தாங்கள் பெற்ற பேற்றை நன்றாக அறிவார்கள். இந்த உலகத்தில் வேறு எந்த இடத்தில் இருந்தாலும் இம்மைக்கும் மறுமைக்கும் உதவும் இந்தப் புண்ணியம் கிட்டாது" என்று பொதுவாகச் சொல்லி வைத்தான்.

"ஆம்; உண்மை. ஆயிரம் கோயில் வழிபாட்டைக் காட்டிலும் ஒரு மடாலயத் தொண்டு சிறந்தது. மனிதர்கள் உத்தியோகமென்றும் குடும்பமென்றும் சொல்லி அலைந்து பதிஞானம் பெறாமல் மேலும் மேலும் பிறவிக்கே அடியிடுகிறார்கள். சிவஞானம் வருவது மிகவும் அரிது. அது வரவேண்டுமானால் சோபானக்கிரமத்தில் வரவேண்டும். நல்ல ஞானசிரியரின் திருவருள் கிடைக்க வேண்டும். எல்லோரையும் போல மனைவி மக்களுடன் வாழ்வது பெரிதல்ல. உலகத்துச் சிற்றின்பங்களை எவன் தியாகம் செய்கிறானோ அவன்தான் பேரின்பத்தை அடைவதற்குரிய பக்குவத்தை அடைகிறான். சிவஞானம் அடைவதற்கும் அதனைப் பிறர் அடையச் செய்வதற்கும் உரிய பண்ணையாக ஆதீனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தீட்சை பெற்றுத் துறவு பூண்டு, தவத்தை வளர்க்கும் வாய்ப்புப் பலருக்குக் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்து விட்டால் அவர் தேவரைக் காட்டிலும் பெரியவர். பிரம்மசரிய விரதம் காத்துத் துறவு பூணும் சிவஞானச் செல்வர்களின் பரம்பரை அரசாட்சி செய்யும் இடம் மடாலயம். பூலோக கைலாசம் இது. இதன் சம்பந்தம் சிவ சம்பந்தமே. இங்கே தவநிலை நிற்பார் மிகப் பெரியர்."

இன்னும் சிவஞானத்துக்குப் பண்டார சந்நிதியின் உட்கிடை விளங்கவில்லை.

"உன்னுடைய எதிர்காலத்தைப்பற்றி நன்றாகச் சிந்தித்துப் பார். உனக்குச் சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் நல்ல பயிற்சி உண்டாக வேண்டும். போகப் போக நாம் சொன்னவற்றின் பொருள் விளங்கும்'' என்று சொல்லி முதல் முதலில் சித்தாந்தக் கட்டளையில் பாடத்தைத் தொடங்கினார்.

## 3

சிவஞானம் சித்தாந்த பாடங்களைக் கேட்டு வந்தான். பஞ்சாட்சர உபதேசம் ஞானாசிரியரிடம் செய்துகொண்டான். பிறகு தீட்சை செய்துகொண்டான். சாஸ்திரம் படிக்க அவை இன்றியமையாதனவென்று தெரிந்து கொண்டான். அவனுடைய தீவிரமான அறிவு சாஸ்திரக் காட்டிலே தங்குதடையின்றிச் சென்றது.

யாத்திரைக் காலத்தில் வருபவர்களைப் பார்ப்பது, அவர்களோடு பேசுவது, சபையைக் கூட்டுவது, பிரசங்கம் செய்வது முதலிய பல காரியங்களுக்கிடையே சிவஞானத்துக்குப் பாடம் நடந்து வந்தது. அவனுடைய வேகத்துக்கு ஏற்றபடி மடாதிபதியால் பாடம் சொல்ல இயலவில்லை. தமக்காக அவனை நிதானப்படுத்தவும் அவருக்கு மனம் இல்லை. ஆகவே, வேறு தக்க அறிவாளியிடம் அவனைப் பாடம் கேட்கச் செய்யவேண்டும் என்று எண்ணினார். அவருக்குத் தெரியாத புலவர் யார் இருக்கிறார்? திருநெல்வேலியிலிருந்த திருஞானசம்பந்த முதலியாரைக் காட்டிலும் சிறந்தவர் யாரும் இல்லை. மங்கலஞான தேசிகருடைய அருளுக்குப் பாத்திரமானவர் அவர். தமிழுல

கத்தில் சைவ சித்தாந்த முடிச்சுக்களை அவிழ்க்க, அவரை யன்றி ஆளில்லை. அவரோ இந்த மடாதிபதியின் ஏவலைத் தலையாலே செய்யக் காத்திருப்பவர். அவரிடமே அனுப்பி அவர் வீட்டிலேயே இருந்து சில வருஷங்கள் சிவஞானம் சாஸ்திரங்களைப் பாடம் கேட்டுவந்தால், பிற்பாடு அவ னுக்குக் காஷாயம் கொடுத்து மடத்தின் அடியார் கூட் டத்தில் ஒருவனுக்கலாமென்பது அவர் திட்டம். பிறகு சின்னப் பட்டம் கட்டி மடத்தின் பொறுப்பையெல்லாம் அவனிடம் ஒப்பித்துவிட்டு ஓய்வாகத் தவம் புரிய வேண்டுமென்பது அவர் முடிவான நோக்கம்.

பண்டார சந்நிதிகளிடமிருந்து வந்த திருமுகத் தைக் கண்டதும் திருஞானசம்பந்த முதலியார் புறப்பட் டார். வந்து ஞானாசிரியரைத் தரிசித்து வணங்கினார்.

ஸ்வாமிகள் முதலியார் நெற்றியில் திருநீறிட்டு அருகே உட்காரச் செய்து க்ஷேமத்தை விசாரித்துவிட்டுத் தம் கருத்தை மெல்லத் தெரிவித்தார்.

"நம்முடைய சிவஞானம் சித்தாந்த சாஸ்திரப் பாடம் கேட்டு வருகிறான். நல்ல அடக்க ஒடுக்கமான பிள்ளை. சொன்னதை உடனே கிரகித்துக்கொள்கிறான். சைவ சித் தாந்த சாஸ்திரங்களைக் கிரமமாகப் படிக்கிறவர்கள் இப் போது குறைந்து வருகிறார்கள். உங்களைப்போல ஒருவரை எங்காவது பார்க்க முடியுமா? உங்களுடைய புலமையைப் பயன்படுத்திக்கொள்ள எண்ணியிருக்கிறோம். சிவ ஞானத்தை உங்களிடம் பாடம் கேட்கச் சொல்லவேண்டு மென்பது நம்முடைய ஆவல்."

"மடத்திலே வந்திருந்து பாடம் சொல்ல வேண்டு மென்பது சந்நிதானத்தின் திருவுள்ளமா?" என்று சந்தேகப்பட்டுக் கேட்டார் முதலியார்.

"இல்லை, இல்லை; உங்கள் பார்வையின் கீழ் உங்கள் குமாரனைப்போல அவனை வைத்துக்கொண்டு பாடம் சொல்லவேண்டும். செலவும் மற்றப் பொறுப்புக்களும் மடத்தைச் சார்ந்திருக்கும். நல்ல வஸ்துவைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டுவது நம் கடமை. நீங்களும் நல்ல ஆசிரியர்; அவனும் நல்ல மாணாக்கன். இருவரும் பயன் பெற வேண்டும்."

"கரும்பு தின்னக் கூலி வேண்டுமா? மகா சந்நிதானத்தில் கட்டளையிடும்போது அதைக் காட்டிலும் உத்தமமான செயல் வேறு என்ன இருக்கிறது? அடியேன் படித்த படிப்பைச் சிவஞானத்தைப் போன்ற ஒருவர் பெற்று விருத்தியானல் அதனுல் முதல் லாபம் அடியேனுக்குத்தானே? மகா சந்நிதானத்தின் திருவுள்ளப்படியே செய்யலாம். நல்ல நாள் பார்த்து அடியேனை அழைத்துச் செல்கிறேன். அடிக்கடி அவனுடைய அபிவிருத்தியைப்பற்றிச் சந்நிதானத்தின் திருமுன் விண்ணப்பித்துக் கொள்கிறேன்."

ஞானதேசிகர் உயர்ந்த சாதராவும் நூறு ரூபாயும் முதலியாருக்குச் சம்மானம் செய்தார். மாசந்தோறும் நூறு ரூபாய் மடத்திலிருந்து அனுப்ப ஏற்பாடு செய்தார். தம்முடைய ஞான பரம்பரையைக் காப்பாற்றப் போகும் ஞானக் கன்றை வளர்க்கும் விஷயத்தில் இதெல்லாம் ஒரு பொருளா?

அவர் கருத்தை முற்றும் தெரிந்துகொண்டவர் யாரும் இல்லை. சிவஞானத்திடம் பண்டார சந்நிதிக்குக் கரை கடந்த அன்பு ஏற்பட்டது வெளிப்படையாகத் தெரிந்த விஷயம். சித்தாந்தப் பெரும் புலவனுக்கி மடத்

தில் வைத்துக்கொள்ள விரும்புகிறுரென்றே பலரும் நினைத்தார்கள்.

சைவ சித்தாந்த சரபம், சைவ சமயப் பிரசங்கபானு, சிவஞானபோதக் களஞ்சியம், சித்தாந்தப் பெரும் புலவரேறு ஆகிய திருஞானசம்பந்த முதலியாரவர்களுடைய மாணுக்கனுன் சிவஞானம். நன்மதிப்புடையவனுக, மடத்துச் செயலில் மடத்துப் பிள்ளையைப்போல அவன் இருந்தாலும், பரம ஏழையைப்போலவே ஆசிரியரிடம் மிகவும் அடக்க ஒடுக்கமாகப் பழகினுன். அவனுடன் பழகப் பழக முதலியாருக்கு அவனிடம் பற்று அதிகமாயிற்று. 'இந்தப் பிள்ளையிடம் மகா சந்நிதானத்துக்குப் பிரியம் உண்டானது ஆச்சரியமே அல்ல' என்பதை அவர் உணர்ந்தார். ஆ! என்ன புத்தி விசித்திரம்! அவன் கேட்கும் கேள்விகளைக் கொண்டு முதலியார் புதிய நயங்களைக் காண்பார். ஒன்று சொன்னுல் ஒன்பதைத் தெரிந்துகொள்ளும் மேதையாக இருந்தான் அவன். அவன் மடத்துக்குப் பெருமை உண்டாக்குவது இருக்கட்டும். தமக்கு அழியாத புகழை அவன் உண்டாக்குவானென்ற எண்ணம் முதலியாருக்குத் தோன்றியது. தனிச் சிரத்தையோடு பாடம் சொல்லி வந்தார்.

## 4

"அம்மா, காந்திமதி, தம்பி சிவஞானம் இன்னும் வரவில்லையே! மகா சந்நிதானத்தைத் தரிசித்துவிட்டு மறு நாளே வருவதாகப் போனவன் மூன்று நாளாகியும் வரவில்லை" என்றுர் முதலியார்.

"என்ன அப்பா, அவ்வளவு வேதனைப்படுகிறீர்களே? போன இடத்தில் சந்நிதானம் செய்யும் பிரசங்கங்களைக் கேட்டுக்கொண்டு அதில் ஈடுபட்டிருக்கலாம். சந்நிதா

னமே இன்னும் இரண்டு நாள் இருக்கும்படி உத்தரவிட்டிருக்கலாம். அவருக்குப் பாடம் சொல்லாவிட்டால் உங்களுக்குப் போது போகிறதில்லை. எனக்குச் சொல்லுங்கள்; கேட்கிறேன். சித்தாந்த சாஸ்திரத்தைப் பெண்கள் படிக்கக்கூடாதென்று விலக்கியிருக்கிறார்களா, என்ன? உங்கள் பிரசங்கங்களைக் கேட்டும், மடத்து ஐயாவுக்குப் பாடம் சொல்லும்போது கேட்டும் எனக்கும் ஓரளவு விஷயம் தெரியும். ஆகையால் நீங்கள் எனக்குப் பாடம் சொல்வது கடினமென்று நினைக்காதீர்கள்."

"என்ன, அம்மா, சொல்லுகிறாய்? உனக்குக்கூடச் சித்தாந்தம் படிக்க வேண்டுமென்று ஆசை யிருக்கிறதா? கம்பர் வீட்டு வெள்ளாட்டியும் கவி பாடுவாள் என்ற பழமொழி வீணாகுமா? உன் இஷ்டப்படியே நான் பாடம் சொல்கிறேன். சிவஞானத்தினிடமும் பாடம் கேட்கலாம்."

"ஏன்? உங்களிடம் கேட்பதற்கு எனக்குத் தகுதி போதாதென்று சொல்கிறீர்கள்?"

"அப்படி அல்ல. அடிப்படையான விஷயங்களை...."

"அந்த விஷயங்களெல்லாம் நானே தெரிந்துகொண்டிருக்கிறேன். நீங்கள் பாடம் சொல்லுங்கள்; இல்லையானால் வேண்டாம். தேவாரம் பாடக் கற்றுக் கொடுத்தீர்களே; நான் சோடை போனேனா?"

"சரி, அம்மா. நான் சொன்னது தப்பு. நீ கோபித்துக் கொள்ளாதே. நன்றாகப் பாடம் கேள். நீயும் சித்தாந்தப் பிரசங்கம் செய். அப்படி ஒரு பெண்மணி இருக்கிறாள் என்றாலே சைவ உலகம் பூரித்துப் போகும். என் மகள் என்று உலகம் புகழ்ந்தால் எனக்கு வேறு என்ன

வேண்டும்? மீனாட்சியைப்போல எனக்கு ஒரே பெண்ணைச் சிவபெருமான் அருள் செய்திருக்கிறான். அவள் அப்பிராட்டியைப் போலவே கலை நிரம்பியவளாக இருந்தால் பிள்ளையில்லாக் குறையை நான் எண்ணவேண்டிய அவசியமே இல்லை.''

"அதெல்லாம் மேலுக்குச் சொல்லுகிறீர்கள். மடத்து ஐயாவிடம் உங்களுக்குள்ள பிரியம் எனக்குத் தெரியாதா? உங்களுக்குப் பிள்ளை இல்லையென்று முன்பு சொல்லிக் கொண்டிருக்கலாம். இப்போதுதான் இந்தப் பிள்ளை கிடைத்துவிட்டாரே. ஒரு நாள் இவரைக் காணாவிட்டால் உங்களுக்கு ஒரு யுகம்போல இருக்கிறதே!'' என்று புன்னகை பூத்தாள் காந்திமதி.

முதலியார் பெருமூச்செறிந்தார். அந்தப் பெண் எவ்வளவு நுணுக்கமாக உண்மையைத் தெரிந்துகொண்டிருக்கிறாள்! முதலியாருடைய கல்வி முழுவதையும் சுவீகரித்துக்கொள்ள அந்தப் 'பிள்ளையைக் கடவுளே கொண்டு வந்து விட்டிருக்கிறார். அப்படி இருக்கும்போது அவர் பிள்ளையில்லாக் குறை தீர்ந்துவிட்டதென்று சொல்வது மிகையாகுமா?

"உன்னோடு வாயாட எனக்கு நேரம் இல்லை. உனக்கு இன்று முதலே பாடம் ஆரம்பித்துவிடுகிறேன். என்ன சொல்லட்டும்?''

"சித்தியார் சொல்லுங்கள்.''

"ஆ! அவ்வளவு அறிவு வந்துவிட்டதா உனக்கு? உண்மையாகச் சொல்லுகிறாயா? சித்தியாரைச் சொன்னால் புரிந்துகொள்வாயா?''

"நான் புரிந்துகொள்ளும்படி உங்களால் சொல்ல முடியும் என்றே நம்புகிறேன்'' என்று சாதுரியமாக விடை

யளித்தாள் அவள். அவளுக்கு விளங்காவிட்டால் அது சொல்பவருடைய குறை என்பதுதானே அதற்கு அர்த்தம்?

முதலியார் தம் பெண்ணுக்கு அத்தனை அறிவு எங்கிருந்து வந்ததென்று ஆச்சரியப்பட்டுப் போனார். 'பெண்கள் தங்கள் சக்தியைச் சந்தர்ப்பம் வரும்போது வெளிப்படுத்துவார்கள். அது வரையில் இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்று இருப்பார்கள்' என்பதை முதலியார் அறிந்திருந்தார். ஆனால் தம் சொந்த மகளின் திறமையைத் தாம் இதுகாறும் அறிந்து கொள்ளவில்லையென்பது அவருக்குப் புலப்பட்டபோது, 'பெண்கள் தங்கள் திறமையை அடக்கி வைத்திருப்பது கிடக்கட்டும். ஆண்கள் எவ்வளவு பழகினாலும் பெண்களின் சக்தியை எளிதில் அறிந்துகொள்ள முடியாது' என்று ஆண் இனத்தின் பலஹீனமும் புலப்பட்டது.

தம் மகளுக்கும் சித்தாந்த பாடம் சொல்ல ஆரம்பித்தார். சிவஞானம் நான்கு நாள் கழித்து வந்த பிறகு தம் ஆசிரியரிடம் வேறொருவர் பாடங் கேட்கத் தொடங்கியிருக்கும் செய்தி தெரிய வந்தது. அதை இப்போது தெரிந்து கொண்டதில் ஒரு விசேஷம் இருந்தது. அவன் உள்ளத்தில் ஒரு துணுக்கம் ஏற்பட்டது. இந்த முறை ஞானசிரியரைத் தரிசித்தபோது வழக்கம்போல அவர் செய்த உபதேசங்கள் பல. முக்கியமாக அவர் ஒன்றை வற்புறுத்தினார். "சிவஞானம், உன்னால் உலகத்துக்குப் பெரிய நன்மைகள் ஏற்படவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம். நீ உன்னுடைய சிந்தை முழுவதையும் சமய நூல்களிலே ஈடுபடுத்த வேண்டும். உலகியலில் சிறிதும் கவனத்தைச் செலுத்தாதே. நீ எப்போது மடத்தின் செல்

வப் பிள்ளையாகிவிட்டாயோ, அப்போதே உனக்கு லௌகிகக் கொள்கைகள் பறந்துபோய் விட்டன. ஆகை யால் எல்லாவற்றையும் மறந்து சாஸ்திர அறிவிலே ஆழ்ந்து பயில். முக்கியமாகப் பெண் பிள்ளைகளோடு பேசுவதோ, பழகுவதோ கூடாது. அந்த விஷயத்தில் வெகு ஜாக்கிர தையாக இருக்கவேண்டும். உலகம் பொல்லாதது. சிவ பெருமான் உனக்கு மனோதிடத்தையும் அறிவுப் பலத் தையும் அருள் செய்வாராக!" என்று அவர் உள்ளுருகிக் கூறிய வார்த்தைகள் அவன் காதில் ஒலித்தன. அந்த நினைவோடு இங்கே வந்தான். இங்கே இதோ ஒரு பெண் தனக்குப் போட்டியாகப் பாடம் கேட்க வந்திருக் கிறாள். 'உலகம் பொல்லாதது' என்று அவனும் நினைத்தான்.

காந்திமதி அவனுக்குத் தெரியாத பெண் அல்ல. மடத்து ஐயாவும் அவனுக்குப் புதியவர் அல்ல. ஆனாலும் காந்திமதி என்னும் சட்டகத்துக்குள்ளே இருந்த அறிவுப் பிழம்பு அவனுக்குப் புதிதாக இருந்தது. அவளைப்பெற்ற தகப்பனாருக்கே புதிதாக இருக்கும்போது அவனுக்குப் புதிதாகத் தோன்றுவது என்ன ஆச்சரியம்? 'பெண் களோடு பழகாதே' என்று ஞானாசிரியர் உபதேசம் செய்த தைப்பரிகசிக்கிறதைப் போல இருந்தது காந்திமதிபாடம் கேட்ட நிகழ்ச்சி. அவள் தந்தை சொன்னார்: "சிவஞானம், இவள்கூடச் சித்தாந்த சாஸ்திரம் படிக்கிறாளாம். முன்பே பல விஷயம் தெரிந்துகொண்டிருக்கிறாள். சொன்னதை யெல்லாம் உடனே பிடித்துக் கொள்கிறாள். தனியாக நீ பாடம் கேட்கிறாய். பாடம் கேட்பதைப் பிறருக்குச் சொல்லிப் பழகினால் அறிவு வன்மையுறும் என்று சொல் வார்கள். ஆகையால்நீயும்இவளுக்குப்பாடம்சொல்லலாம்."

"அப்பா, அம்மா எதற்கோ கூப்பிடுகிறாள்" என்று உள்ளே எழுந்து போய்விட்டாள் அவள்.

சிவஞானம், "எனக்கு அவ்வளவு போதாது. அதோடு லஜ்ஜையாகவும் இருக்கிறது" என்று சொல்லிவிட்டான். சந்தர்ப்பம் கிடைத்தபோது காந்திமதி, "நான் அவரிடம் பாடம் கேட்கமாட்டேன். முன்பே இதைச் சொல்லி இருக்கிறேன். அவரைப் பாடம் சொல்லச்சொல்லி வேலை வாங்கு வதற்காகவா மடத்தில் உங்களுக்குப் பணம் தருகிறார்கள்?" என்று கேட்டாள். முதலியார் அந்தப் பேச்சையே பிறகு எடுக்கவில்லை,

இரண்டுபேரும் தனித்தனியே பாடம் கேட்டார்கள். சிவஞானம் கேட்டபோது அவள் உள்ளே இருந்து கவனித்து வந்தாள். அதனால் அவன் பாடத்தையும் அவள் சேர்த்துக் கேட்ட பலன் கிடைத்தது. அவளுக்குப் பாடஞ் சொன்னபோது முதலில் சிவஞானம் கவனிக்கா விட்டாலும் அவளுடைய சாதுரியமான கேள்விகள் கவனிக்கும்படியாகச் செய்து விட்டன. 'இந்தப் பெண்ணுக்கு எவ்வளவு கூரிய அறிவு இருக்கிறது!' என்று வியந்தான். உடனே, 'உலகம் பொல்லாதது!' என்ற ஞானாசிரியர் உபதேசம் தனியே ஓர் உருவெடுத்து அவனைப் பயமுறுத்து வது போல இருந்தது.

இருவரும் தனியே பேசவில்லை; முதலியார் முன்பும் ஒன்றாக இருந்து பழகவில்லை. ஆனாலும் இயற்கை வேலை செய்யத் தொடங்கியது. ஒருகால் இருவரும் தாராளமாகப் பழகினால் அதன் வேகம் குறைந்திருக்குமோ என்னவோ! இப்போது நாளுக்கு நாள் அது முறுகி வளர்ந்து வேகம் பெற்று இருவர் உள்ளத்தையும் ஆட்கொண்டது. அவள் சிந்திக்கிறாள்: 'இவர் மேனி அழகு கிடக்கட்டும்; கஷ்டப்

பட்டால் நூறுபேரை இவரைப்போலப் பொறுக்கி யெடுக் கலாம். ஆனால் இவருக்கென்று இந்த அறிவைக் கடவுள் எங்கிருந்து கொண்டுவந்து கொடுத்திருக்கிறார்? தேவா ரத்தைத் தேனுக்கிப் பாடுகிறார்; சாஸ்திரத்தையோ கரைத் துக் குடித்துவிட்டார். அப்பா இவரிடத்தில் பாகில்விழுந்த ஈயைப்போலத் தம்மையிழந்து நிற்பதற்குக் காரணம் இருக்கிறது. இந்தப் பண்டார சந்நிதிக்கு இவர் எப்படிக் கிடைத்தார்? அவர் பாக்கியசாலி. அவர் பாக்கியம் இருக் கட்டும். எங்கள் அப்பா இப்படி ஒரு மாணுக்கரைப் பெற எவ்வளவு தவம் செய்திருக்கவேண்டும்? இவரைக் கல்யா ணம் பண்ணிக்கொள்ளும்....' சிந்தனைகூட நின்றுவிடுமா என்ன? உள்ளத்துக்குக்கூடச் சோர்வு உண்டோ? அது தான் அப்படி அவள் மயங்கி ஸ்தம்பித்து நிற்கிறாள்.

அவனோ? எத்தனையோ சிந்தனைகள் அவன் உள்ளத் தில் ஓடுகின்றன. ஆனால் ஒவ்வொரு சிந்தனைத் தொடரும் 'உலகம் பொல்லாதது' என்ற ஞானசிரியர் உபதேச மாகிய பல்லவியில் வந்து முடிகின்றது.

'இவள் அறிவு சாமான்யமானதன்று. பெண்கள் சமய நூல் படிப்பதென்பது அதிசயம். ஆண்களே படிப்ப தில்லையே! கல்லும் முள்ளும் கலந்த பாதை சமயநூல் ஆராய்ச்சி. அதில் இவள் தளிரும் பூவும் பரத்திய பாதை யில் நடப்பதுபோல நடக்கிறாளே. சிவஞானபோதம் இவள் அறிவிலே ஊறி இனிக்கிறதே! பெண்-ஆம்; இவள் பெண் தான். இவளோடு பழகுவதும் பேசுவதும் தவறு என்று சொல்வது நியாயமா? ஞானசிரியர் இவளைக் கண்டால் அப்படிச் சொல்லுவாரா? சே, சே, இவளை உத்தேசித்துச் சொன்னதல்ல அது. இவள் சாஸ்திரப் பிழம்பு. இவளைக்

கண்டால் எந்தச் சித்தாந்தியும் தொழவேண்டும்.' இது அவ ளுடைய அறிவின் திறமையை வியந்த நினைப்பு.

'இவள் சுந்தராங்கியாக இருக்கிறாள். இவள் அறிவைக் கண்டு பாராட்டும் ஆடவன் இவளுக்குக் கிடைத்தால் தானே இவள் வாழ்வில் இன்பம் உண்டு; இவளுக்கு அப் படி ஒருவன் கிடைப்பது பெரிதல்ல. இவளை ஒருவன் மனைவியாக அடையக் கொடுத்துவைக்க வேண்டுமே! சாஸ்திரத்தின் நுணுக்கங்களில் இவள் அறிவு அநாயாச மாகச் செல்கிறது. இவள் புறஅழகும் அக அழகும் பூஜிக் கத் தக்கவை. பூஜிக்கும் தகுதி எல்லோருக்கும் வராது. விஷயம் அறிந்த, சாஸ்திரம் அறிந்த ஒருவன்—நம்மைப் போன்ற ஒருவன்தான் அதற்கு ஏற்றவன். நம்மைப் போன்ற என்பானேன்? என்னையன்றி வேறு எவருக்கும் இவள் அருமை தெரியாது....' இந்த நினைப்புக்கு முற்றுப் புள்ளி போட்டது, "உலகம் பொல்லாதது. பெண்களோடு பழகாதே" என்ற உபதேசத்தின் எதிரொலி.

அவள் துணிச்சல் பெற்றாள். அவள் தகப்பனார் இரண்டு நாள் எங்கோ பிரசங்கத்துக்குப் போயிருந்தார். சிவஞானமும் உடன் செல்வது வழக்கம். இந்தத் தடவை போகவில்லை. அவனுக்குச் சிறிது ஜுரம் போல இருந்தது.

அப்போது சிவஞான போதப் பாடம் கேட்டுக்கொண் டிருந்தாள் அவள். தகப்பனார் ஊருக்குப் போகிற அவசரத்தில் சொன்ன ஒரு விஷயம் அவளுக்கு விளங்க வில்லை. இப்போது அதைச் சிவஞானத்திடம் கேட்கலா மென்று துணிந்துவிட்டாள். கேட்டாள். சொன்னான். 'இதென்ன? இவ்வளவு இனிமையாகச் சொல்ல, எளி தாகச் சொல்ல எங்கே தெரிந்துகொண்டோம்!' என்று அவனே அந்த நிகழ்ச்சியைப் பற்றி ஆச்சரியப்பட்டான்

'இது நம் திறமை அல்ல. காந்தம் இரும்பை இயக்குகிறது. அனல் மெழுகை உருக்குகிறது. காந்திமதியின் சந்நிதியில் இனிமை எனக்கு வந்தது' என்று அவன் மதுரமான சிந்தனை லோகத்தில் மிதந்துகொண்டிருந்தான்.

அவள் சும்மா இருந்தாளா? 'அடாடா! எத்தனை அருமையாகச் சொல்லி விளக்கினார்! அவர் சொன்ன உதாரணம் எத்தனை அழகு! இதுவரையில் அவரிடமே நான் பாடம் கேட்டிருந்தால்—' அவள் உடம்பு புல்லரித்தது.

## 5

காந்தமும் இரும்பும் அணுகின. காந்திமதியும் சிவஞானமும் உள்ளத்தால் பிணிப்புண்டனர். இது திருஞானசம்பந்த முதலியாருக்குத் தெரியாமல் போக வில்லை. அவர் சந்தோஷப்பட்டார். ஞானமங்கல ஆதீன வித்துவானை மாப்பிள்ளையாகப் பெறுவதென்றால் அவருக் குக் கசக்கிறதா? அவருக்கு எளிதிலே கிட்டுவதா அந்தப் பாக்கியம்?

காந்திமதி ஒருமுறை பண்டார சந்நிதிகளைத் தந்தை யுடன் சென்று தரிசித்தாள். குழந்தைக்குச் சித்தாந்த சாஸ்திரத்தில் அறிவு உண்டு என்று சொல்லி வைத்தார் முதலியார். காந்திமதி சிவஞான சித்தியாரிலிருந்து சில திருவிருத்தங்கள் சொல்லி உரை விரித்தாள். மிகவும் நன்றாக இருந்தது. மடாதிபதி மனமுருகி அவளைப் பாராட்டினார். "குழந்தாய், உனக்குச் சிறந்த சாஸ்திர அறிவு வாய்ந்த மணாளன் கிடைக்கவேண்டும். ஸ்ரீ நெல்லை யப்பர் திருவருளால் உனக்கு ஏற்ற அறிவழகன் கிடைப்பா னென்றே தோன்றுகிறது" என்று ஆசீர்வாதம் செய்தார்.

சிவஞானம் சைவசித்தாந்த சாஸ்திரங்கள் பலவற்றைப் பாடம் கேட்டான். ஆராய்ந்தான். அவன் அறிவு சாஸ்திரச் சுரங்கத்தில் நுழைந்து வேலை செய்தது. அவன் இருதயமோ காதலென்னும் சுகந்தத்தைப் பெற்று மலர்ந்தது. ‘உலகம் பொல்லாதது’ என்ற உபதேசம் அந்த மலர்ச்சியைத் தடைப்படுத்தவில்லை, காதல் வளர்ந்தது.

அவளும் காதல் உருவானாள்.

தகப்பனார் இரண்டு காதலர்களையும் ஒன்று படுத்தத் தருணம் பார்த்திருந்தார்.

பண்டார சந்நிதியோ அவனுக்குக் காஷாயம் கொடுக்கத் திட்டம் போட்டுக்கொண்டிருந்தார்.

அவன் நாக்கிலும் மூளையிலும் சித்தாந்த சாஸ்திர அறிவு நிரம்பியிருந்தது. உள்ளத்தில் காதல் நிரம்பியிருந்தது. சாஸ்திர அறிவு மேலே மிதந்தது. அடியிலே ஆழத்தில் உள்ள காதற் பிரதேசத்தைத் தொட அதற்கு வன்மையில்லை.

முதலியார் என்ன என்னவோ யோசித்தார். பண்டார சந்நிதிகளிடம் சொல்லிக் கல்யாணத்தை முடித்துவிட வேண்டுமென்று தீர்மானித்தார். அவருக்கு ஞானாசிரியர் உள்ளக்கிடை தெரியாதே !

ஒரு நல்ல நாள் பார்த்து ஞானமங்கலம் சென்றார். பழம், புஷ்பம், வெற்றிலை பாக்கு நிறைந்த தாம்பாளத்துடன், பண்டார சந்நிதி தனியே இருக்கும் சமயம் பார்த்துப் புகுந்தார். அவர் முன்னிலையில் வைத்துப் பாதத்தில் விழுந்து வழிபட்டார். ஞானாசிரியர் அவர் நெற்றியில் திருநீறு இட்டு, “என்ன விசேஷம்? இந்தத் தடபுடலுக்கு என்ன காரணம்?” என்று கேட்டார்.

"கல்யாணம்."

"யாருக்கு?"

"என்னுடைய குமாரி காந்திமதிக்கு."

"அப்படியா! சந்தோஷம். பையன் நன்றாகப் படித்தவனா? சைவ சாஸ்திரப் பற்றுள்ளவனா? குழந்தைக்கு ஏற்ற வரனா என்று பார்த்துக் கொடுங்கள். நல்ல இடத்தில் சேர்க்க வேண்டும். குழந்தை நல்ல புத்தி சாலி. மனசுக்கு ஏற்ற மணாளனை அடைந்து தீர்க்காயுசாக வாழவேண்டும்."

முதலியார் மெதுவாகப் பேச்செடுத்தார்; "சந்நிதானத்தின் ஆசீர்வாதத்தைச் சிவபெருமான் நிறைவேற்றியிருக்கிறார். பிள்ளைக்கும் பெண்ணுக்கும் மனப்பொருத்தம் பூரணமாக இருக்கிறது. ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள். பொருத்தமான சம்பந்தமென்பது சந்நிதானத்துக்கே தெரியும்."

"பிள்ளை யார்?"

"நம் சிவஞானந்தான்."

பண்டார சந்நிதி இடிவிழுந்தவர்போல் ஆனார். "சிவஞானமா!" மேலே பேச்சு எழவில்லை. உடம்பெல்லாம் வேர்த்துவிட்டது. சிறிது நேரம் பிரமிப்பில் ஆழ்ந்தார்.

பழம் நழுவிவிட்டது. பண்டார சந்நிதிக்குக் கிடைக்கவில்லை. ஆனால் என்ன? அது வீணாகவில்லை. பாலுடன் சேர்ந்துவிட்டது.